REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 16 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 40 | Thursday 16, February, 2023 | 16 பக்கங்கள் | 50/-

18 வருடங்களுக்கு முன் இடம்பெற்ற படுகொலை

OIC உட்பட 04 பொலிஸாருக்கு நீதிமன்றம் மரண தண்டனை

ஹம்பாந்தோட்டை மேல்நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

திருட்டுச் சம்பவ சந்தேக நபரை வீட்டில் வைத்து சுட்டுக்கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கே மரண தண்டனை விதிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கொலைச் சம்பவமொன்றுடன் தொடர்புபட்டுள்ள பொலிஸ் OIC ஒருவர் உட்பட நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஹம்பாந்தோட்டை மேல்நீதிமன்றம் நேற்று மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. 18 வருடங்களுக்கு முன்னர் இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு மரண தண்டனை தீர்ப்புக்குள்ளானவர்களில் ஹுங்கம பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியான 58 வயதுடைய அரங்வல கமகே உபுல், திஸ்ஸமகாராமையைச் சேர்ந்த 63 வயதான ஜயந்தி வாசகே சுசில் ஜயபந்து, ஹம்பாந்தோட்டை துறைமுக பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்த 51 வயதான சரம்பகே சிறில் மற்றும் திஸ்ஸமகாராமை பொலிஸில் பணிபுரிந்த 46 வயதான பத்திராஜ முதியன்சலாகே ரஞ்சித் சுசந்த ஆகியோருக்கே மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் திகதி திஸ்ஸமகாராமை தெபரவெவ மாத்தறவத்த பிரதேசத்தில் மூன்று திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் 06

ஜேர்மன் MP பீட்டர் ராம்சோர் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

ஜேர்மன் பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் ராம்சோர் (Peter Ramsauer) (14) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜேர்மன் இலங்கை இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பீட்டர் ராம்சோர், நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

பீட்டர் ராம்சோரை அன்புடன் வரவேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரு நாடுகளுக்குமிடையிலான கடந்த கால 06

வெள்ளி, சனி கிழமைகளில்

ரூபவாஹினி, ஐ.ரி.என்னில் சிறந்த சிங்களத் திரைப்படங்கள்

லோரன்ஸ் செல்வநாயகம்

சிங்கள சினிமாவின் உன்னதத்தை பாதுகாக்கும் வகையிலும் அதன் முன்னேற்றத்தைக் கருதியும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கௌரவத்திற்கும் விருதுகளுக்கும் பாத்திரமான சினிமா திரைப்படங்களை காட்சியிடும்வகையில் விசேட 06

சுதந்திர தினத்தை முன்னிட்டு கண்டியில் குடியரசு பெரஹரா

19 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

கண்டியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ தலதா மாளிகையில் 34 ஆண்டுகளுக்குப் பிறகு குடியரசுப் பெரஹரா இடம்பெறவுள்ளது.

ஐந்தாவது முறையாக நடைபெறும் இக்குடியரசு பெரஹரா வீதிஉலா, எதிர்வரும் (19) கண்டி நகரில் 06

நுகேகொடையில் புதிய ரயில் முன்பதிவு நிலையம்

அமைச்சர் பந்துல ஆரம்பித்து வைத்தார்

லோரன்ஸ் செல்வநாயகம்

நுகேகொடை ரயில் நிலையத்தில் ஆசனப் பதிவுக்கான வசதிகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் மேற்படி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது பிரவேசச்சீட்டை அமைச்சர் பந்துல குணவர்தன 06

உலக மக்களை முட்டாளாக்கும் பழ. நெடுமாறனின் செயற்பாடு

கருணா அம்மான் ஆவேசமாக அறிக்கை

வடக்கில் நடந்த இறுதிப்போர்க்களத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ள கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன், பழ நெடுமாறன் புலிகளின் தலைவர் உயிருடன் உள்ளதாக கூறி உலக மக்களை முட்டாளாக்குவதாக தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் 06

இந்திய பிரதமரின் முதன்மை செயலருடன் மிலிந்த சந்திப்பு

இருநாட்டு உறவுகள் குறித்து விரிவாக பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் தொடர்பில் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய பிரதமரின் முதன்மை செயலாளர் பிரமோட்குமார் மிஸ்ராவை சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு புதுடில்லியில் நடைபெற்றுள்ளது. எனினும் 06

நிதி கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம் எழுதவுள்ள ஆணைக்குழு

வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு மேலும் 360 மில். தேவையென அறிவிப்பு 03

இந்திய வீசா வழங்கும் IVS நிறுவனம் தற்காலிகமாக மூடல்

விண்ணப்ப முன்பதிவுகளை மீள் பதிவு செய்யுமாறு கோரிக்கை 03

மக்களின் உணர்வுகளுக்கு நிச்சயம் மதிப்பளிக்கப்படும்

வெடுக்குநாறி மலைக்கு விஜயம் செய்த அமைச்சர் டக்ளஸ் உறுதி

முல்லைத்தீவு, வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பூஜை வழிபாடுகளை மேற்கொள்வது உறுதிப்படுத்தப்படுமென தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இப்பகுதியிலுள்ள தொல்லியல் சின்னங்கள் மற்றும் இயற்கை வளங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் அனைவரின் செயற்பாடுகள் அமைவது அவசியம், எனவும் தெரிவித்துள்ளார். பாரம்பரியமாக இந்துக்களால் வெடுக்குநாறி மலையிலுள்ள 06

தேர்தல் பிரசாரங்களுக்கு அரச நிறுவனங்களில் தடை

மீறி நடந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சார்பாக எந்தவொரு அரச நிறுவனத்திலும் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு அரச நிறுவனங்களை பயன்படுத்தக் கூடாதென்பது தொடர்பாக ஆணைக்குழு (13) ஊடக அறிக்கை ஒன்றை 06

நெடுமாறனின் கருத்து மீண்டும் இனவாதத்துக்கு வித்திடும்

சுரேஷ் பிரேமச்சந்திரன் கடும் கண்டனம்

விடுதலைப் புலிகளுடன் நீண்டகால தொடர்பைக் கொண்டுள்ள பழ. நெடுமாறன், புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்த கருத்தால் மீண்டும் இனவாதம் தோன்றலாமென சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். அவரது கருத்து உண்மையாக இருந்தாலும், அதன் 06

யாழ். நீதிமன்றத்தில் ஆஜராக சிங்களத்தில் அழைப்பாணை

ஸ்ரீதரன் எம்.பி. கையேற்க மறுப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜராகும்படி ஸ்ரீதரன் எம்பிக்கு சிங்களத்தில் கடிதம் அனுப்பப்பட்டதால், அதனை ஏற்க மறுத்த அவர் கடிதத்தையும் திருப்பி அனுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் 06

தெற்கு அதிவேக சாலையில் நேற்று கோர விபத்து

திருக்கோவிலை சேர்ந்த சகோதரர்கள் பலி

சாரதியுடன் பெண்ணொருவரும் படுகாயம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் 35.9 கிலோமீற்றர் மைல் கல்லருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த லொறியில், காரொன்று மோதியதில் இருவர் உயிரிழந்தனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (14) இரவு இடம்பெற்றதாக பொலிஸார் 06

அதிதுரித
Dialog HOME BROADBAND இடமிருந்து
வீட்டிற்கு Wi-Fi ரீலோட்
வீட்டிற்கு Wi-Fi RELOAD
இணைப்புடன் ரவுட்டர் ரூ.5990/-
புதியது
மாதத்திற்கு 20GB ரூ.540/-
2 வாரங்களுக்கு 10GB ரூ.299/-
செயற்படுத்தல் ரீலோட் அல்லது MyDialog App மூலம்
Dialog
எதிர்காலம் இன்றே.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam

வவுனியாவில்

மத்தியதர வர்க்கத்தினரின் காணிகளை குடியிருப்பாளர்களுக்கு வழங்க நடவடிக்கை

திலீபன் எம்.பி தெரிவிப்பு

வவுனியா விசேட நிருபர்

வவுனியாவிலுள்ள மத்திய தர வர்க்க காணிகளில் தற்போது குடியிருப்பவர்களுக்கே அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பில் நேற்று (15.02) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் யுத்தம் இடம்பெறுவதற்கு முன்னர் மத்திய தர வர்க்கத்தினருக்கு விவசாய தேவைகளுக்காக காணிகள் வழங்கப்பட்டிருந்தன. அதில் அதிகளவான காணிகள் அவர்களால் கைவிடப்பட்டிருந்தன. இதனைதொடர்ந்து இந்நிலங்களில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேறி வாழ்வாதார பயிர்செய்கைகளில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

ஆனாலும், அவை மத்தியதர வர்க்கத்திற்கு வழங்கப்பட்ட காணிகள் என குடியிருக்கும் மக்களுக்கு ஆவணங்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை. இதனை கடந்த பல வருடங்களாக அப்பகுதி மக்கள் அரச அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போதும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்நிலையில், மக்களின் கோரிக்கை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு என்னால் கொண்டு வரப்பட்டிருந்தது. இதுதொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதாகவும், விரைவில் ஆவணங்கள் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி செயலாளர் எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வனவளத்திணைக்களங்களால் எல்லையிடப்பட்டுள்ள மேய்ச்சல் தரை மற்றும் வயல் நிலங்களையும் எனது கோரிக்கைக் கமைவாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக செயலாளரால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் விரைவில் பல மக்களது காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதுடன், ஆவணங்களும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

செட்டிகுளத்தில் மின்சாரத்தில் சிக்கி 30 வயது மதிக்கத்தக்க யானை பலி

வவுனியா விசேட நிருபர்

செட்டிகுளம், முசல்குத்தி வீதியில் மின்சாரம் தாக்கி 30 வயது மதிக்கத்தக்க யானையொன்று நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, செட்டிகுளம், முசல்குத்தி பகுதியிலுள்ள வயல் நிலங்களைச் சூழ அமைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கிய காட்டு யானையொன்று அப்பகுதியில் விழுந்து இறந்துள்ளது. அப்பகுதிக்கு சென்றவர்கள் இதனை அவதானித்த நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு சென்று யானையை பார்வையிட்ட போது யானை உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது. வயல் நிலங்களுக்கு வைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே யானை உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், யானையின் மரணம் தொடர்பில் கால்நடை வைத்திய அதிகாரியால் உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. 30 வயது மதிக்கத்தக்க ஆண் யானையே இவ்வாறு இறந்துள்ளது. இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வேட்புமனு நிராகரிப்பு

உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை

மன்னார் பிரதேச சபை தேர்தலுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பு மனுவை தெரிவத்தாட்சி அலுவலர் நிராகரித்ததை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கில், இடைக்கால தடை உத்தரவைப் பிறப்பித்ததோடு, அதனை தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்குமாறும் உயர்நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (14) உத்தரவு பிறப்பித்தது. வழக்கு விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது .

இவ்வழக்கு நீதியரசர்களான முர்து பெர்ணாண்டோ,யசந்த கோதாதொட, ஈ.ஏ.ஜீ.ஆர் அமரசேகர ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், எம்.பி மனுதாரர்கள் தரப்பில் வாதங்களை முன்வைத்தார்.

மனுதாரர்களான முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், முன்னாள் மன்னார் பிரதேச சபை தவிசாளர், முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் எம்.ஐ.எம். இஸ்ஸதீன், கட்சியின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் இஸ்மத் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி நஸ்ரினாவின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உடன் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம் எம்.பி (சட்டமுதுமாணி),சட்டத்தரணி ஹுனைஸ் பாருக் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் பிரஸ்தாப முஸ்லிம் காங்கிரஸின் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், ஆட்சேபனை தெரிவிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் அல்லது ஐந்து நாட்களின் பின்னர் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டதாகவும் சுட்டிக் காட்டி ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் வாதங்களை முன்வைத்தார். தேவையானதை விட வேட்பாளர் எண்ணிக்கை குறைவாக இருக்கக்கூடாது என்றிருக்கத்தக்கதாக, இரண்டாவது பட்டியல் போனஸ் வேட்பாளர்களின் எண்ணிக்கையில் ஒருவர் மேலதிகமாக இருந்ததாக பின்னர் குறிப்பிட்டு இந்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து சுமந்திரன் வாதிட்டார். அத்துடன் தேர்தல் திணைக்களத்திற்காகவும், சட்டமா அதிபர் திணைக்களத்திற்காகவும் முன்னிலையான சட்டத்தரணிகளினதும் வாதங்களைச் செவிமடுத்த பின்னர் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம்,அந்த தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்து வழக்கை மீண்டும் 21ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

அரசின் நெல் கொள்வனவுத் திட்டம்

விவசாயிகள் மாவட்ட கமநல அபிவிருத்தி காரியாலயத்தை தொடர்புகொள்ளவும்

மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப்பணிப்பாளர் அன்ரனி மரேன்குமார்

(தலைமன்னார் விசேட நிருபர்)

அரசின் சுற்று நிருபத்துக்கமைவாக நெல்லினை வழங்க தயாராகவுள்ள விவசாயிகள் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி காரியாலயத்தை தொடர்பு கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவிப் பணிப்பாளர் அன்ரனி மரேன்குமார் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசின் சுற்று நிருபத்துக்கமைவாக குறிப்பிட்ட விலைக்கு கொள்வனவு செய்யவிருப்பதால் நெல்லினை வழங்க தயாராகவுள்ள விவசாயிகள் உடனடியாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி காரியாலயத்தை தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெல் அறுவடைக்கான நியாயமான விலையை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு பெரும்போக அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2023.02.09 ஆம் திகதி சுற்றுநிருபம் இல DFD 20231 இற்கு அமைவாக மாவட்ட செயலாளர் தலைமையில் சிறிய மற்றும் நடுத்தரளவு அரிசி ஆலை உரிமையாளர்கள்,கூட்டுறவு சங்கங்கள் மூலம் மன்னார் மாவட்டத்தில் 'நாடு' இன நெல்லினை மட்டுமே நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கபட்டுள்ளது.

இத்திட்டத்தில் நெல்லினை வழங்குவதற்கு தயாராகவுள்ள விவசாயிகள் இது பற்றிய தகவல்களை உடனடியாக மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட காரியாலயத்திற்கு (0232222162) திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9.00 தொடக்கம் மாலை 4.00 க்குள் பதிவு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

புகைத்தல், மதுசாரப் பொருட்களின் வரியை உயர்த்துமாறு கோரிக்கை

கோப்பாய் குறூப் நிருபர்

புகைத்தல் மற்றும் மதுசாரப் பொருட்களின் வரியை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம்(14) செவ்வாய்க்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் வடக்கு கிழக்கு சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ரஹீம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் ஏற்கனவே அரசாங்கத்திற்கு புகைத்தல் மற்றும் மதுசாரப் பொருட்களின் வரியை உயர்த்துவதற்கு விஞ்ஞான ரீதியான வரிகொள்கையை நடைமுறைப்படுத்துமாறு தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றது. புகையிலை நிறுவனம் என்ற பெயரில் இயங்கி வரும் 84 வீதமான பங்குகளை பன்னாட்டு நிறுவனங்களான பிரித்தானியா, அமெரிக்கா புகையிலை நிறுவனங்களே தம்வசம் வைத்துள்ளமையால் நாட்டின் வருமானம் பன்னாட்டு நிறுவனங்களுக்கே அதிகம் செல்கிறது.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரி விதிப்பு கொள்கை காரணமாக வைத்தியர்கள் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பொறியியலாளர்கள், மற்றும் வங்கியலாளர்கள் அதிர்ச்சியடைந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேறுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி அனுஷ்டானம்; விசேட கலந்துரையாடல்

(மன்னார் குறூப், தலைமன்னார் விசேட நிருபர்கள்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மகா சிவராத்திரி நிகழ்வு குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) மதியம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள மஹா சிவராத்திரிக்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இக்கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம், துறைசார் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். அரச தனியார் போக்குவரத்து சேவை, குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

மேலும் பாதுகாப்பு,உணவு உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டதோடு,சகல ஒழுங்குகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த காலங்களை விட இம்முறை இலட்சக்கணக்கான மக்கள் நாடளாவிய ரீதியில் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறமையால் அதற்கான முன் ஆயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

நெல் அறுவடை இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து; இருவர் படுகாயம்

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் ஏ 9 வீதியில் நேற்று அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நெல் அறுவடையை முடித்து விட்டு வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இயந்திரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பளைதம் பகாமம் பகுதியைச் சேர்ந்த 46 வயதான வசந்தகுமாரி மற்றும் 23 வயதான ஜெனிஸ்ரன் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தொழிற்சந்தைக்கான முன்னோடிக் கலந்துரையாடல்!

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி மாவட்ட தொழிற்சந்தைக்கான முன்னோடிக் கலந்துரையாடலானது நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனுக்கும், யூலிட் (youlead) நிறுவன பிரதிநிதிகளுக்கிடையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் எதிர்வரும் 23ஆம் திகதி மாவட்ட மட்டத்தில் பாரிய தொழிற் சந்தை (mega career fair) நிகழ்வொன்றினை மாவட்டச் செயலக வளாகம் 2 இல் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான உள் நாட்டு, வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான கற்கை நெறிகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கான தொழிற் சந்தைக்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

சமுர்த்தி குடும்பங்களிலிருந்து இளைஞர் யுவதிகளை தொழிற்பயிற்சிக்கு உள்ளீர்ப்பதனூடாக அவர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி)திரு.ந.திருலிங்கநாதன், யூலிட் பங்குதாரர் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கான பணிப்பாளர், யூலிட் நிறுவனத்தின் தொழில் வழிகாட்டலுக்கான இணைப்பாளர், யூலிட் வட கிழக்குக்கான இணைப்பாளர்கள், திறன்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர், மனிதவள மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 16 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.11
லுஹர்	12.26
அஸர்	03.47
மஃரிப்	06.22
இஷா	07.33

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் மாசி 04

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

சிறு போகத்தில் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் TSP உரம்

சந்தை விலையை விட குறைவாக விநியோம்

விவசாயிகளுக்குத் தேவையான Triple Phosphate Fertilizer உரம் எதிர்வரும் போகத்தில் தற்போதைய சந்தை விலையை விட குறைந்த விலையில் வழங்கப்படவுள்ளது. வர்த்தமானி அறிவித்தலூடாக இதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். விவசாய பிரச்சினைகள் தொடர்பாக கடந்த (13) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இக் கலந்துரையாடலில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, உணவு பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் கலாநிதி சுரேன் படகொட ஆகியோரும் கலந்துகொண்டனர். பயிர் மஞ்சளாகும் நோயைத் தடுப்பது, உரமிடுதல் யுக்திகள் மற்றும் அரிசி விற்பனையிலுள்ள சிக்கல்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

06

நிதி கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம் எழுதவுள்ள ஆணைக்குழு

வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு மேலும் 360 மில். தேவையென அறிவிப்பு

உள்ளூராட்சித் தேர்தலுக்கு அவசியமான நிதியை வழங்குமாறு கோரி நேற்று நிதி அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்ப தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த 300 மில்லியன் ரூபா அவசியமென முன்னர் நிதி அமைச்சுக்கு அறிவித்தாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இதுவரை 100 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் எதிர்காலத்தில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வருமாறு அவர்களுக்கு அறிவித்துள்ளதாக நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். இதேவேளை, வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகளுக்காக 400 மில்லியன் ரூபா அவசியமென அரச அச்சகத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார். எனினும், அந்த நிதியில் 40 மில்லியன் ரூபா மாத்திரமே கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளதுடன்,மேலும் 360 மில்லியன் அவசியமாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தற்போது வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டாலும் விநியோக பணிகளுக்கு 3, 4 நாட்கள் செல்லுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்

பௌத்த மதத்தின் வரலாறு தெரியாமல் பேசிவரும் விக்கி

மல்வத்து பீடத்தின் உப நாயக்க தேரர் சாடல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் பௌத்த வரலாறு தொடர்பில் தெளிவில்லாத நிலையிலேயே, கருத்துக்களை முன்வைத்து வருதாக மல்வத்து பீடத்தின் உப நாயக்க தேரர் திம்புல் கும்புரெ ஸ்ரீ விமலதம்ம தேரர் தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் புத்த பெருமான் கூட அக்காலத்தில் ஆட்சியிலிருந்த மன்னர்களுக்கு உபதேசங்களை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். எனவே, இந்த வரலாற்றுப் பின்னணிகளின் புரிதலுடன் விக்னேஸ்வரன் எம்.பி. பேச வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

06

ADB வங்கியின் நிதி உதவியை விவசாயிகளுக்கு வழங்குவதில் பாரிய முறைகேடுகள்

ஆராய்ந்து நிவர்த்திசெய்ய விசேட குழு நியமனம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிதி உதவியை வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுகையில் இடம்பெற்ற தவறுகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதுபற்றிய தகவல்களை தவறாக வழங்கிய பிரதேச கமநல சேவை அதிகாரிகளுக்கு எதிராகவே இந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கமத்தொழில் திணைக்களமே இதுகுறித்த நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளது. இந்நிதியுதவிகள், மீளப்பெற்றுக் கொள்ளாத வகையில் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் மேற்படி விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்குவதற்கு 800 கோடி ரூபா வழங்கப்பட்டது. இந்நிலையில் அதனை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் வழங்குவதற்கு அதிகாரிகள் தவறியுள்ளனர்.இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப் போவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடானது அதிகாரிகள் குழுவொன்றினால் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையென்றும் அந்தவகையில் இதுவொரு சீர்குலைப்பு நடவடிக்கை யென தெரியவருவதாகவும் கமநலசேவை ஆணையாளர் எச். எம்.எல்.ஏ. அபேரத்ன

தெரிவித்துள்ளார். கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள வங்கிக் கணக்குகளில் 38%வீதமானவை தவறான கணக்கு இலக்கங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதனை நிவர்த்திசெய்வதற்காக தற்போது கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் 20 பேர்கொண்ட குழுவொன்றை ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய விமானங்களின் வருகையால் மத்தள விமான நிலையம் மீண்டும் பரபரப்பானது

மத்தள மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தை நோக்கி ரஷ்ய விமானங்கள் சேவைகளை ஆரம்பித்துள்ளதால், பல வருடங்களின் பின்னர் மத்தள விமான நிலையம் மீண்டும் பரபரப்பாக மாறி வருகிறது.

கடந்த சில நாட்களாக ரஷ்ய விமான சேவைக்கு சொந்தமான 'ரெட் விங்ஸ்' மற்றும் ஏனைய ரஷ்ய விமானங்கள் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை எண்ணூறு எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது எதிர்கால சந்ததியினருக்காக நீர்வளம் பாதுகாக்கப்பட வேண்டும்

அமைச்சர் ஜீவன் தொண்டமான்

நீர் முகாமைத்துவம் தொடர்பில் தற்போது நிலவும் பிரச்சினைகளால், நீர் வீண்விரயமாவதுடன், நீர் மாசடைதலும் அதிகரித்துள்ளது. எனவே, எமது எதிர்கால சந்ததியினருக்காக நீர்வளத்தை பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகுமென நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். தேசிய நீர் கொள்கைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் மகாவலி அதிகார சபையில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, நீர்வழங்கல் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆலோசனை வழங்கினார். இதன்போது, தேசிய நீர் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு உரிய தரப்பினருக்கு பொறுப்புக்களை வழங்க தீர்மானம் எடுக்கப்பட்டது.

06

மின் கட்டணத்தை 36% அதிகரிக்கும் யோசனைக்கு உள்ளேயே எதிர்ப்பு

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மின் கட்டணத்தை 36 வீதத்தால் அதிகரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு, பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிலுள்ள மூவர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக,இந்த யோசனையை சமர்ப்பித்த ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மின்சார சபை தெரிவித்துள்ள 66 வீத மின்கட்டண அதிகரிப்புக்கு,இம்மூவரும் அனுமதியளித்துள்ளனரென்றும் ஆணைக்குழு தலைவர் குறிப்பிட்டார்.

இதுபற்றி தலைவர் மேலும் தெரிவித்ததாவது, மின்சார சபை, வருடாந்தம் 287 பில்லியனை மேலதிக சுமையாக மின்கட்டண பாவனையாளர்களுக்கு சுமத்த மேற்கொண்ட யோசனையை மீளாய்வு செய்து, அதனை 142 பில்லியன் என்ற சாதாரண மட்டத்துக்கு கொண்டுவருவது தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அதற்கான யோசனையையும் ஆணைக்குழுவின் தலைவரென்ற வகையில், நான், முன்வைத்திருந்தேன். எனினும், ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் மூவரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு செயற்பட்டுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் சட்டத்துக்கும் மின்சார சபையின் சட்டத்துக்கும் முரணாக செயற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் தேசிய சபை கூடிய சந்தர்ப்பத்தில், மின்கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கான கால அவகாசத்தை வழங்கியிருந்தது.

அந்த வகையில், பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவும் தமது யோசனையை தேசிய சபைக்கு அறிவித்திருந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வீசா வழங்கும் IVS நிறுவனம் தற்காலிக மூடல்

விண்ணப்ப முன்பதிவுகளை மீள் பதிவு செய்ய கோரிக்கை

பாதுகாப்பு காரணங்களுக்காக கொழும்பிலுள்ள விசா விண்ணப்ப நிலையம், மறு அறிவித்தல் வரை மூடப்படுமென இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. உயர்ஸ்தானிகராலயத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பாதுகாப்புக் காரணத்தினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே முன்பதிவு செய்தவர்கள் ஐவிஎஸ் பிரைவேட் லிமிடெட் உடனான தங்கள் சந்திப்புகளை மறுபதிவு செய்யுமாறு இந்திய உயர் ஸ்தானிகராலயம் கேட்டுக் கொண்டுள்ளது.

இருப்பினும் அவசர சேவையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாமென அறிவித்துள்ளது.

தூதரகம் மற்றும் விசா தேவைகள் குறித்தது மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 011 232 6921 011 2421605,011242 2788,0112327587 என்ற தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்த முடியும்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான நிதி தொடர்பில் நிதியமைச்சு செயலாளரை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த தீர்மானம்

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபை தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதியை பெற்றுக்கொ ள்ளும் நோக்கில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுடன் விசேட பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாகவும் அவரை அதற்காக தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்க தீர்மானித்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான நிதியைப் பெற்றுத்தருமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நிதியமைச்சை கோரியுள்ளது. இந்நிலையில் கோரப்பட்டுள்ள நிதி இதுவரை முழுமையாக கிடைக்கப்பெறவில்லை. இதனால் நிதியமைச்சின் செயலாளரை அழைத்து இது தொடர்பில் ஆணைக்குழு பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தேர்தல்கள் ஆணைக்குழுவானது உள்ளூராட்சி சபை தேர்தல் நடவடிக்கை செலவினங்களுக்காக 300 பில்லியன் ரூபாவை நிதியமைச்சிடம் கோரியுள்ள நிலையில் இதுவரை 100 பில்லியன் ரூபா நிதியே ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தல் நடவடிக்கை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கட்டம், கட்டமாக தேர்தல் ஆணைக்குழுவினால் நிதியமைச்சிடம் நிதி கோரப்பட்டுள்ளது. அதற்கிணங்க

06

மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரை விற்பனை

பதுளையில் வைத்தியர் கைது

பதுளையில் பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரைகளை விற்பனை செய்த வைத்தியர் ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். பதுளை பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் 44 வயதுடைய மருத்துவர் ஒருவரையே பொலிஸார் கைது செய்தனர்.

அனுமதிப்பத்திரமின்றி போதையை ஏற்படுத்தக் கூடிய மாத்திரைகளை வைத்திருந்தாரெனவும், அவரிடமிருந்து 145 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸாரிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே, இக்கைது இடம் பெற்றது.

நாணய மாற்று

நாணயம்	வாங்கும் விலை	விற்பனை விலை
அவுஸ்திரேலியா டொலர்	247.01	258.31
கனடியன் டொலர்	266.36	277.87
யூரோ	384.45	399.49
ஜப்பான் யென்	2.7062	2.8094
சிங்கப்பூர் டொலர்	269.78	280.64
ஸ்டேலிங் பவுன்ஸ்	431.81	447.74
சுவிஸ் பிராங்க்	384.84	402.89
அமெரிக்க டொலர்	360.09	370.26

மத்திய கிழக்கு	குறித்த விலை		குறித்த விலை
பஹ்ரின் டினார்	960.04	கட்டார் ரியால்	99.31
குவைத் டினார்	1,183.80	சவூதி ரியால்	96.47
ஓமான் ரியால்	940.10	ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம்	98.54

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 04ஆம் நாள் வியாழக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 24

குறள் தரும் சிந்தனை

அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி

நமது குற்றத்தை உணர்ந்து அதை நீக்காமல் உடலை மறைக்க மட்டும் உடை அணிவது மடமையாகும்.

பாரம்பரிய விவசாயத்தை மீட்டெடுப்பது நம் கடமை

இலங்கை முன்னொரு காலத்தில் விவசாயத்தில் அபிவிருத்தியடைந்த நாடாக விளங்கியது. நெல் உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாகவும் இலங்கை அக்காலத்தில் விளங்கியது. இலங்கையில் ஆட்சியிலிருந்த அரசர்கள் தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த அரசர்களுக்கு அவர்களது நாட்டின் பஞ்சத்தைப் போக்குவதற்காக அரிசியை வழங்கி உதவியதாக வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான உணவு சோறு ஆகும். இன்றும் கூட இலங்கை மக்களின் பிரதான உணவு அதுவாகவே உள்ளது. ஆனால் நெல் உற்பத்தியில் எமது நாடு தற்போது தன்னிறைவு அடைந்த நாடு என்று கூற முடியாதுள்ளது. வேளாண்மைச் செய்கையில் போதிய கவனம் செலுத்தப்படாத காரணத்தினால், எமது நாட்டில் நெல் உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைந்து சென்று விட்டது.

பிறநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலைமைக்கு இலங்கை தள்ளப்பட்டு விட்டது. இந்தியா, பாகிஸ்தான் உட்பட சில நாடுகளில் இருந்து எமது நாடு அரிசியை இறக்குமதி செய்கின்றது. அதுமாத்திரமன்றி பாஸ்மதி, பொன்னி போன்ற அரிசி வகைகளும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன.

இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியான அரிசி வகைகளை விட இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசி வகைகள் மீது எமது மக்களுக்கு அதிக நாட்டம் காணப்படுகின்றது. எனவே வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாததாக உள்ளது. நவீனவகை உணவுகளுக்கு எமது நாட்டு மக்களில் அநேகமானோர் பழக்கப்பட்டு விட்டதனால், அவ்வாறான அரிசியை இறக்குமதி செய்து விற்பதற்கு வர்த்தகர்களும் தயாராக உள்ளனர்.

உள்நாட்டு அரிசி உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள் குறித்து ஆராயப்படுவது இங்கு அவசியமாகும். கடந்தகால அரசாங்கங்கள் திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததன் காரணமாக இறக்குமதிக்கான கதவுகள் திறந்து விடப்பட்டன. இறக்குமதிப் பொருட்களில் அரிசியும் ஒன்றாகி விட்டது. பிறநாடுகளில் இருந்தெல்லாம் விதம் விதமான அரிசி வகைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டன.

இதன் காரணமாக உள்நாட்டு நெல் உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. விவசாயிகள் ஒருவித மனவிரக்திக்கு உள்ளாகத் தொடங்கினர். விவசாயத்தில் ஈடுபடுவதென்பது வருமானம் குன்றிய தொழில் என்று அவர்கள் உணரத் தலைப்பட்டனர். அத்துடன் விவசாயம் என்பது சமூகத்தில் கௌரவம் குன்றிய தொழில் என்றும் இளைஞர்கள் நினைக்கத் தொடங்கினர்.

விவசாயத் தொழில் என்பது சமூகத்தில் மதிப்பு மிக்க தொழிலாக விளங்கிய யுகம் படிப்படியாக மாற்றமடையத் தொடங்கியது. விவசாயத்தை விட அரசாங்கத் தொழிலே மிகவும் மதிப்பு வாய்ந்த தொழில் என்ற மாயைக்குள் எமது நாட்டு இளைஞர்கள் சிக்குண்டனர். அதன் காரணமாக கிராமங்களில் இருந்து நகரத்தை நோக்கி இளைஞர்களின் படையெடுப்பும் ஆரம்பமானது. நகரங்களில் தொழில்வாய்ப்புத் தேடும் முயற்சியில் இளைஞர், யுவதிகள் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினர்.

நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களும் விவசாய அபிவிருத்தியில் நாட்டம் கொள்ளத் தவறி விட்டனர். விவசாயக் குளங்களைப் புனரமைப்பு செய்வதில் அக்கறை செலுத்தப்படவில்லை. விவசாய நிலங்கள் கைவிடப்படத் தொடங்கின. வேளாண்மைச் செய்கை நிலங்களில் மணல் நிரப்பப்பட்டு, அந்நிலங்களில் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. இலங்கையின் பாரம்பரியத் தொழிலான விவசாயம் படிப்படியாக வீழ்ச்சி நிலைமைக்கு உள்ளானது. அந்நிய தேசங்களிலிருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமைக்கு நாம் உள்ளானோம்.

இலங்கையின் பாரம்பரிய விவசாயத்தை அபிவிருத்தி செய்து மீண்டும் முன்னைய நிலைமைக்குக் கொண்டுவர வேண்டிய தேவை தற்போது உருவாகியுள்ளது. நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவுவதாலும், அரிசி உட்பட தானியங்கள் பலவற்றின் விலைகள் உயர்ந்துள்ளதாலும் நெல் உற்பத்தி மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை தற்போது உள்ளது.

நெல் உற்பத்திக்கு தற்போது மிகவும் அவசியமானது இரசாயனப் பசளைகள் ஆகும். சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய அவசியத்தில் நாம் உள்ளோம். எனவே இரசாயனப் பசளைப் பாவனையும் தவிர்க்க முடியாததாகும். இரசாயனப் பசளைப் பாவனையை முற்றாகத் தடை செய்ததன் காரணமாகவே இலங்கையில் விவசாயம் வீழ்ச்சிக்கு உள்ளானது என்பதையும் மறுப்பதற்கில்லை.

விவசாயத்துக்குத் தேவையான இரசாயனப் பசளையைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கம் தற்போது அக்கறை செலுத்தி வருகின்றது. ஆகவே எமது நாட்டின் இழந்து போன விவசாயத்தை மீளப் பெற்றெடுப்பதில் இலங்கை மக்கள் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியமாகின்றது.

editor.tkn@lakehouse.lk

கராச்சி வர்த்தக மையத்தில் கடல்சார் வளங்களின் பெறுமதியை சர்வதேச மயப்படுத்திய கண்காட்சி

'அமைதிக்கான ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் பாகிஸ்தான் கடற்படையினர் ஏற்பாடு செய்த அமான் 23 பன்னாட்டு கடற்படைகளின் பயிற்சிக்கு இணையாக, கடல்சார் சர்வதேச கண்காட்சியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

பாகிஸ்தான் கடல்சார் விவகார அமைச்சின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் கடற்படையினர் ஏற்பாடு செய்த இக்கண்காட்சி கராச்சி எக்ஸ்போ மையத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது.

'அமான் 23 பன்னாட்டு பயிற்சியில் பங்குபற்றியுள்ள 50 நாடுகளது துறைசார் நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்குபற்றியுள்ளதாக பாகிஸ்தான் கடற்படையின் பொது உறவுகள் பணிப்பாளர் கப்டன் ரஷீட் நஸீர் சௌத்ரி தெரிவித்தார்.

133 கூடாரங்களைக் கொண்டமைந்திருந்த இச்சர்வதேசக் கண்காட்சியை பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரியும், கடற்படைத் தளபதி நியாஸியும் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டு ஆரம்பித்த வைத்தனர்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய கடற்படைத் தளபதி அட்மிரல் எம். அம்ஜத் கான் நியாஸி, 'பாகிஸ்தானின் கடல்சார் சிந்தனையை வடிவமைப்பதில் எமது கடற்படையினர் முக்கிய பங்குதாரராக உள்ளனர். இதன் ஊடாக நீலப் பொருளாதாரத்தில் பயன்படுத்தப்படாதுள்ள கடல்சார் திறன்களைப் பாவிப்பதற்குத் தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வானது, தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களை ஒருங்கிணைத்து புத்தாக்க சிந்தனைகளை முன்வைப்பதற்கான சந்தையை உருவாக்கும். அத்தோடு கடல்சார் ஆற்றல்மிக்க வாய்ப்புக்களை வெளிப்படுத்தவும் வழிவகுக்கும்' என்றார்.

அத்தோடு 'சமுத்திரங்களையும் கடல்சார் வளங்களையும் பாதுகாத்தல், அவற்றை நிலைபேறானதாகப் பயன்படுத்துதல், இயற்கை வளங்களைச் சுரண்டுதல், கூட்டு மற்றும் பகிரப்பட்டுள்ள சுபீட்சத்திற்கான வளர்ச்சியைத் தூண்டுதல் என்பவற்றில் எமது உறுதிப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்துவதற்கான ஒரு தளமே

இக்கண்காட்சி' என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

கடல்சார் வளங்களைப் பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மாத்திரமல்லாமல், அவற்றின் பொருளாதாரப் பெறுமானங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்காகக் கொண்டதாக இக்கண்காட்சி அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் கடல்சார் பரப்பில் இடம்பெறும் போதைப்பொருள் மற்றும் ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளையர் அச்சுறுத்தல், மனித ஆட்கடத்தல், பயங்கரவாத செயற்பாடுகள் போன்ற

பாரம்பரியமற்ற குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படும் ஆயுதத்தளவாடங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

அதேநேரம் சரக்குக் கப்பல்கள், எண்ணெய் ஏற்றும் கப்பல்கள், மீன்பிடிக் கப்பல்கள், படகுகள், உல்லாசப் பயணிகள் கடல்சார் விளையாட்டுகளில் பயன்படுத்தும் படகுகள் என்பன மாத்திரமல்லாமல், மீன்பிடிக்கப் பயன்படும் வலைகள், வள்ளங்கள், நங்கூரங்கள், மீனவர்கள் பயன்படுத்தும் தொப்பிகள், கூடைகள், கடல் பயணத்திற்குப் பயன்படக் கூடிய படகுகள், சுழியோடிகள் பயன்படுத்தும் ஆடைகள் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்தும் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இவை இவ்வாறிருக்க, இறால், மீன் மற்றும் சிங்கி இறால் வளர்ப்பு என்பவற்றுக்குத் தேவையான அறிவும் அனுபவப் பகிர்வும் இங்கு இடம்பெற்றன. அவற்றுக்கான உணவு, மருந்து வகைகள் மாத்திரமல்லாமல் அவை மாதிரித் தண்ணீர் தொட்டிகளில் வளர்க்கப்படும் முறைமை உள்ளிட்டவையும் கூட இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவற்றோடு நின்றுவிடாது கடல் வளங்கள் தொடர்பிலான கற்கைகளை முன்னெடுக்கும் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும் இக்கண்காட்சியில் பங்குபற்றி இருந்தன. அவை கடல்சார் வளங்களின் அறிவினதும் கற்கைகளினதும் முக்கியத்துவத்தையும் தேவைகளையும் பார்வையாளர்களுக்கு எடுத்துக் கூறவும் தவறவில்லை.

மேலும் கடல்சார் வளங்களை அடிப்படையாகக் கொண்ட துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் அளிக்கப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில் முதலீட்டு ஒப்பந்தங்கள் பலவும் இக்கண்காட்சியின் போது கைச்சாத்திடப்பட்டன.

இவ்வாறு பரந்து விரிந்த கண்ணோட்டத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கண்காட்சியை பொதுமக்களும் துறைசார் ஆர்வலர்களும் கடற்படையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரும் தினமும் பார்வையிட்டு பயனடைந்தனர். இக்கண்காட்சியில் பங்குபற்றிய நிறுவனங்கள் தத்தம் உற்பத்திகளுடனும் அவற்றின் மாதிரிகளுடனும் கலந்து கொண்டிருந்தன.

கடல் மற்றும் கடல்சார் வளங்களைப் பயன்படுத்தி தனியொரு கைத்தொழில் துறையாக வளர்ச்சி பெறுவதற்குத் தேவையான அத்தனை அறிவையும் விழிப்புணர்வையும் வழங்கக் கூடியதாக இந்த சர்வதேச கண்காட்சி விளங்கியது.

கராச்சியில் இருந்து
மர்லின் மரிக்கார்...✍

கறைபடியாத அரசியல்வாதியாக வாழ்ந்த நிந்தவூர் காசிம் மாஸ்டர்

மனிதப் பண்புகளோடு வாழ்ந்தோரும், சமூகத்துக்கு தன்னலமற்ற சேவைகள் செய்தவர்கள் மட்டுமே இறந்த பின்னரும் மக்கள் மனதில் நீங்காத நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவர்தான் பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அவர்களின் தந்தை மர்ஹூம் முஹம்மத் காசிம்.

அன்று சுதந்திர இலங்கையின் பொத்துவில் தொகுதியின் முன்னாள் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம். இப்ராஹிம் அவர்களின் சகோதரர் எம்.எம். இஸ்மாலெவ்வை அவர்களின் புதல்வர்தான் மர்ஹூம் காசிம் மாஸ்டர். இவர் மார்க்கப்பற்றும் மனிதநேயமும் கொண்டவர். ஏழை மக்களுக்கு அள்ளிக் கொடுப்பதில் ஆனந்தம் கண்டவர். நிந்தவூரில் எம். எம். இஸ்மாலெவ்வை_ அலிமா தம்பதியருக்கு 1925 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்த முஹம்மது காசிம், தனது ஆரம்பக் கல்வியை நிந்வூரிலும் உயர் =கல்வியை மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் ஆங்கில மொழி மூலம் கற்றுத் தேர்ந்தார்.

1951 ஆம் ஆண்டு நிந்தவூரில் (இன்றைய அல் அஸ்ரக் தேசிய பாடசாலை) ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்றார். 1965 ஆம் ஆண்டு தனது ஆங்கில ஆசிரியர் தொழிலை இராஜினாமா செய்து விட்டு குடும்ப வாழ்வில் ஈடுபட்டார். அக்காலப் பகுதியில் அரசியல் ஆர்வம் கொள்ளாது இருந்த போதிலும் முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் வேண்டுகோளின் பேரில் 1969 ஆம் ஆண்டு சுதந்திரக் கட்சியின் பொத்துவில் தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வேண்டுகோளின் பேரில் 1970 ஆம் ஆண்டு பொது தேர்தலின் போது கட்சியின் சார்பில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெறாவிட்டாலும் தொகுதி உத்தியோகபற்றற்ற அரச பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார்.

கறைபடியாத காசிம் மாஸ்டர் இவ்வுலகை விட்டு மறைந்து வருடங்கள் பல கடந்த போதிலும் அவரது அமைதியான சுபாவம் ஆடம்பரமற்ற வாழ்க்கை அனைவரையும் ஆதரிக்கும் அன்புள்ளத்தையும் மக்கள் இன்றும் நினைவு கூருகின்றனர். அவர் 1996.02.16 ம் திகதி காலமானார்.

கலாபூசணம் **எம்.ரி.ஏ.கபூர்...✍**
நிந்தவூர்

சீனன்கோட்டை மாணிக்க சந்தையில் EGL ஆய்வுகூடம் திறந்துவைப்பு

பேருவளை சீனன்கோட்டை பத்தை மாணிக்க வியாபார சந்தைக்கருகில் நான்கு மாடிகளைக் கொண்ட மாணிக்கக்கற்களை நவீன முறையில் பரிசோதனை செய்யும் EGL (Emteem Gem Laboratory) ஆய்வுகூட புதிய கட்டடத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

ஆய்வுகூட ஸ்தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான (CEO) தொழிலதிபர் அல்ஹாஜ் எம்.ரீ.எம். ஹாரிஸ் (FGA, London) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவரது புதல்வர் நாடாவை வெட்டி வைபவரீதியாக கட்டடத்தைத் திறந்து வைத்தார். இத்திறப்புவிழாவில் உலமாக்கள், சீனன்கோட்டையைச் சேர்ந்த மாணிக்க வியாபாரிகள் மற்றும் நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த உள்நாட்டு, வெளிநாட்டு மாணிக்க வியாபாரிகள், வர்த்தகர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

மேற்படி EGL பரிசோதனைக்கூடம், இலங்கையில் பிரசித்தி பெற்ற இரத்தினக்கற்களை பரிசோதிக்கும் முன்னணி ஆய்வுகூடமாகும். இங்கு மாணிக்கக்கற்களை பரிசோதித்து அதன் இறுதியில் வழங்கப்படுகின்ற சான்றுப்பத்திரம் இலங்கையின் தேசிய இரத்தினக்கல் வர்த்தக அதிகார சபையினால் மாத்திரமன்றி உலக நாடுகளின் முன்னணி இரத்தினக்கல் ஆய்வு நிறுவனங்களின் அங்கீகாரத்தையும் பெற்றதாகும்.

இலங்கையிலிருந்து உலக நாடுகளுக்கு இரத்தினக்கல் வியாபாரத்திற்காகச் செல்லும் பெரும்பாலான வியாபாரிகள் தங்களது மாணிக்கக்கற்களை இப்பரிசோதனைகூடத்தில் தீர பரிசோதனை செய்து உண்மைத்தன்மை 100 வீதம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அதற்கான அங்கீகார சான்றுப்பத்திரம் EGL நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது. இங்கு இரத்தினக்கற்களை தரம்பிரித்து தேவையான பரிசோதனைகள் நவீன முறையில் மேற்கொள்ளப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

இரத்தினக்கல் தொடர்பில் பல்வேறு விதமான பரிசோதனைகள் திறமையான தேர்ச்சிபெற்ற அதிகாரிகளினால் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் வெளிநாடுகளுக்குச் செல்லும் வியாபாரிகள் தனது வியாபாரத்தை எவ்வித தங்குதடையுமின்றி மேற்கொள்ள இங்கு வழங்கப்படுகின்ற உறுதிச்சான்று மிகவும் உறுதுணையாக காணப்படுகின்றது.

அஜ்வாத் பாஸி...✍

பொருளாதார நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காக மத்திய விநியோக நிலையத்தை ஆரம்பித்துள்ள காகில்ஸ்

காகில்ஸ் (சிலோன்) பிஎல்சி, 2023 பெப்ரவரி 8 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட தனது மத்திய விநியோக நிலையத்துடன் இன்னுமொரு வரலாற்று முக்கியத்துவமிக்க மைல்கல்லை எட்டியுள்ளது. கடந்த 40 வருடங்களாக காகில்ஸ் இலங்கையின் பாரிய உணவுப் பொருட்கள் நிறுவனமாக உருவெடுத்துள்ளதோடு, சந்தைகளை உருவாக்குதல், மற்றும் விவசாய சமூகத்தினருக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதை தனது பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது.

கட்டானவில் அமைந்துள்ள இந்நிலையம், ரூ.4 பில்லியன் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதோடு 28 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக அமைந்துள்ளது.

இந்நிலையமானது விநியோகச் சங்கிலி இடம்மாற்றல்களை மேம்படுத்துவதற்கும் மற்றும் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளின் ஆக்கத்திறன் மற்றும் செயற்திறனை விருத்தி செய்வதை முன்னிட்ட நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்புக்கும் ஓர் அடையாளச் சின்னமாகும். இந்நிலையமானது நாளொன்றுக்கு சராசரியாக 50,000 கன அடி விநியோகத்தை மேற்கொள்ளும் இயலுமை கொண்டது. நவீன தொழினுட்பங்களுடன் 325,000 சதுர அடிகளில் அமைந்துள்ள இந்நிலையமானது கேள்வித் திட்டமிடல் முதல் செலவுக் குறைப்பு வரை உள்நாட்டு வணிகங்களை அபிவிருத்தி செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதோடு, அதன் பயனை நேரடியாக வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்வர். அத்துடன் இந்த விநியோக நிலையமானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு சிறப்பான சேவையை காகில்ஸ் வழங்குவதற்கும் மற்றும் அவர்களுக்கு இலகுவான சந்தை அணுகலை வழங்கவும் உதவுவதோடு, நாடு முழுவதும் நியாயமான விலைகளில் போஷாக்கு கிடைப்பதற்கும் உறுதுணையாக இருக்கும். அத்துடன் காகில்ஸ் மிக விசாலமான ஒரு வாகன அணியையும் கொண்டிருப்பதோடு, அவ்வணி ஒவ்வொரு நாளும் சுமார் இலங்கையை 47 தடவை சுற்றுவதற்கு சமனான தூரம் பயணித்து, நாடெங்குமுள்ள முகவர்களை இணைக்கிறது.

திறப்புவிழாவில் கருத்துத் தெரிவித்த காகில்ஸ் குழுமத்தின் முதன்மை நடவடிக்கை அதிகாரியான அர்ஜுன குமாரசிங்க, "எமது புதிய முதலீடானது நடவடிக்கைகள் மற்றும் தொழினுட்பத்தில் விசேடத்துவ அடையாளச் சின்னத்தைக் கடந்த ஒன்றாகும். இது தேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான எமது அர்ப்பணிப்பை மீளுறுதிப்படுத்தும் அதேவேளை, எமது விநியோக சங்கிலியின் மேன்மையான ஒருங்கிணைப்பின் ஊடாக நாடெங்குமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும் அத்துடன் விவசாயிகளுக்கும் பக்கபலமாக அமைகிறது" என்று தெரிவித்தார்.

இந்நிலையம், 1 மெகாவாட் சூரிய சக்தியையும் மற்றும் மழைநீர் சேகரிப்பு முறைமையையும் தன்னகத்தே கொண்ட வாறு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதன் வாகனத்தரிப்பு பகுதியானது பிளாஸ்டிக் உருமாற்ற அஸ்பால்ட் கொங்க்ரீட் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதாவது 4600 கி.கிராம் மீள் சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக் கழிவு இந்நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது காகில்ஸ் 900 க்கு மேற்பட்ட வழங்குனர்களைக் கொண்டிருப்பதோடு அதில் 320 பேர் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆவர். நிறுவனமானது 20,000 விவசாயிகளோடு தற்பொழுது இணைந்து செயற்படுவதோடு, இந்தவிநியோக நிலையமானது உள்நாட்டு உணவு உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்காகவும் ஏற்றுமதி வாய்ப்புகளையும் உருவாக்குவதற்காகவும் எதிர்காலத்தில்விரிவாக்கப்படும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டிருப்பதால் மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பின் நலன்களை இவர்களும் பெற்றுக் கொள்வர்.

கலாசார பாரம்பரியத்தை பேணிப் பாதுகாத்து 41 வருட வெற்றிப் பயணத்தில் ரூபவாஹினி

இற்றைக்கு 41 வருடங்களுக்கு முன்னர், அதாவது 1982 பெப்ரவரி 15ஆம் திகதி எமது நாட்டுக்கு விசேட தினமாகும். அது தேசிய ரூபவாஹினி உத்தியோகபூர்வ ஒளிபரப்பை ஆரம்பித்த தினமாகும். அது 1982 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற இலக்கம்6 எனும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன சட்டத்தின் கீழாகும். அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி கூட்டுத்தாபனத்தின் நோக்கம் மக்களுக்கு அறிவு, கல்வி மற்றும் பொழுதுபோக்குக்காக செய்தி மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை தயாரித்து ஒளிபரப்புவதாகும்.

பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் போல் அல்லாது நாட்டின் தேசிய அபிலாசைகள், தேசிய அபிவிருத்தி, மக்களின் கலாசாரம், நெறிமுறைகளை வளர்த்து இளைஞர் மற்றும் சிறுவர் அறிவு வளர்ச்சிக்கு கைகொடுத்து தேசிய பொறுப்புடன் நடவடிக்கையில் ஈடுபடுவதே ரூபவாஹினியின் பொறுப்பாகும்.

இலங்கை முழுவதும் நேத்ரா அலைவரிசை நிகழ்வுகள்

"இலங்கை மக்களுக்கு புதுவிதமான அனுபவங்களை வழங்கி வரவேற்பறைக்குள் நுழைந்த நாம், தற்போது ரசிகர்களின் கைகளில் உள்ள ஸ்மார்ட் தொலைபேசி ஊடாகவும் அவர்களின் நண்பன் போன்று நெருக்கமாக உள்ளோம்".

ரூபவாஹினி துறையில் தொலைக்காட்சி நாடகம், கார்ட்டூன், ஆவண திரைப்படங்கள், கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் சங்கீத நிகழ்ச்சிகள் போன்றவற்றை அறிமுகம் செய்த தேசிய அலைவரிசை தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்துள்ளது.

இலங்கை ரூபவாஹினி ஊடகத்தில் டப்பிங் செய்யப்பட்ட முதலாவது கார்ட்டூன் நிகழ்ச்சி 'அகல பஹல லொக்குபாஸ் பொடி பாஸ்' என்னும் பெயரில் ஒளிபரப்பை ஆரம்பித்தது. நிகழ்ச்சியை டப்பிங் செய்வது புதிய அனுபவம் என்பதால், அது நாட்டு மக்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது. ரூபவாஹினியில் ஒளிபரப்பான 'தொஸ்தர ஹொந்த ஹித', 'ஹா ஹா ஹரி ஹாவா', 'கலிவரயன்கே சுவ செரிய', ரொபின் ஹுட்', 'மல்குடி தவஸ', 'ஒஸீன்', 'சுஜாதா தியனிய' தொடங்கி 'ருவத்தி சித்தெதிய' வரை நான்கு தசாப்தங்களுக்கு அதிக காலமாக தரமான நிகழ்ச்சித் தொடர்களை நாட்டின் பிள்ளைகளுக்காகவும் மற்றும் சமூகத்துக்கும் பரிசாக ரூபவாஹினி அளித்துள்ளது.

அதன் புதிய வடிவமாக 'மன் ஒபே லங்கின்' (Rich Man Poor Women) சிங்கள மொழியில் டப்பிங் செய்யப்பட்ட ஜப்பான் டெலி ட்ராமா பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி தொடக்கம் வார இறுதி நாட்களில் இரவு 8 மணிக்கு தேசிய ரூபவாஹினி மூலம் உங்களது வரவேற்பறைக்கு வரவுள்ளது. 2012 ஆம் ஆண்டில் ஜப்பானின் Fuji TV யில் ஒளிபரப்பான Rich Man Poor Women, கதையின் தொனிப்பொருள் காரணமாக அந்நாட்டில் மிகவும் பிரபல்யமான டெலிட்ராமாவாகும். மேலும்'ஏ நும்ப நிஸா' (Tale of the Nine Tailed) என்னும் சிங்கள டப்பிங் செய்யப்பட்ட கொரிய டெலிகிராப் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி தொடக்கம் வார நாட்களில் இரவு 8 மணிக்கு ரசிகர்களுக்காக ஒளிபரப்பப்படவுள்ளது.

நவீன தொழில்நுட்பத்துடன் ரசிகர்களைக் கவரும் நிகழ்ச்சிகள்

தமிழ் மக்களுக்காக கலாசார மற்றும் மத நடவடிக்கைகளுக்காக விசேட கவனம் செலுத்தும் நோக்கில் ரூபவாஹினி நேத்ரா ரூபவாஹினி அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டது. நான்கு தசாப்த கால பெருமையான வரலாற்றுடன் இலங்கை ரூபவாஹினி கூட்டுத் தாபனம் 41 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கு இணைந்ததாக நேத்ரா அலைவரிசையை முழு இலங்கையுமே இணைந்ததாக ஒளிபரப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஒளிபரப்பு கோபுரத்தின் ஊடாக இலங்கையின் வடக்கு,கிழக்கு மக்களுக்கு மற்றும் இலங்கை முழுவதுமுள்ள மக்களுக்கு தெளிவான காட்சிகளை காண முடியும். நேத்ரா அலைவரிசை நிகழ்வுகளை இலங்கை முழுவதும் கீழ்க்கண்ட அலைவரிசைகளின் ஊடாக ஒலிபரப்ப நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அந்தப் புள்ளிகளில் சரிப்படுத்தல் மூலம் நேத்ரா அலைவரிசையின் நிகழ்ச்சிகளை தெளிவாக காணலாம்.

பிதுருதலாகல_ VHF CH7. 189.25 MHz, யாழ்ப்பாணம்_ UHF CH 23 487.25 MHz, நமுனு குல_ UHF. CH52 719.25 MHz, சூரியகந்த_ UHF CH52 719.25 MHz, ராஜகிரிய_ UHF. CH39 615.25 MHz, கொன்கல_ UHF CH46 671.25MHz, கொக்காவில்_ UHF CH35 583.25MHz, ஹந்தான_ UHF CH39 615.25MHz

தேசிய அலைவரிசை ஒளிபரப்பு நேரத்தில் மாத்திரம் தங்கியிராமல் தற்போது நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்துYou Tube, Facebook, Instagram, TikTok மூலம் ரசிகர்களை கவர முடிந்துள்ளது.

கூட்டுத்தாபன சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, கல்விக்காக அதிக இடத்தை ஒதுக்கியுள்ளது. நாட்டின் பிள்ளைகளுக்காக கல்வி என்னும் உன்னதத்தை நோக்காக கொண்டு உருவாக்கப்பட்ட தேசிய ரூபவாஹினி பிள்ளைகளின் கல்விக்காக பாரிய பணிகளை கடந்த 41 வருடங்களாக தொடர்ந்து முன்னெடுத்து வந்துள்ளது. இவ்வாறு தேசிய பாடசாலைகள் மூலம் க. பொ. த சாதாரண தரம், க. பொ. த உயர்தரம் நென மிஹிர புலமைப் பரிசில் நிகழ்ச்சி புலமைப் பரிசில் மாணவர்களுக்கும், AfterSchool நிகழ்ச்சி மூலம் ஜப்பான், கொரிய, ஆங்கில, தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகள் தொடர்பான பல நிகழ்ச்சிகளையும் நேரலைகளில் ஒளிபரப்பு செய்கின்றது. இலங்கையில் உள்ள மிகத் திறமையான ஆசிரியர்கள் மூலம் நாட்டின் பிள்ளைகளுக்காக கல்விச் சேவையை பெற்றுக் கொடுப்பதற்காக நாம் ஒளிபரப்பு நேரத்தில் அதிகமான பகுதியை ஒதுக்கி உள்ளோம்.

அத்துடன் ரூபவாஹினி மூலம் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளுக்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு விருதுகள் பல கிடைத்துள்ளன.

அதைத் தவிர சம்பிரதாய தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்புக்கு அப்பால் சென்று பலவிதமான கலைத்திறமைகளையுடைய இளைஞர் பரம்பரை ஒன்றை உருவாக்கும் நோக்கில் தற்போது தேசிய ரூபவாஹினியில் பல பாடநெறிகளையும் நடத்தி வருகின்றது. அதன்படிActing Academy யில் நாடகக்கலை தொடர்பான பாடநெறி ஒன்றும், புகைப்படக்கலை தொடர்பான பாடநெறியொன்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அம்மாணவர்கள் மூலம் டெலிட்ராமாக்களை உருவாக்கவும் இவ்வருடம் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.அதன்படி தொலைக்காட்சி மூலம் நடிப்பு தொடர்பான அறிவைப் பெற்றுக் கொடுத்து அவர்களின் டெலி ட்ராமாக்களை தயாரிப்பது இலங்கையிலேயே முதன்முதலாக ரூபவாஹினி ஊடகம் மேற்கொள்வது விசேட அம்சமாகும்.

அதைத் தவிர தேசிய ரூபவாஹினியில் வர்த்தக மற்றும் படைப்பாற்றல் நடவடிக்கைகளின் இன்னொரு செயலாக வெளியாரையும் இணைத்து அனைத்து உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கலை நடவடிக்கைகளில் ஈடுபடும் நோக்கத்தில் 'ரூ என்டர்டைமன்ட்' என்னும் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட பிரிவை புதுப்பித்து புதிய வர்த்தக நிலையமாக மாற்றவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் இணைந்த தயாரிப்புகளில் ஈடுபடுவதுடன், அதன் மூலம் சிறந்த நிகழ்ச்சிகளை ரசிகர்களிடம் கொண்டு கொண்டு செல்வதுடன் பொருளாதார ரீதியாகவும் பாரிய வெற்றிகளை நோக்கி பயணிக்கவும் முடியும்.

ஊடக கலாசாரம் மற்றும் நெறிமுறைகளைப் பாதுகாத்து, தேசிய அபிலாசைகளை முன்னெடுத்து, நாகரிகமான சமூகத்தை உருவாக்குவதற்கு தேசிய ரூபவாஹினி நவீன தொழில்நுட்பத்துடன் முன்னணியில் உள்ளது.

சீ.எஸ்.சொனாலி...✍
தமிழில்: வீ.ஆர். வயலட்

கடலட்டை வளத்தை உரியவாறு பயன்படுத்தி பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு வாய்ப்பு

முப்பது வருட கால யுத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து, எமது நாடு படிப்படியாக அபிவிருத்தியடைந்து வந்துகொண்டிருந்த போது, கொவிட்19 பெருந்தொற்றினால் திண்டாடியது. அதனைத் தொடர்ந்து, எமது நாடு கடந்த வருடத்திலிருந்து (2022) பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு அல்லல்படுகின்றது. இந்நெருக்கடியிலிருந்து எமது நாடு மீண்டெழுந்து பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு அடைய வேண்டுமாயின், எமது நாட்டிலுள்ள வளங்களை நாம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில், எமது நாட்டுக்குக் கிடைத்துள்ள பெரும் வரப்பிரசாதமாக கடலட்டை உற்பத்தி அமைந்துள்ளது. இதன் மூலம் கடற்றொழில்சார் சமூகம் தமது வாழ்வாதாரத்துக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், எமது நாட்டுக்குத் தேவையான அந்நிய செலாவணியையும் ஓரளவிலேனும் பெற்றுக்கொள்ள முடியுமென்பது நம்பிக்கையாக உள்ளது.

எமது நாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில இடங்கள், கடலட்டை உற்பத்திக்கு பொருத்தமான இடங்களாக விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்கள் கடலட்டை உற்பத்திக்கு ஏதுவாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்தது.

இந்நிலையில், வடமாகாணத்தில் சுமார் 5,000 ஏக்கர் நிலப்பரப்பு, நீர் வேளாண்மைச் செய்கைக்கு உகந்ததாக நாரா நிறுவனத்தினால் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதில் 1,200 ஏக்கரில் கடலட்டை உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் பண்ணை முறையில் கடலட்டை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் 95 சதவீதமான கடற்றொழிலாளர்கள் ஆர்வம் காட்டி வரும் அதேவேளை, தனியார் முதலீட்டாளர்களும் கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு முயற்சித்துள்ள ஒவ்வொருவருக்கும் தலா ஒரு ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதுடன், கடலட்டை உற்பத்திக்காக நிறுவன அடிப்படையில் பதிவு செய்துள்ள முதலீட்டாளர்களுக்கு தலா 10 ஏக்கர் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கடலட்டை உற்பத்திப் பண்ணை அமைப்பதற்கு முயற்சிக்கும் கடற்றொழிலாளர்களும் தனியார் முதலீட்டாளர்களும், தாம் கடலட்டை உற்பத்தி செய்வதற்குத் தீர்மானித்துள்ள இடங்களிலுள்ள கடற்றொழில் சங்கங்களின் அனுமதியைப் பெற்றுக் கொண்டே கடலட்டை உற்பத்தியில் ஈடுபட வேண்டுமெனவும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுகின்றவர்கள், அந்த உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பங்கை கடற்றொழில்சார் சமூகத்துக்கும் கடற்றொழில் சங்கங்களுக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் உள்ளன.

இயற்கை வளமான கடல் வளங்களுக்கும் பாரம்பரிய மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கடலட்டைப் பண்ணைக்கான நிலம் பகிர்ந்தளிக்கப்படுவதாகவும் கடற்றொழில் அமைச்சு தெரிவித்தது.

இவ்வாறிருக்கையில், பாரம்பரிய சிறகுவலைத் தொழிலாளர்களும் கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு தற்போது முயற்சித்து வருகின்றனர். கிளிநொச்சியில் கிராஞ்சி பிரதேசத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களே இதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதுடன், கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் ஆழ்கடல் மீன்பிடிக்குத் தேவையான எரிபொருள் பற்றாக்குறை, எரிபொருள் விலையேற்றம், எரிபொருள் விலையேற்றத்துக்கேற்ப பிடிக்கும் மீன்களை விற்பனை செய்ய முடியாமை, இதனால் போதிய வருமானத்தை ஈட்ட முடியாமை ஆகிய பிரச்சினைகளை சிறகுவலைத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

ஆகையினால், சிறகுவலைத் தொழிலினால் கிடைக்கும் வருமானத்தை விட, கடலட்டை உற்பத்தித் தொழிலினால் நம்பிக்கையிலேயே சிறகுவலைத் தொழிலாளர்கள் இம்முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர்.

பாரம்பரிய கடற்றொழிலாளர்களும் தனியார் முதலீட்டாளர்களும் முன்வர வேண்டுமென்று அழைப்பு

கடந்த காலத்தில் மேற்கொண்டு வந்த சிறகுவலைத் தொழிலினால் வருடமொன்றுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாவை வாழ்வாதார வருமானமாகப் பெற்று வந்த தாம், தற்போது மேற்கொண்டு வரும் கடலட்டைப் பண்ணைத் தொழில் மூலமாக வருடமொன்றுக்கு சுமார் 4 இலட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்று வருவதாகவும், கிளிநொச்சி மாவட்டத்தின் பள்ளிக்குடாவைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

பாரம்பரியக் கடற்றொழிலினால் தமக்குக் கிடைக்கும் வருமானத்தை விட, கடலட்டை உற்பத்தித் தொழிலினால் நான்கு மடங்கு வருமானம் கிடைப்பதாக, பள்ளிக்குடா கடற்றொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சீனாவைச் சேர்ந்த மக்கள் தமது விருப்பத்துக்குரிய உணவாக கடலட்களை உட்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், சீன மக்களை இலக்கு வைத்து சீனா, இந்தோனேஷியா, சிங்கப்பூர், வடகொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு கடலட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதுடன், கடலட்டைகளைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்காக எமது நாட்டில் தனியார் நிறுவனங்களும் உள்ளன.

இந்நிலையில், கடலட்டை உற்பத்தியில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களும் தனியார் முதலீட்டாளர்களும், தமது கடலட்டை உற்பத்திகளை அத்தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்து, வருமானத்தை ஈட்டி வருகின்றனர்.

கடலட்டை உற்பத்திப் பண்ணைகள் அமைக்கப்படுவதனால், அப்பண்ணைகளுக்காக பயன்படுத்தப்படும் வலைகளில் பாசி அதிகளவில் படிந்து மீனினங்கள் இனப்பெருக்கம் செய்வதற்கு ஏதுவாக அமைவதுடன், அம்மீனினங்கள் நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கு ஏதுவான சூழலும் கடலட்டை உற்பத்திப் பண்ணைகளினால் உருவாக்கப்பட்டுள்ளதாக, ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்தது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் தற்போதைய சூழ்நிலையில் எவ்வளவோ பேர் படித்துவிட்டு தொழில் வாய்ப்பின்றி சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். வாழ்வாதாரத் தொழிலுக்காக அவர்கள் அல்லல்படுகின்றனர். இவ்வாறானவர்களின் வாழ்வாரத்தை வலுப்படுத்துவதற்கு இக்கடலட்டை உற்பத்தித் தொழில் ஏதுவாக அமையுமென்பது உறுதியான நிலைப்பாடாகும்.

இக்கடலட்டை உற்பத்திப் பண்ணைகளைச் சார்ந்ததாக புதிய நிறுவனங்கள் தோற்றம் பெறுவதற்கு வழியமைவதுடன், தொழில்வாய்ப்புகளும் பெருகுமென்பது அனைவரும் அறிந்ததேயாகும். இதனால், தொழில்வாய்ப்பின்றியுள்ள இளைய சமூகத்தினர் மத்தியில் காணப்படும் முரண்பாட்டுப் போக்குகள் நீங்கி, பொருளாதார ரீதியில் தழைத்தோங்கிய நாகரிகமிக்க சமுதாயம் எமது நாட்டில் உருவாக்கப்படும்.

எமக்கு இயற்கையாகக் கிடைத்துள்ள கடலட்டை வளத்தைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டுவதற்கு நாம் முற்படுவதுடன், அத்தொழிலை எதிர்காலச் சந்ததியினர் மத்தியில் கொண்டு சென்று விருத்தியடையச் செய்ய வேண்டும்.

ஆகையினால், எமது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மிக்க இச்சூழ்நிலையில், கடலட்டை உற்பத்தியை சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் மேற்கொண்டு, பொருளாதாரத்தை ஈட்டுவது அத்தியாவசியமாக அமைந்துள்ளது. ஆகையினால், கைக்கெட்டியுள்ள வாய்ப்பாகக் காணப்படும் இக்கடலட்டை வளத்தை உரியமுறையில் பயன்படுத்தி, பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கு, கடற்றொழிலாளர்களும் தனியார் முதலீட்டாளர்களும் முன்வர வேண்டுமெனவும் கடற்றொழில் அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.



ஆர்.சுகந்தினி...✍

வடக்கு, கிழக்கின் கடல் பிரதேசங்கள் கடலட்டை வளர்ப்புக்கு பொருத்தமான இடங்களாக அடையாளம்

அம்பலந்துவை முஸ்லிம் வித்தியாலய பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பாராட்டுவிழா

இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம்_11 வரை கல்வி கற்று உயர்தரத்திற்காக ஜீலானில் கால்பதித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் புகுந்து இன்று பல பட்டதாரிகள் அம்லந்துவை மண்ணில் உருவாகி இருப்பதற்கு அடிப்படைக் காரணிகளில் ஒன்றாக ஜீலான் தேசிய பாடசாலையும் (மத்திய கல்லூரி) விளங்குகின்றது.

இம்மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பட்டம் பெற்று பிரகாசித்தது மாத்திரமன்றி, தேசத்தின் கல்விக் கல்லூரிகளுக்கும் சென்று டிப்ளோமா பட்டதாரிகளாகவும் உருவாகி அம்பலந்துவை மண்ணுக்கு புகழ் சேர்த்திருக்கின்றார்கள் என்று ஜீலான் தேசிய பாடசாலை அதிபர் ஹலீம் மஜீத் தெரிவித்தார். அம்பலந்துவை முஸ்லிம் வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கு சமூகம் சார்பில் விஷேட பிரார்த்தனைகளுடன் வாழ்த்துக்களை தெரிவிக்கும் விஷேட நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பலந்துவை முஸ்லிம் வித்தியாலய அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

"அம்பலந்துவை மண்ணின் மிகவும் திறமையான மாணவர்கள் அல்பஹ்றியா தேசியப் பாடசாலையில் கல்வி பயின்று வருகின்றார்கள். இந்த மாணவர்கள் தொடர்ச்சியாக அல்பஹ்றியாவில் சாதனைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.இந்த மாணவர்களைப் பாராட்டி

கௌரவிப்பது சிறந்த முன்மாதிரியாகும்" என அல்பஹ்றியா தேசிய பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இல்மா வித்தியாலயத்துடன் இணைந்து சேவையாற்றும் பாணந்துறை கோட்டக் கல்விப் பிரிவின் பிரதான தமிழ்மொழி கல்விக்கூடங்களான அல்பஹ்றியா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.ரிஸான் மற்றும் ஜீலான் தேசிய பாடசாலை அதிபர் ஹலீம் மஜீத் ஆகியோர் அவர்களது சேவைகளைப் பாராட்டி இல்மா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். இந்த இரண்டு தேசிய பாடசாலைகளிலிருந்தும் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் அம்பலந்துவை பிரதேச 31 மாணவர்களும் இந்த நிகழ்வில் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கான ஆசிர்வாத துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.அம்பலந்துவை ஜும்ஆப் பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி செயித் தலைமையில் பிரார்த்தனை வைபவம் இடம்பெற்றது.

அதிபர் ரிஸ்மி மஹ்ரூப் நன்றியுரை வழங்கினார். களுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். இழ்யாஸ் ,ஆசிரியர்கள்,பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...✍
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

சிறு போகத்தில்... (03 ஆம் பக்கத் தொடர்)

விவசாயிகள் TSP உரங்களை பயன்படுத்துவதை குறைத்தமையே பயிர் மஞ்சள் நிறமாக மாறுவதற்கு முக்கிய காரணம் என விவசாய திணைக்களம் கண்டறிந்துள்ளது. எதிர்வரும் சிறு போகத்தில் இந்நோய் வராமல் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதில், ஆராயப்பட்டது.

சேதன மற்றும் இரசாயன உர நிறுவனங்கள் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உரங்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பதாக இங்கு குறிப்பிடப்பட்டது. மேலும் இது தொடர்பாக பணியாற்றும் பல்வேறு அறிஞர்கள் மற்றும் நிறுவனங்கள் ஒரே நிலைப்பாட்டில் ஒன்றிணைந்து செயல்படுவது உகந்தது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

எதிர்வரும் சிறு போகத்தில் TSP உரங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், பெரும்போகத்தை விட குறைந்த விலையில் உர வகைகளை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் முக்கியத்துவத்தை சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

விவசாயிகள் குறைந்த செலவில் உற்பத்தியை பெருக்கும் வகையில் மண்ணுக்கு தகுந்த பயிர் வகைகளையும், தகுந்த விவசாய உள்ளீடுகளை விவசாயத் திணைக்களம் பரிந்துரைத்தால், உள்ளீடுகளுக்கு ஏற்ற விளைச்சலை விவசாயிகள் பெற முடியும் என இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட உர நிறுவன பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

சவால்களுக்கு மத்தியிலும் கூட சந்தை தேவையை விட அதிக விளைச்சலை கடந்த போகங்களில் பெற்றுக்கொடுக்க விவசாயிகளால் முடிந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர இங்கு சுட்டிக்காட்டினார்.

அரிசி மேலதிகமாகக் காணப்படும் தற்போதைய நிலையில் களஞ்சியசாலைகளில் கையிருப்பு உள்ள பழைய அரிசியை கால்நடை தீவனத்திற்கு விற்பனை செய்வது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டதுடன் அரிசிக்கு உயர்ந்த விலை கிடைத்துவருவதோடு முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலையும் அதிகரிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, வர்த்தக,வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம்.பி. அத்தபத்து, விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகம், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொடர்புள்ள அரச நிறுவன அதிகாரிகள், சேதன மற்றும் இரசாயன உர நிறுவனங்களின் பிரதிநிதிகளும் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பௌத்த மதத்தின்... (03 ஆம் பக்கத் தொடர்)

விக்னேஸ்வரன் ஒரு நீதியரசர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஒரு கட்சியின் தலைவராகவும் செயற்படுவதால் அவரும் மத தர்மங்களை தெரிந்துள்ளார்.

அவ்வாறிருந்தும் பௌத்த தேரர்கள் ஏன்? எமக்கு உபதேசம் செய்ய வேண்டும் என குரலெழுப்பி வருகின்றார். அத்தோடு எமது பௌத்த மதத்தில் அவ்வாறு கிடையாது என்றும் தெரிவித்து வருகின்றார்.

இந்நாட்டைப் பாதுகாப்பதற்காக பௌத்த தேரர்கள் புரித்துள்ள உயிர்த்தியாகங்கள் பற்றி அவருக்கு தெரியாதுள்ளது. வரலாற்றில் பௌத்த மதத் துறவிகள் மன்னர்களுக்கு ஆலோசனைகள்,உபதேசங்களை வழங்கியுள்ளனர்.

இது அவர்களது கடமையுமாகும். நாம் வெறுமனே தானங்களைப் பெற்றுக் கொண்டு செயற்படாமலிருப்பது எமது கடமையாகாது. நாட்டைப் பாதுகாப்பதில் எமது பங்களிப்பும் அவசியமானது. நாடு பாதுகாக்கப்பட வேண்டும். அதேவேளை புத்த தர்மங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அது தொடர்பில் விக்கினேஸ்வரன் எம்.பி.க்கு தெளிவில்லாமல் இருக்கலாம்.

அவரது இந்து சமயம் தொடர்பில் அவருக்கு தெளிவிருக்கலாம். பௌத்த தர்மம் பற்றியும் சிங்கள ஆரம்பம் சம்பந்தமாகவும் அவருக்கு தெளிவில்லை.

இந்நிலையில், இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருப்பது தொடர்பில் பௌத்த மத தேரர்கள் என்ற வகையில் நாம் வருத்தமடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எமது எதிர்கால... (03 ஆம் பக்கத் தொடர்)

பஸ்னாகொட நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் நிலத்தடி நீர்த்தேக்கத் திட்டம் ஆகியவற்றின் தற்போதைய முன்னேற்றம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார நீர்ப்பாசனத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, நீர்வழங்கல் அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் யூ.டி.சி. ஜயலால், தேசிய நீர் வழங்கல் சபையின் தலைவர் என். ரணதுங்க, இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கீர்த்தி பி. கொடகம, நீர்ப்பாசன திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் டி.பி.திரிமஹாவிதான, நீர் வழங்கல் சபையின் முகாமையாளர் திருமதி. வசந்த இளங்கசிங்க உட்பட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

நிதியமைச்சு செயலாளரை... (03ஆம் பக்கத் தொடர்)

கடந்த இரு தினங்களுக்கு முன்பதாகவும் 30 கோடி ரூபா நிதியைக் கோரி ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா நிதியமைச்சுக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் முன்வைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசாரங்களுக்கு...

வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையில் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு அலுவலகம், பாடசாலை, உள்ளூராட்சி அமைப்பு, பொது நிறுவனம் அல்லது சட்டப்பூர்வ அமைப்பு ஆகியவற்றில் வேட்பாளர்கள் சார்பாக ஆதரவு கோருவது, துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது அல்லது இதுபோன்ற பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன.

எனவே, அரசியல்வாதிகள், அரசியல் ஆர்வலர்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபடக் கூடாதென்று தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

நெடுமாறனின் கருத்து மீண்டும்...

உறுதிப்பாட்டை இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு வழங்க வேண்டுமென்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, 13 ஆவது திருத்தம் பாகுபாடின்றி முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இதற்காக முத்தரப்பு பேச்சுவார்த்தை ஒன்றை முன்னெடுக்க வேண்டுமென்றும், இந்தப் பேச்சுவார்த்தையில் தமிழர் தரப்பு, இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கை அரசாங்கத் தரப்பின் சார்பில், பிரதிநிதிகள் பங்கேற்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். நீதிமன்றத்தில் ஆஜராக...

எதிர்வரும் (20) ஆஜராகுமாறு தெரிவித்து யாழ்ப்பாண நீதிமன்றம் மேற்படி உத்தரவு கடிதத்தை அனுப்பியிருந்தது.

இக்கடிதத்தை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்துள்ளார். அதைப் பார்வையிட்ட ஸ்ரீதரன் எம்.பி, சம்பந்தப்பட்ட ஆவணம் சிங்கள மொழியில் உள்ளதால் தம்மால், அதனை வாசித்தறிய முடியாதுள்ளதாகக் கூறி,கடிதத்தைப் பொறுப்பேற்க மறுத்துவிட்டார். இதையடுத்து,அக்கடிதத்தை தமிழில் மொழிபெயர்த்த பொலிஸ் உத்தியோகத்தர் மீண்டும் ஸ்ரீதரன் எம்பியிடம் ஒப்படைத்தார். எனினும்,நீதிமன்ற அழைப்பாணையொன்றை விநியோகிப்பதற்கான அதிகாரம் கிடையாது என்றும், தமிழ் மொழியில் பதிவுத்தபாலூடாக அந்த அழைப்பாணை அனுப்பப்பட்டால் மாத்திரமே ஏற்கத் தயார் என்றும் ஸ்ரீதரன் எம்பி தெரிவித்தார்.

உலக மக்களை முட்டாளாக்கும்...

இருப்பதாக தமிழகத்தின் மூத்த அரசியவாதியும், விடுதலைப்புலிகளுடன் மிக நெருங்கிய தொடர்பிலும் இருந்த வருமான பழ.நெடுமாறன் கூறி இருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், அந்தத் தகவலை இலங்கை இராணுவம் முற்றாக மறுத்ததுடன் விடுதலைபுலிகளின் தலைவர் இறுதிப்போரில்கொல்லப்பட்டுவிட்டார் எனவும் கூறியது.

அத்துடன் இறுதிப்போரை வழிநடத்தியவரும் முன்னாள் ஜானதிபதியுமான கோட்டாபய ராஜபக்ஷவும் விடுதலைபுலிகளின் தலைவர் தொடர்பில் பழநெடுமாறன் கூறிய கருத்தை நிராகரித்திருந்தார்.

இவ்வாறான நிலையிலேயே தற்போது முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா எனும் விநாயக மூர்த்தி முரளீதரன், விடுதலைபுலிகளின் தலைவர் தொடர்பில் பழ நெடுமாறன் கூறியது பொய் எனக் கூறியுள்ளார்.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு அகில இலங்கை சிறுவர் பராமரிப்பு நற்சேவை மன்றம் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி எதிர்வரும் 18 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இடம் பெற இருக்கின்றது. இந்த நிகழ்வானது அன்றைய தினம் பகல் 12 மணியிலிருந்து 2 மணி வரை கொழும்பு 12 கன்னாரத் தெருவில் அமைந்துள்ள அகில இலங்கை பரத சங்கத்தில் இடம்பெற இருக்கின்றது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக இடம் பெற இருப்பது வசதி குறைந்த பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களும் அப்பியாச கொப்பிகளும் இலவசமாக வழங்கப்படுவதாகும். இதற்கான நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை எவோன் ராஜா மேற்கொண்டு வருகின்றார். அகில இலங்கை சிறுவர் பராமரிப்பு நற்சேவை வழங்கும் சிறப்பு நிகழ்ச்சியாக இந்த நிகழ்வு இடம் பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

எரிபொருள் நுகர்வு 30 வீதத்தால் வீழ்ச்சி

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் பெற வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சுமார் முப்பது வீதத்தால் குறைந்துள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருட்களின் விலைகள் அவ்வப்போது அதிகரித்து வருவதாலும், எரிபொருளைக் கொள்வனவு செய்வதை விட ஏனைய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாலும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எரிபொருள் கையிருப்பு போதுமான அளவுள்ள போதிலும், முன்பு ஒரு நாளில் பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பு தீர்ந்து போனதாகவும், ஆனால் தற்போது அந்த இருப்புக்கள் இரண்டு நாட்கள் வரை இருப்பதாகவும் பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்

ரூபவாஹினி, ஐ.ரி.என்னில்...

வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அதுதொடர்பில் ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்பமாக நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணிக்கு சிங்கள சினிமா துறையின் புகழ்பெற்ற கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 'சந்தேஷய' திரைப்படம் தேசிய ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படவுள்ளது. அத்துடன், நாளை மறுதினம் 18 ஆம் திகதி சனிக்கிழமை 1.00 மணிக்கு சுயாதீன தொலைக்காட்சி சேவையில் சிங்கள சினிமாவின் இசைத்துறையில் புரட்சிகர மாற்றங்களை மேற்கொண்ட கலாநிதி லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் 'ரேக்காவ' திரைப்படமும் ஒலிபரப்பப்படவுள்ளது.

அத்துடன் இந்த விசேட வேலைத்திட்டத்தின் கீழ் பிரதி வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமைகளில் தொடர்ச்சியாக இத்தகைய திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சினிமா துறை ரசிகர்களின் மனதில் இடம்பிடித்த திரைப்படங்களை அவர்களின் ரசனைக்கு வழங்கும் நோக்கிலேயே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. அதேவேளை, இந்த திரைப்படங்கள் ஒளிபரப்பப்படுவதற்கு முன்பதாக அந்த திரைப்படத்தயாரிப்புக்காக பங்களிப்புக்களை மேற்கொண்டவர்கள் சினிமாத்துறையில் முக்கியமானவர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் நேரடியாக வரவழைக்கப்பட்டு குறித்த திரைப்படம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கும் இந்த வேலைத்திட்டம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திரைப்படம் ஒளிபரப்பாவதற்கு அரை மணித்தியாலம் முன்பதாக மேற்படி தெளிவூட்டல் செயற்பாடுகள் இடம்பெறும் அதற்கிணங்க ரூபவாஹினி தொலைக்காட்சியில் திரைப்படம் ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பதாக 9.30 மணிக்கு இந்த தெளிவூட்டல் நிகழ்வு இடம் பெறுமென்றும் அதேபோன்று சுயாதீன தொலைக்காட்சி சேவையில் பிற்பகல் 1.30 மணிக்கு திரைப்படம் ஒலிபரப்பப்படுவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பதாக 1 மணிக்கு இந்த தெளிவூட்டல் நிகழ்வு இடம்பெறுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்ற இந்த விசேட செய்தியாளர் சந்திப்பில் அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட்ட, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் டபிள்யு. பி. கனேகல, சுயாதீன தொலைக்காட்சி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுதர்சன குணவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஆசிரியர் பீட பணிப்பாளர் சிசிர பரணதந்திரி உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

கண்டியில் குடியரசு பெரஹரா...

வரவிருக்கிறது. 75 ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளன.

எதிர்வரும் (19) மாலை 6.30 மணிக்கு கண்டி மங்களகூடத்திலிருந்து ஆரம்பிக்கும் பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி வழியாக ரஜ வீதியில் பிரவேசித்து மீண்டும் தலதாமாளிகையை வந்தடையும்.

தலதா மாளிகை இணைப்பாளர் மற்றம் கலாசார அதிகாரி ஜெயம்பதி வெத்தகல இதுபற்றித் தெரிவித்தார்.

வருடாந்த எசல பெரஹெர போன்று யானைகள் மற்றும் நடனக் குழுக்களால் இந்த குடியரசு பெரஹராவை வண்ணமயமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜயம்பதி வெத்தகல மேலும் தெரிவித்தார்.

ஆனால், இந்த பெரஹராவிற்கு புனிததந்தம் கொண்டுவரப்பட மாட்டாது. மாறாக குடியரசுச் சின்னம் மாத்திரம் வீதி உலா வரவுள்ளது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இம்முறை பெரஹரா ஏற்பாடு செய்யப்படுவதுடன், பெரஹராவை காணவரும் மக்களுக்காக கண்டி பெரஹரா வீதியில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் மிகவும் விசேடமான மற்றும் முக்கியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ தலதா மாளிகையினால் இவ்வாறான விசேட பெரஹராகள் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது பெரஹரா 1875 இல் நடைபெற்றது, மேலும் இது விக்டோரியா மகாராணியின் மகன் வேல்ஸ் பிரபு இலங்கைக்கு வருகை தந்ததை முன்னிட்டு நடத்தப்பட்டது.

1954 ஆம் ஆண்டு இலங்கையின் அரச தலைவரான இரண்டாம் எலிசபெத் மகாராணி இலங்கைக்கு வருகை தந்த பின்னர் இரண்டாவது பெரஹரா நடத்தப்பட்டது. அதனை எண்கோண மண்டபத்திலிருந்து (பத்திரிப்புவ) எலிசபெத் மகாராணி கண்டுகளித்ததாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது பெரஹரா 1981 இல் நடைபெற்றதோடு அதைக் காண இரண்டாவது எலிசபெத் மகாராணி வருகை தந்திருந்தார். மகா மண்டபத்தில் (மஹமலுவ) அமைக்கப்பட்ட விசேட மேடையிலிருந்து அவர் பெரஹராவை பார்வையிட்டார்.

1987 ஆம் ஆண்டு நான்காவது குடியரசு பெரஹரா இலங்கையின் அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாசவினால் நடத்தப்பட்டது. இவ்வருடம் ஐந்தாவது குடியரவு பெரஹரா நடைபெறுகிறது.

தெற்கு அதிவேக சாலையில்...

தெரிவித்தனர். பின்னதுவையிலிருந்து கொட்டாவ நோக்கிச் சென்ற லொறியொன்று, இயந்திரக் கோளாறு காரணமாக கடும் புகையை வெளியிட்டது.இதையடுத்து, லொறியை வீதியோரத்தில் நிறுத்திவிட்டு சாரதி,வாகனத்தை சோதனை செய்து கொண்டிருந்தார்.

இதன்போது, கொட்டாவை நோக்கி அதி வேகமாகச் சென்ற காரொன்று நிறுத்தப்பட்டிருந்த லொறியின் பின்புறம் மோதியது.

விபத்தில் காயமடைந்த காரின் சாரதி, அவரது தந்தை, சித்தப்பா மற்றும் மாமி ஆகியோர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சாரதியின் தந்தையும் சித்தப்பாவும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

திருக்கோவில் பிரதான வீதியில் வசிக்கும் 75 வயது மற்றும் 70 வயதுடையவர்களே இதில், உயிரிழந்தனர்.

சடலங்கள், நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அதிவேக நெடுஞ்சாலை சுற்றுலா பொலிஸ் பிரிவு சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்விபத்து தொடர்பாக திருக்கோவிலிலுள்ள குடுபத்தினர் தெரிவிக்கையில், கொழும்பு பம்பலப்பிடடியிலுள்ள சுகவீன முற்றுள்ள சகோதரரின் நலம் விசாரிப்பதற்காக செவ்வாய்க்கிமை மாலை 5.00 மணியளவில் திருக்கோவிலிலிருந்து கொழும்புக்கு காரில் பயணித்தனர். இதன்போதே இவ்விபத்து நிகழ்ந்தது.

உயிரிழந்தவர்கள் திருக்கோவிலை பிறப்பிடமாக்க்கொண்ட கனடாவிலிருந்து விடுமுறையை கழிப்பதற்காக வந்திருந்த 70 வயதுடைய தங்கராசா நாகசுந்தரம் என்பவரும், திருக்கோவிலைச் சேர்ந்த அவரது சகோதரர் 74 வயதுடைய வாவா என்றழைக்கப்படும் தங்கராசா கேதாரவரதசுந்தரம் (வாவா) ஆகியோருமாவர்.

உயிரிழந்த நாகசுந்தரத்தின் மனைவி சாருமதி மற்றும் உயிரிழந்த கேதாரவரதசுந்தரத்தின் மகன் ஜசிகாந்த ஆகிய இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

மக்களின் உணர்வுகளுக்கு...

ஆதிலிங்கேஸ்வர் ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் பூஜை வழிபாடுகளை தொடர்வதற்கு, அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றின் கடமைசார் செயற்பாடுகள் இடையூறாக அமைந்திருந்தன. இதையடுத்து,

இப்பகுதிக்கு நேற்று (15) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம்செய்து நிலைமைகளை ஆராய்ந்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக பிரதேச மக்களின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் கேட்டறிந்த அமைச்சர், மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அரசாங்க திணைக்களங்களின் செயற்பாடுகள் அமையுமாயின், அவை தொடர்பாக கரிசனை செலுத்தப்படும் என்றும் உறுதியளித்தார்.

மேலும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதுடன், துறைசார் அமைச்சர்களுடனும் பிரஸ்தாபித்து சுமுகமான தீர்வு காணப்படுமெனவும் தெரிவித்தார்.

ஏற்கனவே, வெடுக்குநாறி விவகாரம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அமைச்சரவை உப குழுவின் கவனத்துக்கு அமைச்சர் கொண்டு வந்திருந்தார்.

இதன்போது, சம்மந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்வதுடன், சம்மந்தப்பட்ட துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து சுமுகமான தீர்வை காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

வெடுக்கநாறி மலைக்கான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பயணத்தின் போது, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனும் இணைந்திருந்தார்.

இந்திய பிரதமரின் முதன்மை...

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இந்திய விஜயம் தொடர்பான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில், இந்தியப் பிரதமரின் முதன்மை செயலாளருடனான சந்திப்பின்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இலங்கையுடனான இந்தியாவின் வரலாற்று மற்றும் ஆழமான உறவுகளை நினைவு கூர்ந்த இந்தியப் பிரதமரின் முதன்மைச் செயலாளர், அண்டை நாடு நெருக்கடியை எதிர்கொள்ளும் போது உதவுவது இந்தியாவின் கடமை என்று கூறியுள்ளார்.

இதேவேளை 2009ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி, குஜராத் முதலமைச்சராக இருந்த போது இலங்கைக்கும் குஜராத் மாநிலத்துக்குமிடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி, சுற்றுலாத்துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். இதற்கிடையில் இலங்கையின் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, கடந்த சில வாரங்களில், இந்திய நிதிச் செயலாளர் டி.வி. சோமநாதன், அமைச்சரவைச் செயலர் ராஜீவ் கௌபா மற்றும் இந்தியாவின் மத்திய திட்டக்குழுவுக்கு மாற்றாக அமைக்கப்பட்ட குழுவான நிதி ஆயோக்கின் தலைவர் பரமேஸ்வரன் ஐயர் உட்பட இந்திய அரசின் பல முக்கிய அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்.

நுகேகொடையில் புதிய...

கொள்வனவு செய்து சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இதுவரை மாக்கும்புர ரயில் நிலையத்தில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆசனப் பதிவுச் சேவை, நேற்று முதல் நுகேகொடை ரயில் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சேவை மூலம் நாட்டில் எந்தவொரு பகுதிக்கும் தேவையான ஆசனப் பதிவுகளை நுகேகொடை ரயில் நிலையத்தின் மூலமும் மேற்கொள்ளமுடியும்.

அன்றாடம் பெருமளவு பயணிகள் நுகேகொடை ரயில் நிலையத்தை உபயோகிக்கின்றனர். இந்த ஆசனப் பதிவு நடைமுறை அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கொழும்பு கோட்டை, மருதானை ரயில் போன்றவற்றில் ஆசனங்களை பதிவுசெய்வதில் நிலவும் நெருக்கடி நிலையை நிவர்த்திசெய்து கொள்ள முடியும்.

அதேபோன்று சீதாவக்க பகுதியை சுற்றுலா துறை மேம்பாட்டிற்கான பகுதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் (26) முதல் 'சீதாவக்க ஓடிசி சுற்றுலா ரயில்' சேவையை ஆரம்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான பயணச்சீட்டுக்களையும் நுகேகொடை ரயில் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் ஆசனப் பதிவுகளையும் அங்கு மேற்கொள்ளமுடியும். அத்துடன் ஒன்லைன் மூலமான ஆசனப்பதிவுகளுக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றைய இந்த நிகழ்வில் ரயில்வே பிரதி பொது முகாமையாளர் வி.எஸ். பொல்வத்தகே, மேல் மாகாண சுற்றுலா சபையின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

ஜேர்மன் MP பீட்டர் ராம்சோர்...

உறவுகளை நினைவு கூர்ந்தார். ஜேர்மன் அரசாங்கத்தின் அனுசரணையுடன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் செயற்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஜேர்மனியின் தொழில்நுட்ப உதவிகள், முதலீடுகளை இலங்கை எதிர்பார்க்கிறது.

இதற்கான உதவிகள் உத்தரவாதப்படுத்தப்படுவது அவசியம்.ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரிகள் மூலம் இலங்கை மாணவர்களுக்கான பயிற்சித் திட்டங்களை மேலும் விரிவுபடுத்தல்,யானைமனித மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு ஜேர்மனி அறிமுகப்படுத்தியுள்ள திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் இச்சந்திப்பில் பேசப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிலைபெறுதகு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

OIC உட்பட 04 பொலிஸாருக்கு...

சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டார். இரவு 12 மணியளவில் மாத்தறவத்த பிரதேசத்திலுள்ள சந்தேக நபரின் வீட்டைச் சுற்றிவளைத்து இச்சந்தேக நபரைக் கைதுசெய்தனர். பின்னர், அவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக ஆரம்ப கட்ட பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிவிக்கப்பட்டது. இந்த துப்பாக்கிச்சூட்டில் மாத்தறவத்தையைச் சேர்ந்த லொக்கு ஹென்னதிகே அமிதமகேஷ் என்பவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்கான மேற்படி சந்தேக நபரை வீட்டிலிருந்து வெளியில் அழைத்து, செத்துப்போ எனக்கூறி துப்பாக்கிச்சூடு மேற்கொண்டதாகவும் மறுநாள் காலை சந்தேக நபர் அந்த வீட்டிற்கருகிலேயே உயிரிழந்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான வழக்கிலேயே ஹம்பாந்தோட்டைமேல்நீதிமன்றம்மேற்படிநால்வருக்கும் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

சம்மாந்துறை ஆசிரிய ஆலோசகர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கிவைப்பு

காரைதீவு குறூப் நிருபர்

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு தெரிவாகிய சம்மாந்துறை வலய ஆசிரிய ஆலோசகர்கள் 8 பேருக்கு நியமனக் கடிதங்கள், சம்மாந்துறை வலய கல்விப் பணிமனையில் வைத்து நேற்று(15) வழங்கி வைக்கப்பட்டது.

கல்விசார் உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வீ.ரி.சகாதேவராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது, ஆசிரிய ஆலோசகர்களுக்கான நியமனக் கடிதங்களை சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அப்துல் மஜீத் ஹைதர் அலி, நிதர்ஷினி மகேந்திரகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான றியால் பரமதயாளன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு கோட்டைக்கு சாரணிய அணியினர் விஜயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு வின்சன்ட் உயர் தர பாடசாலையின் சாரணிய அணியினர், ஒல்லாந்தரினால் நிர்மாணிக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மட்டக்களப்பு கோட்டைக்கு நேற்று (15) கள விஜயம் மேற்கொண்டனர்.

மேற்படி பாடசாலையின் சாரணிய இயக்கத்துக்குப் பொறுப்பான ஆசிரியை ஜெயசக்தி புவீந்திரனின் வழிகாட்டலில், 5 சாரணிய அணியின் 25 மாணவர்கள் இவ்விஜயத்தில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் 188ஆவது ஜெயந்தி விழா மட்டக்களப்பில்

மட்டக்களப்பு விசேட நிருபர்

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் 188ஆவது ஜெயந்தி தின விழாவையிட்டு எதிர்வரும் 20ஆம் 21ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

20ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ணரின் உருவப்படத்தை தாங்கிய ரத ஊர்வலம், கல்லடியின் உப்போடை ஸ்ரீசித்தி விநாயகர் பேச்சியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி, வலம் வரவுள்ளது. இதனைத் தொடர்ந்து மறுநாள் 21ஆம் திகதி அதிகாலை 5.15 மணிக்கு கல்லடி ராமகிருஷ்ணமிஷன் நிலையத்தில் மங்களாராத்தி, திருப்பள்ளியெழுச்சி, கொடியேற்றம், பூஜை, பஜனை, ஹோம பூஜை, பிரசாதம் வழங்குதல் ஆகியன கல்லடி ராமகிருஷ்ணமிஷன் நிலையத்தின் பொது முகாமையாளர் சுவாமி நீலமாதவானந்தர் தலைமையில் நடைபெறுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தீஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் 30 ஆவது முறையாக இவ்வருடமும் நடத்தப்பட்ட கலாபொல கண்காட்சி மற்றும் விற்பனையில் கல்லூரி மாணவர்களின் சுமார் 300 கலைப்படைப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இம் மாணவர்களை ஓவியத்துறைக்கு ஊக்குவித்த பொறுப்பாசிரியர்களான நஜிமுதீன் ஹிஸ்வானுஸ் ஸமான், மஹரூப் பாத்திமா பர்மிலா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு கொழும்பு 07 பௌத்தாலோக்க மாவத்தையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலையடிவேம்பில் ஆய்வுநூல் வெளியிட்டு வைப்பு

வாச்சிக்குடா விசேட நிருபர்

ஆய்வாளரும் தொல்லியலாளருமான கலாபூஷணம் நா.நவநாயகமூர்த்தியினால் எழுதப்பட்ட 'பண்டைய மட்டக்களப்பு வரலாற்றில் அக்கரைப்பற்றும் தமிழரும்' எனும் ஆய்வு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

ஜீவாதார சித்தவித்தியா அறக்கட்டளையின் ஏற்பாட்டிலும் அக்கரைப்பற்று தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையுடனும் ஆலையடிவேம்பு கலாசார மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) இந்நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. ஜீவாதார சித்தவித்தியா அறக்கட்டளை ஸ்தாபகர் செல்லத்துரை விக்னேஸ்வரமூர்த்தி நூலை வெளியிட்டு வைக்க, முதல் பிரதியை பிரபல வர்த்தகர் எஸ்.பரநாதன் பெற்றுக்கொண்டார்.

இதில் இமயமலை ரிஷிகேசு சுவாமிகள் நித்தியானந்த சரஸ்வதி மகராஜ் அருளாளராகக் கலந்து கொண்டதுடன், பிரதம அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக வேந்தர், பேராசிரியர் மா.செல்வராஜா, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஹபரணையில் நடைபெறவுள்ள 'ஆழ்ந்த ஜங்கிள் இசை, கலாசார விழா'

யானைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகும்

ஹபரணையில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ள 'ஆழ்ந்த ஜங்கிள் இசை மற்றும் கலாசார விழா' அப்பகுயில் வாழும் விலங்கினங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் தெரிவித்துள்ளது.

நிப்போன் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந் நிலையத்தின் கருத்து,

ஹபரணையில் நன்கு அறியப்பட்ட யானை வழித்தடம், சுற்றுச் சூழல் பூங்காவை கவுடுல்லாவுடன் இணைக்கிறது. மின்னேரியா தேசிய பூங்காவும் அருகாமையில் உள்ளது.

இந் நிகழ்வுக்கு ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் போன்றவற்றின் அனுமதியும் பெறப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கிறது.

இது ஒரு பாதுகாப்பட்ட காடு, தினமும் 150,200 யானைகள் இந்த யானை வழித்தடத்தை கடக்கின்றன. ஆனாலும், வனவிலங்கு பாதுகாப்புத் துறையினர் பகுதிக்கு இந்த காடு வராது என்று கடிதம் மூலம் அறிவித்துள்ளது. இந்த நிகழ்வு குறித்து வன மற்றும் வனவிலங்கு அமைச்சு கூட அறிந்திருக்கவில்லை என்று நாங்கள் அறிந்தோம்.

யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்பதால், வனத்துறையினர் குறைந்த இரைச்சல் அளவை பராமரிக்க ஏற்பாட்டாளர்களுக்கு வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கரந்தகஸ்வெவ நீர்த்தேக்கத்தின் கரை மற்றும் குளத்தின் கரையில் தங்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இரவில் விலங்குகளுக்கு இரைச்சலுக்கும் சத்தத்திற்கும் எதிராக செயற்பட கூடியமையாகும். விலங்குகளுக்கு கேட்கும் திறன் அதிகமாகும்.

அதிக சத்தமும் வன விலங்குகளுக்கு இடையூறு விளைவிக்கும் என்பதால் காடு ஒரு அமைதியான மண்டலமாக கருதப்படுகிறது.

யானைகள் உள்ளிட்ட வன விலங்குகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும். அத்தோடு பிரகாசமான விளக்குகள் வனவிலங்குகளுக்கு தீங்கு விளைவிக்கும். ஆகையால் யானை வழித்தடங்களை மறித்து செய்யவுள்ள இசை நிழ்ச்சி, கலாசார நிகழ்வால் யானைகள் வெளியில் செல்வதால் யானைகள் விபத்துகளில் சிக்குவது, ரயில்களில் அடிபடவோ அல்லது குடியிருப்புக்குள் நுழையவோ வாய்ப்பு உள்ளன. இதனால் பெரும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் நடத்தப்படும் இந் நிகழ்வுக்கு நாம் எதிர்ப்பில்லை இதை நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசத்தில் வாழும் யானைகளுக்கு பாதிப்பை ஏற்படுவதை தடுப்பதே எமது முயற்சியாகும்.

இம்பீரியல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹையர் எஜுகேஷன் (IIHE) பாரதிய பொறியியல் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு பல்கலைக்கழகத்துடன் (BESTIU) இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.

மாணவ, மாணவிகளுக்கான வழிகாட்டல் செயலமர்வு – 2023

கல்வி மற்றும் தொழிற் துறைகளில் நவீன சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் நாஸ் கலாசார நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்முறை க.பொ.த உயர்தா பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான கல்வி, ஆன்மிக வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் கொத்தட்டுவ நாஸ் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. காலை 8:30 மணி முதல் மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ள இந்த செயலமர்வில் இலங்கையில் இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற விரிவுரையாளர்களால் பல்வேறு தலைப்புகளில் விரிவுரைகள் நடாத்தப்பட உள்ளன.

பெப்ரவரி 22ஆம் திகதி புதன்கிழமை மாணவிகளுக்கும், 23ஆம் திகதி வியாழக்கிழமை மாணவர்களுக்கும் என வெவ்வேறாக இந்த செயலமர்வு இடம்பெறவுள்ளது.

இந்த கருத்தரங்கில் நீங்களும் கலந்து கொண்டு பயன்பெற விரும்பின் 075 067 0556, 077 067 0551 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு உங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளுங்கள்.

பொத்துவில் பிரதான பஸ் டிப்போவுக்கு காணி அனுமதிப்பத்திரம் கையளிப்பு

அதிநவீன பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கவும் ஏற்பாடு

ஒலுவில் விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதான பஸ் டிப்போவுக்கான காணி அனுமதிப்பத்திரம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதாக, அந்த டிப்போவின் முகாமையாளர் ஏ.எம்.முபாறக் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதான பஸ் டிப்போவை தரமுயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபின் அழைப்பை ஏற்று, இலங்கை போக்குவரத்து சபையின் தவிசாளர் எஸ்.எம்.டி.எல்.கே.டி. அல்விஸ் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அண்மையில் வருகை தந்து, பொத்துவில் பிரதான பஸ் டிப்போவை பார்வையிட்டிருந்தனர்.

மேற்படி டிப்போவின் அமைவிடம், அதன் விஸ்தீரணம், ஆளணி வளம், பௌதீகக் கட்டமைப்பு தொடர்பாக அவர்கள் கவனம் செலுத்தியிருந்தனர். இதுவரை காலமும் பொத்துவில் டிப்போ அமைந்துள்ள காணிக்கு உரித்தான ஆவணம் இல்லாததைத் தொடர்ந்து, தற்போது மேற்படி ஆவணம் பொத்துவில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொத்துவில் பஸ் டிப்போவுடன் இணைந்ததாக அதிநவீன பஸ் தரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பொத்துவில் பஸ் டிப்போ தரமுயர்த்தப்படும் பட்சத்தில் தூரப் பிரதேசங்களுக்கான நவீன பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் பொத்துவில் பாணாம, லகுகல, கோமாரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் நன்மை அடைவார்களெனவும், அவர் தெரிவித்தார்.

மூதூர் பிரதேசத்தில் ஆயிரம் தென்னங்கன்றுகள் விநியோகம்

மூதூர் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களில் தோட்டக்காணிகள் வைத்திருப்பவர்கள் மத்தியில் தெங்குச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் உரிய பயனாளிகளுக்கு 'சிற்றிகாடின்' எனும் அமைப்பின் உதவியுடன் 1,000 தென்னங்கன்றுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) வழங்கி வைக்கப்பட்டன.

தம்பலகாமம் முஸ்லிம் வாலிபர் சங்கம், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸ் உள்ளிட்டோரின் வேண்டுகோளுக்கமைய, மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து பயனாளிகளுக்கு இத்தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

தோட்டக்காணிகள் வைத்திருப்பவர்கள் மத்தியில் சுமையற்ற வாழ்க்கைப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு உதவும் முகமாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளதாக, 'சிற்றிகாடின்' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹிழ்று அலி சித்தீக் தெரிவித்தார்.

ජාතික ලොටරිය මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.02.14
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5031
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,136,616.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 4 2 5 9 0

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1379
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 300,149,194.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து G
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 50 56 67 80

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3273
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 78,775,215.20
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 20 34 35 53

ராசி சுப மலன்
சீட்டிழுப்பு இலக்கம் 340
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,943,118.60
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 03 21 31 58
விசேட இலக்கினம் மீனம்

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1486
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,645,950.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 5 3 4 5 8 8

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1061
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,752,724.80
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 06 13 33 71

கம்பளை தனியார் வங்கி கொள்ளை; ஏழு பேர் கைது

பணம், வேன், மோட்டார் சைக்கிள் இரண்டு தங்க நெக்லஸ்கள் மீட்பு

கம்பளை நிருபர்

கம்பளை நகரில் உள்ள தனியார் வங்கியை உடைத்து கொள்ளையிடப்பட்ட பணத்தில் பதினெட்டு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டுள்ளதுடன்,

வேன், மோட்டார் சைக்கிள், இரண்டு தங்க நெக்லஸ்கள், மூன்று கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன. ஏழு சந்தேக நபர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு இரட்டைச் சகோதரர்கள் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட பணம், டெபாசிட் செய்யும் இயந்திரம் அகற்றப்பட்டு, கலஹா ஆல்வத்த குவாரிக்கு அருகில் உள்ள குன்றின் கீழே போடப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களில் நால்வர் புத்தளம் வான வீதியில் வசிப்பவர்கள் எனவும் எஞ்சிய மூவர் கலஹா தெல்தோட்டை கிறேட்வெளி பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கிக் கொள்ளை கடந்த ஜனவரி 24ஆம் தேதி அதிகாலை ஒரு மணியளவில் நடந்தது.

கே.டி.எச். வேன் ஒன்றும் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸாரின் விசாரணையில், இந்தக் கொள்ளையர்கள் வாடகை அடிப்படையில் வேனை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும், இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் அவர்கள் ஈடுபடவில்லை எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்கள் கலஹா பிரதேசத்தில் இதற்கு முன்னர் இடம் பெற்ற வங்கிக் கொள்ளை மற்றும் இரண்டு தங்க நகை கடை கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் முச்சக்கரவண்டி விபத்து: மூவர் காயம்

நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் முச்சக்கரவண்டி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டி சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து கடந்த ஜனவரி 20 ஆம் திகதி இடம் பெற்ற விபத்தில் வேனில் பயணித்த 6 பேரும் முச்சக்கவரவண்டி சாரதியுமாக 7 பேர் உயிரிழந்தனர். அதே இடத்தில் வீதியினை விட்டு கீழிறங்கி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த மூன்று ஆண்கள் பலத்த காயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவ இடத்திற்கு விரைந்த போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மாவனல்லை பிரதேச சபை தலைவர் பதவி நீக்கம்

காவத்தை தினகரன் விசேட நிருபர்

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் மாவனெல்ல பிரதேச சபை தலைவர் ரங்கோத் ஜேடிகே நோயல் தசந்த ஸ்டீவன் அந்த பதவியில் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்;.

2023 பெப்ரவரி 14ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அந்த பதவியில் அவர் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநரினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய 14ஆம் திகதி இலக்கம் 2319/38 கொண்ட விசேட வர்த்தமானியின் ஊடாக மாவனெல்ல பிரதேச சபை தலைவரை அந்த பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

1989 இலக்கம் 12ஐ கொண்ட மாகாண சபை சட்டத்தின் இரண்டாவது பிரிவில் கூறப்பட்டுள்ளதற்கு அமைய மற்றும் 1987 இலக்கம் 15 ஐ கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 185(3) (அ) (i) பிரிவின் படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய சப்ரகமுவ மாகாண ஆளுநரினால் இவ்வாறு செயல்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்திற்கமைய சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் மாவனெல்ல பிரதேச சபையின் தலைவராக அந்த பிரதேச சபையின் உப தலைவரான கோரலே கெதர பியதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவனெல்ல பிரதேச சபை தலைவர் ரங்கோத் ஜேடிகே நோயல் தசந்த ஸ்டீவன் இலஞ்ச ஊழல் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டுள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

ஹற்றன் டிப்போவுக்கு ரூபா 127 இலட்சம் வருமானம்

கினிகத்தேனை தினகரன் நிருபர்

சிவனொளிபாதமலைக்கு யாத்திரிகர்கள் வருகை தருவது அதிகரித்துள்ளமை காரணமாக கடந்த வார இறுதியில் ஹற்றன் டிப்போவுக்கு ரூபா 127 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளதாக அதன் பொறுப்பதிகாரி டப்பிள்யூ ஜீ.ஜே.கே.கீர்த்திரத்தின தெரிவித்துள்ளார்.

அதன் அடிப்படையில் இம் மாதம் 11,12,13 ஆகிய திகதிகளில் முறையே ரூபாய் 38 இலட்சமும், ரூபாய் 43 இலட்சமும், ரூபாய் 46 இலட்சமும் வருமானமாக கிடைக்கப்பெற்றுள்ளது.

சிவனொளிபாதமலைக்கு வருகை தரும் யாத்திரிகைகளுக்கான விசேட ஏற்பாடுகளை ஹற்றன் டிப்போவினால் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவை காரணமாக குறித்த வருமானம் கிடைத்துள்ளதாக டிப்போவின் பொறுப்பதிகாரி டப்பிள்யூ ஜீ.ஜே.கே.கீர்த்திரத்தின மேலும் தெரிவித்தார்.

மத சகவாழ்வுக்கான செயலமர்வு சர்வமத சமயக் குழுவின் ஏற்பாட்டில் பண்டாரவளை ஹோட்டலில் நேற்று (15) இடம்பெற்றது. இதன் போது சர்வ மத பெரியார்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச காரியாலய உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படம்: ஊவா சுழற்சி நிருபர்)

மஹாசிவாராத்திரி தினத்தை முன்னிட்டு பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினூடாக மஹா சிவலிங்க ரத பவனி திங்கட்கிழமை தலவாக்கலை நகரின் டிஜஆர் கோவிலிருந்து ஆரம்பித்து நேற்று வட்டவளை நகரத்திற்கு வருகை தந்தத போது...

(படம்: கினிகத்தேனை தினகரன் நிருபர்)

வெளிநாட்டில் தொழில் தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட இருவர் கைது

பதுளை தினகரன் விசேட நிருபர்

பதுளை, பசறை, லுணுகலை, பண்டாரவளை ஆகிய பகுதிகளில் உள்ள பெருந்தோட்ட இளைஞர்கள் சுமார் 121 நபர்களிடம் மூன்றரை இலட்சம் ரூபாய் பணம் பெற்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்காரவின் செயல்திட்டத்தின் கீழ் வெளிநாட்டில் தொழில் பெற்று தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்டதாக பதுளை பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்களினால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்போது லுணுகலகம, லுணுகலை பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய நபரும் லுணுகலகம லுணுகலையைச் சேர்ந்த 48 வயதுடைய நபர் ஒருவரும் பதுளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் அடாவத்தை லுணுகலை பகுதியைச் சேர்ந்த ஒருவர் பாதிக்கப்பட்ட இளைஞர்களினால் பதுளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரும் போது குறித்த சந்தேக நபரின் சகோதரியினால் அவசர தொலைபேசி இலக்கம் 119 ற்கு அழைப்பு ஏற்படுத்தி தனது சகோதரன் வந்த வாகனத்தில் நால்வரினால் கடத்தி செல்வதாக முறைப்பாட்டைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு சுமார் 11.30 மணியளவில் லுணுகலை நகரில் காவல் கடமையில் இருந்த லுணுகலை பொலிஸாரினால் CBB 7403 என்ற இலக்கமுடைய வாகனத்தை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்திய போது வாகனத்தில் இருந்த லுணுகலை அடாவத்தை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் தன்னைத் தாக்கி கடத்திச் செல்வதாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

இதன்போது குறித்த இளைஞர்களால் தான் தாக்கப்பட்டதாக பொலிஸாரிடம் கூறியதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட சந்தேக நபர் லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதோடு, பண்டாரவளை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய நபர் ஒருவரும் அதே பகுதியை சேர்ந்த 39 வயதுடைய நபர் ஒருவரும், 47 வயதுடைய அதே பகுதியை சேர்ந்த மேலும் ஒரு நபருமாக மொத்தம் நான்கு நபர்கள் ஆட்கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதோடு வாகனமும் லுணுகலை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விமர்சன அரசியலை கைவிட்டு திட்டங்களை முன்வைத்து பிரசாரம் செய்வோம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி நிச்சயம். மாபெரும் மக்கள் சக்தி காங்கிரஸ் பக்கமே உள்ளது. இங்கு விமர்சன அரசியல் தேவையில்லை. நாம் எமது திட்டங்களை முன்வைத்தே பிரசாரம் செய்கின்றோம். மக்களும் அதனையே விரும்புகின்றனர்.

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி நடை போட்டது போல, இம்முறையும் காங்கிரஸ் வெற்றி வாகை சூடும். ஏனெனில் அன்றும் இன்றும் என்றும் மக்கள் சக்தி எம் பக்கமே. என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருத பாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் கொட்டகலை பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து ஆரம்பக் கட்ட பிரசார கூட்டம் இறை வழிபாடுகளுடன் நேற்று முன்தினம் கொட்டகலை பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத், உப தலைவர் பாலசுப்பிரமணியம் மற்றும் உறுப்பினர்கள், வேட்பாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பொகவந்தலாவில் சிறுத்தை இறைச்சியை விற்ற நால்வர் கைது

ஹற்றன் சுழற்சி நிருபர்

பொகவந்தலாவ பகுதியில் உள்ள தேயிலை தோட்டங்களில் சுற்றித்திரிந்த சிறுத்தையை கொன்று இறைச்சிக்காக விற்பனை செய்த நான்கு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுத்தையைக் கொன்று அதன் இறைச்சியை விற்பனை செய்து கொண்டிருந்த போது நான்கு சந்தேக நபர்களையும் கொல்லப்பட்ட சிறுத்தையின் உடலின் ஒரு பகுதியையும் பொகவந்தலாவ பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் பொகவந்தலாவ கொட்டியாகலை தோட்டத்தின் மேல் பகுதியில் வசிப்பவர்கள் என்பதுடன், அதனை அண்டிய சமனல இயற்கை சரணாலயத்தில் சுற்றித்திரியும் சிறுத்தைகள் இரை தேடி தேயிலை தோட்டத்திற்கு வரும்போது கம்பிக்கூடு அமைத்து பிடித்து கொன்றுள்ளனர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட சிறுத்தையின் உடல் பாகங்கள் நல்லதண்ணி வன ஜீவராசிகள் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் பொகவந்தலாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அமரர் சந்திரசேகரனின் படத்தை எமக்கு மட்டுமே பயன்படுத்த முடியும்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் சந்திரசேகரனின் படத்தை வைத்து, பிரதேச சபை தேர்தலில் பிரசாரம் செய்வதற்கு மலையக மக்கள் முன்னணிக்கு மாத்திரமே உரிமையுள்ளது என தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன், மலையக மக்கள் முன்னணியிலிருந்து விலக்கப்பட்டவர்களோ அல்லது கட்சிக்கு தொடர்பில்லாதவர்கள் யாரும் பயன்படுத்த முடியாதென தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபை தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில் பல பகுதிகளில் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.ஆனால் கை சின்னத்தில் போட்டியிடும் நுவரெலியா வேட்பாளர்கள் மற்றும் கார் சின்னத்தில் போட்டியிடுபவர்கள் அமரர் சந்திரசேகரனின் உருவபடத்தை இட்ட பதாதைகளை முகநூலிலும் ஏனைய பொது இடங்களிலும் காட்சிப்படுத்தி பிரசாரம் செய்து வருகின்றனர் என்றார்.

கங்காதீஸ்வரர் யாக பீடத்தின் சிவராத்திரி தின நிகழ்வுகள்

நுவரெலியா தினகரன் நிருபர்

கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கங்காதீஸ்வரர் யாக பீடத்தின் சிவராத்திரி தின நிகழ்வுகள் மிகவும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனைத்து எற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பீடத்தின் ஸ்தாபகர் சாமி கங்காதரன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை சிவாராத்திரி தினத்தை முன்னிட்டு விசேட யாக பூஜையும் நான்கு சாம பூஜைகளும் நடைபெறவுள்ளது. இதன்போது பூஜையில் கலந்து கொள்கின்ற அனைத்து பக்த அடியார்களுக்கும் சுயம்பு லிங்கம் மற்றும் படிக லிங்கம் ஆகியன இலவசமாக வழங்கப்படவுள்ளதுடன் பிரசாதமும் வழங்கப்படுகின்றது.

எனவே பூஜைகளில் கலந்து கொள்ள விரும்புகின்ற அனைத்து பக்த அடியார்களும் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.முன்பதிவு செய்து கொள்கின்றவர்களுக்கு மாத்திரமே சுயம்பு லிங்கம் மற்;றும் படிக லிங்கம் ஆகியன இலவசமாக வழங்கப்படும்.

பதிவு செய்து கொள்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் 0112 055308 அல்லது 0777310088

ஆரோக்கிய அறிவியல்

முஹம்மத் மர்லின்

நீரிழிவு ஒரு நோயா?

இன்றைய காலகட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் ஆரோக்கிய பிரச்சினைகளில் நீரிழிவு நோயும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உலகிலேயே இந்நோயாளர்கள் அதிகமுள்ள நாடாக இந்தியா விளங்குகிறது.இந்நாட்டிலும் குறிப்பிடத்தக்களவிலானோர் இப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

நீரிழிவு என்பது நோய் என்பதை விட குறைபாடு என்றுதான் கூறவேண்டும். உடலில் குளுக்கோஸ் சமிபாடு அடைய இன்சுலின் அவசியம். அது சதையீயின் மூலம் சுரக்கப்படுகிறது. இழையங்களுக்குப் தேவையான குளுக்கோஸ் ஊட்டச்சத்தை அளித்து மிகுதியைக் ஈரலில் சேமித்து வைக்கும் அளவுக்கு இன்சுலின் சுரக்கப்படுவது அவசியம். ஆனால் இன்சுலின் அளவு குறைவதால் தான் நீரிழிவு ஏற்படுகிறது. இதை உரிய நேரத்தில் உரிய குருதிப்பரிசோதனையின் ஊடாகக் கண்டறிந்து உணவுப் பழக்கம், மருந்துகள் போன்றவற்றின் ஊடாக இன்சுலின் சுரப்பதன் அளவைப் சீராகப் பேணிக்கொள்ள வேண்டும். அப்போது மாரடைப்பு போன்ற விளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அதேநேரம் இந்த நீரிழிவானது பரம்பரையாக ஏற்படக்கூடிய குறைபாடும் கூட. பெற்றோருக்கு இக்குறைபாடு காணப்பட்டால் அது பிள்ளைகளுக்கும் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது. குறிப்பாக பெற்றோரில் இருவருக்கும் நீரிழிவு காணப்பட்டால் அது பிள்ளைகளுக்கு ஏற்படுவதற்கான சாத்தியம் நூறு வீதம் என்றும் இருவரில் ஒருவருக்கென்றால் பிள்ளைகளுக்கு ஏற்படுவதற்கான சாத்தியம் 50 வீதம் என்றும் மருத்துவ நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் பெற்றோரில் இருவருக்கும் நீரிழிவு பாதிப்பு இல்லை. ஆனால் பெற்றோரின் உடன்பிறப்புகளுக்கு இப்பாதிப்பு காணப்படுமாயின் அவர்களது பிள்ளைகளுக்கு நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியம் 25 சதவீதம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதனால் நீரிழிவு அச்சுறுத்தலுக்கு எவ்வாறான பண்புகளைக் கொண்டுள்ளவர்கள் முகம் கொடுக்கின்றனர் என்றொரு கேள்வி எழ முடியும். அது நியாயமான கேள்வியும் கூட.

உடல் பருமன் கொண்டவர்கள், வயதுக்கு ஏற்ப அளவோடு உணவை உட்கொள்ளாதவர்கள், உடலை அசைத்து உடல் உழைப்பில் ஈடுபடாதவர்கள், நொறுக்குத் தீனியில் அதிக ஆர்வம் கொண்டவர்கள், உடற்பயிற்சிகளில் ஈடுபடாதவர்கள் போன்றோர் குறிப்பிடத்தகவர்களாவர். அதனால் நீரிழிவுப் பாதிப்பைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அதுவே ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும். குறிப்பாக உடல் பருமன் கொண்டவர்களுக்கு இப்பாதிப்பு ஏற்பட அடிப்படைக் காரணம், இப்பாதிப்பு குறித்த போதிய விளக்கமும் புரிதலின்மையும் ஆகும்.

அதாவது உடலில், இயல்பை விடவும் இன்சுலின் அளவு குறைவடைந்து காணப்படுமாயின் உடல் பருமன் கொண்டவர்களுக்கு நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியம் மிக அதிகம். அதற்கு உடலில் இன்சுலின் பற்றாக்குறை பெரிதும் பங்களிக்கும். அதன் காரணத்தினால் உடல் எடையை ஒழுங்குமுறையாகப் பேணிக்கொள்ள வேண்டும். அதன் ஊடாக நீரிழிவு ஏற்படுவதை ஒன்றில் தவிர்த்துக் கொள்ளவோ அல்லது தள்ளிப் போடவோ முடியும்.

அதேநேரம் பச்சை நிற மரக்கறி வகைகளை அன்றாட உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவும் தவறலாகாது. அத்தோடு அடிக்கடி பதற்றமடைவதில் இருந்தும் விலகி இருக்கவும் வேண்டும். அப்போது நீரிழிவைக் கட்டுப்படுத்திக்கொள்ளவோ தவிர்ந்து கொள்ளவோ முடியும். என்றாலும் உடலில் குளுக்கோஸின் மட்டத்தை சரியான முறையில் பரீட்சித்துக் கொள்வதற்கு எச்.பி.ஏ1.சி என்ற பரிசோதனை பெரிதும் உதவக்கூடியதாகும். அதன் ஊடாக குருதியில் குளுக்கோஸின் மட்டத்தை சரியான முறையில் பரீட்சித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதும் மருத்துவர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே நீரிழிவைத் தவிர்த்துக்கொள்வதிலும் கட்டுப்படுத்திக்கொள்வதிலும் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அது ஆரோக்கிய வாழ்வுக்கு பக்க துணையாக இருக்கும்.

புகைப்பிடித்தல் உடல் நலத்திற்கு கேடு

உடல் உள ஆரோக்கியத்திற்கு கெடுதல்களை ஏற்படுத்தும் பழக்கங்களில் புகைப்பிடித்தல் மிகவும் மோசமானதாகும். புகைப்பிடிக்கவென பயன்படுத்தப்படும் சிகரெட் உள்ளிட்டவற்றுக்கு பிரதானமாகப் பயன்படுத்தப்படும் புகையிலையில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட இரசாயனப் பொருட்கள் காணப்படுகின்றன. அவற்றில் 30க்கும் மேற்பட்ட இரசாயனப் பொருட்கள் கடும் நச்சுத்தன்மை வாய்ந்தவை.குறிப்பாக நிக்கொட்டின், சயனைட், தார் உள்ளிட்டவையும் கடும் நச்சு இரசாயனங்களில் அடங்கும்.

இவ்வாறான நச்சுப் பதார்த்தங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் புகையிலையைத் தான் புகைபிடிக்கின்றனர். இதன் விளைவாக ஏற்படக்கூடிய உடல், உளப் பாதிப்புகள் ஏராளம். ஆனால் அவை வெளிப்பட சிறிது காலம் எடுக்கும். உடனடியாக வெளிப்படாது. அதனால் தான் அதன் பயங்கரத்தன்மை குறித்து பெரும்பாலானவர்கள் பொருட்படுத்துவதாக இல்லை.

ஆனால் புகைப்பிடிப்பதன் விளைவாக வாய்ப்புற்று நோய் உள்ளிட்ட பல புற்று நோய்களும் இதய நோய்களும் நரம்புத்தொகுதி நோய்களும் என பலவிதமான நோய்களும் ஏற்படக்கூடியனவாக உள்ளன.

அந்த வகையில் புகைப்பிடிக்கப் பயன்படுத்தப்படும் பொருள் கொண்டிருக்கும் நிக்கொட்டினின் நச்சுத்தன்மையானது மிகவும் கடுமையானது. தூய நிக்கொட்டினின் ஒரு துளியை நாவில் வைத்தால் 30 முதல் 60 நிமிடங்களுக்குள் இதயம் ஸ்தம்பித்து விடலாம் என்று மருத்துவ விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனனர்.

பொதுவாக 32 சிகரெட்டுகளில் இருந்து ஒரு துளி நிக்கொட்டினைப் பெற்றுக்கொள்ளலாம் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேபோன்று தான் சயனைட்டும் கடும் விஷத்தன்மை கொண்டது. அதுவும் ஒரு நிமிடத்துக்குள் உயிர் பறிக்கக்கூடிய கோரத்தன்மை கொண்ட இரசாயனம்.

இவ்வாறான நச்சு இரசாயனங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சிகரெட் உள்ளிட்ட புகைபிடித்தல் பொருட்களை பாவிப்பதன் விளைவாக உடலுக்கோ உள்ளத்திற்கோ எவ்வித நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அவை உடல் உளப் பாதிப்புக்களையே தேடித்தரும். இவற்றுக்கு சிகிச்சை அளிக்கவும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட நேரிடும்.

இலங்கையில் அதிகளவானோரின் மணங்களுக்கு பங்களிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக சிகரெட் உள்ளிட்ட புகைப்பிடித்தல் பொருட்கள் விளங்குகின்றன. இதனை இலங்கை சுகாதாரத் துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம், புகைப்பிடித்தலானது புகைப்பிப்பவரை மாத்திரமல்லாமல் புகைபிடிப்பவர் வெளியேவிடும் புகையைச் சுவாசிக்கும் புகைபிடிக்காதவர்களையும் பாதிக்கக்கூடியனவாகும். குறிப்பாக கர்ப்பையில் இருக்கும் சிசுக்களையும் கூட பாதிக்கக்கூடியது தான் புகைபிடித்தல் எனவும் மருத்துவ நிபுணர்கள் சுட்டுக்காட்டியுள்ளனர். ஆகவே உடல் உள ஆரோக்கியத்திற்கு கெடுதல்களைத் தேடித்தரக்கூடிய புகைப்பிடித்தல் பழக்கத்தைத் தவிர்த்துக்கொள்வதில் ஒவ்வொருவரும்கூடுதல்கவனம்செலுத்த வேண்டும். அதன் ஊடாக புகைப்பித்தல் ஊடாக ஏற்படக்கூடிய கெடுதல்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மெனோபாஸ் மாதவிடாய் சுற்றுவட்டம் நின்று போதல் பெண்களுக்கு நன்மை பயப்பவை

மெனோபாஸ் என்பது பெண்களின் உடலில் இயல்பாக நிகழக்கூடிய ஒரு மாற்றமாகும். பொதுவாக சினைப்பையானது தான் சுரக்கும் ஈஸ்ட்ரஜன் ஹோர்மோன் அளவை படிப்படியாகக் குறைத்துக் கொண்டே வரும். இதனை மாதவிடாய் சுற்றுவட்டம் நின்று போவதற்கு முன்னரான காலமாகும். இது ஒரு கட்டத்தில் ஈஸ்ட்ரஜன் சுரப்பது முழுமையாக நின்று, மாதவிடாய் வெளியேறுவதும் முற்றுப்பெற்றுவிடும். இதனையே மாதவிடாய் சுற்றுவட்டம் நின்று போதல் எனப்படுகிறது.

ஈஸ்ட்ரஜன் ஹோர்மோன் சுரப்பது குறைவதால் எலும்புகளின் அடர்த்தியும் குறைவடையும். ஆனால் கொலஸ்ட்ரோல் அளவு அதிகரிக்கும். எதுவுமே சாப்பிடா விட்டாலும் உடல் எடை அதிகரிக்கும். அதேபோன்று மாதவிடாய் சுற்று வட்டம் நின்று போன பெண்களுக்கு இதய நோய் பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகம்.

அதனால் மாதவிடாய் சுற்றுவட்டம் நின்று போன பெண்களுக்கு கொழுப்பு குறைவான தாவர உணவு வகைகள் ஏற்றவை. கல்சியம் அதிகமுள்ள பால், தயிர், யோகர்ட் போன்றவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இந்த உணவுகளில் விட்டமின் டி, விட்டமின் கே, பொற்றாசியம், பொஸ்பரசு, மக்னீசியம் போன்றவையும் காணப்படுவதால் எலும்புகளின் ஆரோக்கியத்துக்கும், தூக்கத்துக்கும் அவை உதவும்.

இப்பருவத்தில் ஆரோக்கியமான கொழுப்பு மிகவும் அவசியம். கொழுப்பு என்றாலே ஆபத்தானது எனக் கருதக்கூடாது. மீன்கள், சோயா உள்ளிட்டவற்றில் காணப்படும் ஒமேகா 3 கொழுப்பு அமிலமானது மாதவிடாய் சுற்றுவட்டம் நின்று போனவர்களுக்கு ஏற்படும் வியர்வை, உடல் சூடாதல் போன்றவற்றைக் குறைக்க பெரிதும் உதவக்கூடியதாகும். அதேநேரம் தீட்டாத தானியங்கள், சிறுதானியங்கள் போன்றவற்றை உணவாக உட்கொள்வதன் மூலம் நார்ச்சத்து கிடைக்கப்பெறும். விட்டமின் பி சத்தும் கிடைக்கும். அதனால் இதய நோய் அபாயம் குறைவடையும்.

மரக்கறி வகைகள், பழங்களில் நார்ச்சத்து மட்டுமன்றி, அன்டி ஒக்ஸிடன்ட்டுகளும் அதிகம். அவையும் இப்பருவத்தினருக்கு மிக அவசியம். அதேநேரம் உடல் எடைக்கேற்ப புரதச்சத்து உணவு வகைகளை உண்ண வேண்டும். அதிகம் குளுக்கோஸ் சேர்க்கப்பட்ட உணவு வகைகளையும், கார்போஹைதரேட்டு அதிகமுள்ள உணவு வகைகளையும் கட்டாயம் தவிர்க்க வேண்டும்.

இவற்றுடன் தினமும் சிறிது நேரம் உடலில் வெயில் படும்படி இருப்பதும், உடற்பயிற்சி செய்வதும் பெரிதும் நன்மை பயக்கூடியதாகும்.

கிழக்கின் குரல்

ரணவிரு சேவா உதவி கோருவோர் தொகை மட்டக்களப்பில் குறைவு

ரணவிரு சேவாவின் கிழக்கு மாகாண பணிப்பாளர்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரணவிரு சேவா குடும்பங்களிடமிருந்து நலன்புரி சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோள்கள் கிடைப்பது மிகக் குறைவாக உள்ளதாக, ரணவிரு சேவாவின் கிழக்கு மாகாண பணிப்பாளர் டபிள்யூ.டி.ஹேமச்சந்திர தெரிவித்தார்.

அவ்வாறு வேண்டுகோள்கள் கிடைக்கும் பட்சத்தில், நாட்டின் வேறு பகுதிகளிலுள்ள ரணவிரு சேவா குடும்பங்களுக்கு நலன்புரிச் சேவைகளை வழங்குவது போன்று, மட்டக்களப்பு மாவட்ட ரணவிரு சேவா குடும்பங்களுக்கு நலன்புரிச் சேவைகளை வழங்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புத் தரப்புக் குடும்பங்களின் நலன் பேணும் அமைப்பான ரணவிரு சேவா சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு, மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக மண்டபத்தில் நேற்று (15) நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, ரணவிரு சேவா மட்டக்களப்பு மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர் சமத் லியனகே, மட்டக்களப்பு மாவட்ட ரணவிரு சேவா குடும்பங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த யுத்தத்தின் போது, பாதிக்கப்பட்ட பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த சுமார் 144 குடும்பங்கள் உள்ளன.

இவர்களில் தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு ஏற்கெனவே சிறந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ரணவிரு சேவா அமைப்பினூடாக பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் ரணவிரு சேவா குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு கல்வி உதவி, அங்கவீனர்களுக்கு உதவி, இலவச மருத்துவ வசதி, குறைந்த வட்டியில் வீட்டுக் கடன், சுயதொழிலுக்கு கடன் வசதி உட்பட இன்னும் பல்வேறு நலன்புரிச் சேவைகள் உள்ளன. ஆயினும், இந்த உதவிகளைக் கோரி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வேண்டுகோள்கள் கிடைப்பது குறைவாக உள்ளது" என்றார்.

ஆகவே, இவ்வருடத்திலிருந்தாவது ரணவிரு சேவா குடும்பங்கள் நலன்புரி சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ரணவிரு சேவா குடும்பங்களின் நன்மை கருதி இடம்பெயர் சேவையை நாம் நடத்தவுள்ளோம். இதில் ரணவிரு சேவா குடும்பங்கள் தமது பிரச்சினைளைத் தீர்க்க முடியுமென்பதுடன்,

சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற தீவைப்பு; 3 சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பகத்துக்கு தீ வைத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூவரின் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தேக நபர்களை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்று முன்தினம் (14) உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி அதிகாலையில் மேற்படி நீதிமன்றக் கட்டடத்தொகுதிக்கு தீ வைக்கப்பட்டதுடன், இத்தீயினால் நீதிமன்றத்தின் வழக்குப் பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் உள்ளிட்ட பல பிரிவுகளிலுள்ள ஆவணக் கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இது தொடர்பான பொலிஸாரின் விசாரணையின் போது, நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. கமெராவில், மூவர் முகத்தை மூடியவாறு நீதிமன்ற வளாகத்தினுள் நுழைந்து கட்டடத்துக்குத் தீ வைத்து விட்டு தப்பியோடிய காட்சி பதிவாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, அக்கரைப்பற்றின் கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 28, 24,19 வயதுடைய இச்சந்தேக நபர்கள் மூவரும், கல்முனையின் பெரியநீலாவணை பிரதேசத்தில் மறைந்திருந்த போது, கடந்த டிசெம்பர் 28ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

தேர்தலில் வாக்களிப்பதை மக்கள் கடமையாகக் கருத வேண்டும்

கபேயின் மட்டு. இணை ஒருங்கிணைப்பாளர்

ஆரையம்பதி தினகரன் நிருபர்

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், தமது தலையாய கடமையாகக் கொண்டு மக்கள் வாக்களிக்க முன்வர வேண்டுமென, கபே அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணை ஒருங்கிணைப்பாளர் ஏ.எல்.எம்.மீரா ஸாகிப் நேற்று (15) தெரிவித்தார்.

வாக்களிக்காமல் விடும் போது, பொருத்தமில்லாத ஒருவர் தெரிவு செய்யப்படுவதற்கு காரணமாவதுடன், அதில் வாக்களிக்காதவர்கள் பங்கேற்கும் நிலைமை ஏற்படும்.

ஆகையினால், சமூக அக்கறை கொண்ட ஒருவரைத் தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் நிதானமாகச் சிந்தித்து ஆளுமை மிக்க பிரதிநிதிகளை தெரிவு செய்வது, பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் தலையாயக் கடமையெனவும், அவர் தெரிவித்தார்.

வெல்லாவெளியில் யானை உயிரிழந்த நிலையில் மீட்பு

மட்டக்களப்பு சுழற்சி, மண்டூர் தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட கச்சிக்கொடி சுவாமிமலை பிரதேசத்தின் இயாக்காலி குளப்பகுதியில் 25 வயது மதிக்கத்தக்க காட்டு யானையொன்று இறந்த நிலையில் நேற்று முன்தினம் (14) மீட்கப்பட்டுள்ளது.

இக்காட்டு யானையானது, கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இறந்திருப்பதுடன், அதன் தாடையில் இரத்தக் காயம் காணப்படுவதாக, வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல் தெரிவித்தன.

இது தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வெல்லாவெளி அலுவலகத்துக்கு கச்சிக்கொடி சுவாமிமலை கிராம அலுவலர் கே.சிவகுருநாதன் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, வன ஜீவராசிகள் திணைக்களத்தின் வெல்லாவெளி பிரதேச அலுவலகத்தின் பொறுப்பதிகாரி பி.ஜெகதீஸ்வரன் தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று யானையை மீட்டுள்ளனர்.

பிரேத பரிசோதனையின் பின்னர் யானை இறந்தமை தொடர்பாக தெரியவருமெனவும், வன ஜீவராசிகள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

ஐஸ் போதையுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

ரொட்டவெவ குறூப் நிருபர்

ஐஸ் போதைப்பொருளுடன் திருகோணமலையில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் உத்தரவிட்டுள்ளார்.

ஜமாலியா பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஆணொருவருக்கும் கன்னியாவின் பீலியடி பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண்ணொருவருக்குமே இவ்விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவர் முறையே 2,700 மில்லி கிராம், 2,520 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்ட இச்சந்தேக நபர்களை நேற்று முன்தினம் (14) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு கடற்படைத் தளபதி ஆளுநரை சந்தித்து பேச்சு

கிழக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ரியர் அட்மிரல் எச்.ஈ.யு.டி.குமார, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதார யஹம்பத்தை நேற்று முன்தினம் (14) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன் போது, கிழக்கு மாகாணத்தின் கடல்சார் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக இவர்கள் கருத்துப் பரிமாறிக்கொண்டனர். (படம்:ரொட்டவெவ குறூப் நிருபர்)

செங்கலடி விபத்தில் குடும்பஸ்தர் பலி

மண்டூர் தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கலடி பதுளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் (14) உயிரிழந்துள்ளார்.

செங்கலடியை சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான 78 வயதுடைய இரத்தினம் அருளம்பலம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

செங்கலடி பிரதான வீதியூடாக கடந்த திங்கட்கிழமை (13) அவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவர், திடீரென்று வீதியின் மறுபக்கத்துக்கு செல்வதற்கு முற்பட்ட போது, பின்னால் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றில் மோதுண்டு படுகாயமடைந்தார்.

இதனையடுத்து, செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போது உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

திருப்பெருந்துறையில் கைதிகளின் பங்களிப்புடன் நெல் அறுவடை

மட்டக்களப்பு, கல்லடி குறூப், புதிய காத்தான்குடி, பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்

மட்டக்களப்பு மாவட்ட சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளினால் செய்கை பண்ணப்பட்ட நெல் வேளாண்மையின் அறுவடை, திருப்பெருந்துறையில் நேற்று (15) மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தலைமையில், பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

திருப்பெருந்துறையில், சிறைச்சாலைக்குச் சொந்தமாகக் காணப்படும் வயல் காணியில், சுமார் 10 ஏக்கரில் மட்டக்களப்பு மாவட்ட சிறைக்கைதிகளினால் சேதனப் பசளையைப் பயன்படுத்தி நெல் வேளாண்மை செய்கை பண்ணப்பட்டது. இதன் அறுவடையே மேற்கொள்ளப்பட்டது. இம்முறை சம்பா வகை நெல்லினம் விதைக்கப்பட்டதுடன், இவ் வேளாண்மைச் செய்கையில் சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட அறுவடை சிறைச்சாலை அத்தியட்சகர் என்.பிரபாகரன் தெரிவித்தார்.

இவ்வாறு நஞ்சற்ற வேளாண்மைச் செய்கையூடாக செய்கை பண்ணப்பட்ட நெல் மற்றும் மரக்கறிகளை சிறைக்கைதிகளின் உணவுக்காக பயன்படுத்தி வருவதுடன், எஞ்சும் அறுவடையை ஏனைய சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்த அறுவடை விழாவில் மட்டக்களப்பு மாவட்ட சிறைச்சாலை அதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட கமத்தொழில் அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறைக்கைதிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

கல்முனை மாநகரசபையில் துருக்கி மக்களுக்காக அனுதாபம்

கல்முனை விசேட நிருபர்

துருக்கியிலும் சிரியாவிலும் இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் உயிரிழந்த மக்களுக்காக கல்முனை மாநகர சபையில் அனுதாபப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் 59ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் (14) அம்மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்ற போதே, இப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இப்பேரழிவினால் நிர்க்கதியடைந்துள்ள மக்களின் துயரத்தில் தாம் பங்கேற்பதுடன், இதில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது அனுதாபத்தை தெரிவிப்பதாக, கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

இதில் பாதிக்கப்பட்டுள்ள மக்களும் அந்நாடுகளும் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்காக தாம் பிரார்த்திப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

ஜனாஸா சந்தூக் அன்பளிப்பு

பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

முஸ்லிம்களின் ஜனாஸாக்களை சுமந்து செல்லும் சந்தூக் மற்றும் ஜனாஸாவை குளிப்பாட்டி சுத்தம் செய்யும் தட்டும் பாலமுனை மரண உபகார நிதியத்திடம் அண்மையில் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

பாலமுனை இளைஞர் சபையின் ஏற்பாட்டில் பாலமுனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் வைத்து இவை வழங்கப்பட்டன.

இதில் பாலமுனை இளைஞர்கள் சபையின் தலைவர் ஏ.எல்.சீத், பாலமுனை ஜனாஸா உபகார நிதியத்தின் ஸ்தாபகரும் அமைப்பாளருமான ஐ.பீ.எம்.ஜிப்ரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காத்தான்குடியில் டெங்கு சோதனை; 17 வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட புதிய காத்தான்குடியில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு சோதனையின் போது, 17 வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதாக, காத்தான்குடி பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடியின் 167 பிரிவு உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வீட்டு வளாகங்களில் பொதுச் சுகாதார அதிகாரிகள் நேற்று முன்தினம் (14) டெங்கு சோதனை மேற்கொண்டதுடன், அவ்வீட்டு வளாகங்களின் சுத்தம் மற்றும் நுளம்புக் குடம்பிகள் பெருகும் இடங்களை அவதானித்தனர்.

இதன்போது, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களாக 17 வீட்டு வளாகங்கள் பொதுச் சுகாதார அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டதுடன், அவ்வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுவிக்கப்பட்டது.

இந்நிலையில், மேற்படி வீடுகளில் துப்புரவுப் பணியை துரிதமாக மேற்கொண்டு, அது தொடர்பாக தமக்குத் தெரியப்படுத்த வேண்டுமென, அவ்வீடுகளின் உரிமையாளர்களுக்கு, பொதுச் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

காத்தான்குடி சுகாதார வைத்திய அலுவலகத்தினதும் காத்தான்குடி பிரதேச செயலகத்தினதும் ஏற்பாட்டில் மேற்படி டெங்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இஸ்லாமாபாத் பாடசாலைக்கு குடிநீர் இணைப்பு வசதி

சாய்ந்தமருது விசேட நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வலயக் கல்வி பிரிவிலுள்ள கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் குடிநீர் இணைப்பு வசதி, ரஹ்மத் பவுண்டேஷன் மற்றும் வை.டபிள்யூ.எம்.ஏ. அமைப்பின் அனுசரணையில் நேற்று முன்தினம் (14) ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையில் குடிநீர் இணைப்பு வசதி நீண்ட நாள் தேவையாகக் காணப்பட்ட நிலையிலேயே, இவ்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. பாடசாலையின் அதிபர் ஏ.ஜி.எம்.றிஸாத்தின் தலைமையில் இதற்கான நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர சபையின் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர், குடிநீர் இணைப்பு வசதியைக் கையளித்து வைத்தார்.

நகர்வலம்

கம்பஹா மாவட்டம்;

வெள்ளத்தில் மூழ்குவதை தடுப்பதற்கு தேசிய வேலைத்திட்டம் அவசியம்

கம்பஹா மாவட்டம் வெள்ளப் பெருக்கினால் மூழ்குவதை தடுப்பதற்காக தேசிய திட்டமொன்றை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

அனைத்து அரச நிறுவனங்களும் இணைந்து வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜாஎல பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஜாஎல பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:

வீட்டுக்கடன் மற்றும் உதவித் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவது

என்பது குறித்து ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருடன் கலந்தாலோசித்து எனக்குத் தெரிவிக்கவும். பழைய வேலையை முடித்துவிட்டே மீண்டும் புதிய வேலையைத் தொடங்குகிறோம். முதல் கட்டமாக பெறப்படும் பணத்தில் 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் செலுத்த வேண்டிய தவணைகளை வீட்டுக் கடன் மற்றும் உதவித் தொகை என்பன செலுத்தப்படும். இரண்டாம் கட்டத்தில் வீடுகளை மேம்படுத்துவதற்கு பணம் வழங்கப்படும். இதற்கு இப்போதே தயாராகுங்கள். பணம் கிடைத்தவுடன் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

அத்துடன் கம்பஹா மாவட்டம் வெள்ளத்தில் மூழ்குவதை தடுப்பதற்கு தேசிய வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். கால்வாய்களில் அடைப்பு ஏற்பட்டால் மினுவாங்கொடை, கம்பஹா நீரில் மூழ்கும். எனவே இந்த கால்வாய்கள் அனைத்தையும் சுத்தம் செய்ய வேண்டும். இத்திட்டம் கடந்த ஆண்டு முன்னாள் ஆளுநர் தலைமையில் தொடங்கப்பட்டது. பொதுவாக, அதிகாரிகளிடம் வேலை கேட்கும் போது பெரிய அளவிலான திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கம்பஹா மாவட்டத்தில் இருந்த போது கம்பஹா மாவட்டம் வெள்ளத்தில் மூழ்குவதை தடுக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

அவ்வாறு செய்தது பெரிய காரியங்களைச் செய்வதால் அல்ல. அன்றாட வேலையைச் செய்வதாலே அவ்வாறு நடந்தது. எனவே, அரச நிறுவனங்களை பிரித்து இந்த பணியை செய்யாதீர்கள். அனைத்து அரச நிறுவனங்களுடனும் இணைந்து பணியாற்றுங்கள் என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

மின் கட்டண அதிகரிப்பை நானும் எதிர்க்கிறேன்

மாத்தறையில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர

வெலிகம தினகரன் நிருபர்

கடந்த ஆட்சிக் காலங்களில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் சரிவர எடுக்கப்படாமையினால் இன்று மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரி'ப்பை நானும் கடுமையாக எதிர்க்கிறேன் என மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் (13) இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், கடந்த காலங்களில் நிர்மாணிக்கப்படவிருந்த சாம்பூர் மின் உற்பத்தி நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாகவே கடந்த ஆண்டு 8 மணித்தியாலங்கள் வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்த வேண்டியேற்பட்டது. அது அமைக்கப்பட்டிருந்தால் குறைந்த விலையில் மின்சாரத்தை வழங்கியிருக்க முடியும். எனவே தான் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

வாகன விபத்தில் ஒருவர் பலி; நால்வர் படுகாயம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் திருகோணமலை பிரதான வீதியில் கஹட்டகஸ்திகிலிய நகருக்கு அருகாமையிலுள்ள பிரதேச செயலக பகுதியில் கடந்த (13) இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் திருகோணமலை பிரதான வீதியில் கஹட்டகஸ்திகிலிய நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள துறு செவன என்ற இடத்தில் மோட்டார் வாகனம் தொழில்நுட்ப கோளாறுக்கு உட்பட்ட போது மோட்டார் வாகனத்தின் சாரதியின் அழைப்பின் பேரில் மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளரான இறந்துள்ள நபர் அவரின் மகனுடன் குறித்த இடத்திற்கு சென்றிருந்த போது விபத்து இடம்பெற்றுள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிசார் தெரிவித்தனர்.

மோட்டார் வாகனத்தை பழுது பார்த்துக்கொண்டிருந்த போது வானில் சென்ற நபரொருவர் அவருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

வாய்த்தர்க்கம் நீண்டதனால் வானின் சாரதி வீதியின் முன்னால் சிறிது தூரம் சென்று மீண்டும் வானை திருப்பிவந்து அங்கிருந்தவர்களை மோதிவிட்டு நிறுத்தாமல் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. பலத்த காயத்திற்குள்ளானவர்கள் கஹட்டகஸ்திகிலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன். மோட்டார் வாகன இளைஞர் இறந்துள்ளதாக கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர். பலத்த காயத்திற்குள்ளான ஏனைய நால்வரும் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

'எகமுத்து' கிராமிய சந்தை திறந்து வைப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

கலென்பிந்துனுவெவ பிரதேச செயலகத்தினால் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு "எகமுத்து" (Ekamuthu) எனும் கிராமிய சந்தை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கலென்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் திரு. ஜி.எம்.கே.ஆர்.பிரியதர்ஷன தலைமையில் இந்த நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கலன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பேரெட்டுபலகம, துடுவெவ, துடுவெவ பரணகம, கடரன்புர கிராமம் ஆகிய கிராமிய பிரிவுகள் இதன் கீழ் இணைக்கப்பட்டு, இந்த வாரச்சந்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாரந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் இந்த வாராந்த சந்தையை நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் உற்பத்தியாகும் பல்வேறு வகை பொருட்கள் இங்கு குறைந்த விலைக்கு விற்பனைக்காக வைக்கப்படுவதோடு, பிரதேச விவசாயிகள் தமது உற்பத்தி பொருட்களை இலகுவாக விற்பனை செய்வதற்கான வாய்ப்பையும் இதன் மூலம் பெற்றுக் கொள்வர் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

கிரிந்தி ஓய திட்ட விவசாய சங்க உறுப்பினர்கள் சிலருக்கு மரண அச்சுறுத்தல்

சம்பந்தப்பட்டோர் கவனம் செலுத்த கோரிக்கை

ஹம்பாந்தோட்டைகுறூப் நிருபர்

கிரிந்தி ஓய திட்டத்தின் விவசாய சங்க உறுப்பினர்களுக்கு பல்வேறு தரப்பினர்களிடமிருந்தும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக கிரிந்தி ஓய ஒன்றிணைந்த விவசாய சங்கத்தின் தலைவர் எஸ். ஜாலியகொட தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட விவசாய அபிவிருத்திக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், தொண்டர் அடிப்படையில் முன் வந்து சேவையாற்றும் விவசாய சங்க உறுப்பினர்களுக்கு இவ்வாறு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுவதனால் எதிர்காலத்தில் விவசாய சங்கங்களில் சேவையாற்றுவதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். இதனால் விவசாய சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

விவசாய காணிகளில் மாடுகளை உள்ளே நுழைத்தல், கால்வாய்களுக்கு சேதம் ஏற்படும் விதத்தில் அவற்றில் மாடுகளை மேய்த்தல் மற்றும் கால்வாய்களை அடைத்து நீரைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற விவசாய நடவடிக்கைகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றோருக்கு விவசாய சங்கங்களினூடாக நடவடிக்கை எடுக்கும் போது இவ்வாறு மரணஅச்சுறுத்தல் விடுக்கின்றனர் எனவும் அவர் கவலை தெரிவித்தார்.

மொரட்டுவ மாநகர சபை செவன நிறுவனத்துடன் இணைந்து மேற்கொண்டுவரும் பிளாஸ்டிக் கழிவுப்பொருள் வேலைத் திட்டம் தொடர்பாக விசேட கலந்துரையாடல் மாநகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் நிதியுதவி அமைப்பான USAID நிறுவன வெளிநாட்டு பிரதிநிதிகள் குழு மேயர் சமன்லால் பெர்னாண்டோ தலைமையில் திட்டம் தொடர்பில் கலந்துரையாடிய பின் பார்வையிடுவதையும் மேயர் பிரதிநிதிகளுக்கு ஞாபகார்த்த பரிசு வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

கொழும்பு ரமண பீட மகா சிவராத்ரி நிகழ்வு

கொழும்பு ரமண பீடம் ஒழுங்கு செய்துள்ள மகாசிவராத்திரி நிகழ்வுகள் எதிர் வரும் சனிக்கிழமை (18) மாலை 6 மணியிலிருந்து கொழும்பு 06,

வெள்ளவத்தை, 41, விவேகானந்தா வீதியிலுள்ள காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு ரமண பீடம், மகா சிவராதிரி தினத்திலிருந்து மேலுள்ள தனது விலாசத்தில் இயங்கவுள்ளது என்பதை அன்பர்களுக்கு அறியத்தருகிறது.

பக்தி பூர்வமாக நடைபெறும் மேற்படி நிகழ்வில் பங்கேற்று இறையருளையும் குருவருளையும் பெற்றேகும் வண்ணம் அன்பர்களை கொழும்பு ரமண பீடம் அன்போடு அழைக்கிறது.

அநுராதபுரம் மாவட்டத்தில் முதலாமிடம் பெற்று சாதனை

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் மாவட்டத்தில் தமிழ் மொழிப்பாடசாலைகளில் அதி கூடுதலான புள்ளிகளை 172 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தை கெகிராவ கல்வி வலய நேகம முஸ்லிம் மகா வித்தியாலயம் மாணவி ஏ.எப்.ஹனான் பெற்றுள்ளார்.

இவர் பீ.எல்.அஸாட், ஏ.ஜீ. அஸ்மீகா ஆகியோரின் இரண்டாவது புதல்வியாகும். இவர் கல்வி துறையுடன் மட்டுமன்றி ஏனைய போட்டி நிகழ்ச்சிகளிலும் திறமை காட்டி வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ள ஒரு மாணவியாகும்.

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் இணை அமைப்பான கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனம் சகல இன மாணவர்களுக்கும் பண வவுச்சர்களைப் பகிர்ந்தளித்தது. இந்நிகழ்வு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள பௌத்த சாசன மத்திய நிலையத்தில் நடைபெற்றது. அமைப்பின் சமய விவகார இணைப்பாளர் ரிசான் ஹுசைன் மாணவர் ஒருவருக்கு வவுச்சரொன்றை வழங்குவதனைப் படத்தில் காணலாம். வெளிநாடுகளில் வாழும் முஸ்லிம்கள் இதற்கான நிதி அனுசரணையை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்லாஞ்சியகம அறபாவில் 06 மாணவர்கள் சித்தி

(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)

புலமைப் பரிசில் பரீட்சையில் கெகிராவ கல்வி வலய இபலோகம கல்விக் கோட்டத்தில் சிறந்த பெறுபேற்றை அ/ கல்லாஞ்சியகம அறபா முஸ்லிம் மகா வித்தியாலயம் பெற்றுள்ளது. இப்பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எம். நுவைஸ் தெரிவித்தார்.

இதன்படி எஸ்.ஹஸ்கா (162), ஏ.எச்.எம். அப்ரீன் (159), டப்ளியூ.அப்துல் ரஹீம் (153), எஸ்.எப்.சமீஹா (147), ஐ.எப். அனாம் (145), ஆர்.எம். இப்ராஹீம் (142) புள்ளி என ஆறு மாணவர்களும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் மேலும் தெரிவித்தார்.

பேருவளை புகாரி தக்கியாவில் 144வது வருட புகாரி மஜ்லிஸ்

(பேருவளை விசேட நிருபர்)

வரலாற்றுப் புகழ்மிகு பேருவளை மாளிகாச்சேனை பைத்துல் முபாரக் வதாருல் முஸ்தபா புகாரித் தக்கியாவில் 144வது வருட புனித ஸஹீஹுல் புகாரி தமாம் மஜ்லிஸ் பெரிய கந்தூரி வைபவம் எதிர்வரும் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

காதிரியதுன் நபவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமும் பாழில் அஷ்செய்ஹ் காமில் அஷ்செய்க் அஹம்மத் பின் முஹம்மத் ஆலிம் காதிரியதுன் நபவி தமாம் மஜ்லிஸுக்குத் தலைமை வகிப்பார்.

வெள்ளிக்கிழமை தவிர 30 நாட்கள் ஹதீஸ் பாராயணம் மற்றும் விளக்கவுரை நடைபெற்று வருவதோடு எதிர்வரும் 21ம் திகதி பகல் தமாம் பெரிய கந்தூரி நடைபெறும்.

பெப்ரவரி 20ம் மற்றும் 21ம் திகதிகளில் இலங்கை ரயில்வே திணைக்களம் வழமைபோல் கொழும்பு பேருவளை மற்றும் காலி பேருவளை இடையே விஷேட ரயில் சேவைகளை நடாத்தும். அத்தோடு கரையோர ரயில் சேவையில் ஈடுபடும் சகல கடுகதி ரயில் வண்டிகளும் பேருவளையில் நிறுத்தப்படும்.

20ம் திகதி இரவு மற்றும் 21 ஆம் திகதி பகல் நடைபெறும் தமாம் மஜ்லிஸில் நாட்டின் நாலா பகுதிகளையும் சேர்ந்த உலமாக்கள், முரீதீன்கள், முஹிப்பீன்கள், பெருமளவில் பங்குபற்றுவர்.

சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபை ஒன்றுகூடல் புதுடில்லியில்

"International Diplomats" எனப்படும் சர்வதேச மாதிரி ஐக்கிய நாடுகள் சபையின் ஒன்றுகூடல் இம்முறை இந்தியாவின் நியூடெல்லியில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சர்வதேச ரீதியில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் "International Diplomats" இன் Head of Ambassadors ஆகவும் மாநாட்டின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார். இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரும்பாலான பிரதிநிதிகள் ஆசிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்ததோடு சர்வதேச நாடுகளிலிருந்தும் பல பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். மேலும், இலங்கையிலிருந்து 4 பிரதிநிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்திய முதலீடுகளை ஈரான் எதிர்பார்த்துள்ளது

இஸ்லாமிய புரட்சி நினைவு தினத்தில் ஈரானிய தூதுவர் உரை

இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே பிரிக்கப்பட முடியாத இயற்கையான தொடர்பும் நட்பும் நிலவி வருவதாகவும், மேலும் பல முதலீடுகளை இந்தியாவிடம் ஈரான் எதிர்பார்த்துள்ளதாகவும் இந்தியாவுக்கான ஈரானிய தூதுவர் இராஜ்ஹிலாஹி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய புரட்சியின் 44வது நினைவு தினத்தை முன்னிட்டு புது டில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஈரானிய தூதுவர் மேலும் பேசுகையில்,

ஈரானுக்கு இந்தியா மிக முக்கியமான நாடு என்றும் சமீபத்தில் இரு நாட்டுத் தலைவர்களும் சந்தித்து உரையாடியது இதை மெய்ப்பிப்பதாக இருந்ததாகவும் குறிப்பிட்டதோடு சர்வதேச வடக்கு – தெற்கு கடல் வழி தொடர்பும் பொருளாதாரத் தடையை மீறிய இந்திய எண்ணெய் இறக்குமதியும் முக்கிய உறவுப் பாலமாக விளங்குவதாக சுட்டிக் காட்டினார். இந்தியாவினால் நிர்வகிக்கப்படும் சபாஹார் துறைமுகம் இரு தரப்பு உறவுக்கு பாலமாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்திய மத்திய அமைச்சர் சார்பானந்தா சொனாவல், இந்தோ – ஆரிய நாகரிகத்துக்கு முன்னரேயே இந்திய ஈரானிய குடிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்றும் இரு தரப்பு பயன்பாட்டுக்கும் ஒரு மொழியே தாயாக விளங்கியது என்றும் கூறினார்.

சிந்துவெளி நாகரிகத்துக்கும் இன்றைய ஈரானிய நாகரிகத்துக்கும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றன என்று அவர் கூறியதோடு பாரசீகக்குடா மற்றும் அராபியக் கடல் வழியாக இந்தியாவுக்கும் தெற்கு ஈரானுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் நிலவியதையும் அவர் நினைவூட்டினார்.

காண்டா மிருகங்கள் கொல்லப்படுவதை நிறுத்திய அசாம் அரசுக்கு நடிகர் டிகப்ரியோ பாராட்டு

கடந்த 45 ஆண்டுகளில் கடந்த வருடமே எந்தவொரு ஒற்றைக் கொம்பு காண்டா மிருகமும் அஸாம் காசிரங்கா விலங்குகள் சரணாலயத்தில் வேட்டையாடப்படவில்லை என்று மகிழ்ச்சி தெரிவித்திருக்கும் டைடானிக் திரைப்பட நாயகனும் பிரபல ஹொலிவுட் நடிகருமான லெனார்டோ டிகப்ரியோ அஸாம் மாநில அரசுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

ஒற்றைக் கொம்பன் காண்டாமிருகங்கள் வசிக்கும் உலகின் மிகப் பெரிய வனவிலங்கு பூங்காவான காசிரங்கா, பிரம்மபுத்ரா நதி தீரத்தில் அமைந்துள்ளது. ஏராளமான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தரும் இந்த பூங்காவில் திருட்டு வேட்டைக்காரர்கள் காண்டா மிருகங்களை வேட்டையாடுவது பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. 2000ம் ஆண்டில் இருந்து 2021 வரையில் 190 காண்டா மிருகங்கள் வேட்டையாடப்பட்டுள்ளன.

அஸாம் அரசு எடுத்த தொடர் நடவடிக்கைகளின் பலனாக கடந்த ஆண்டு எந்தவொரு மிருகமும் வேட்டையாடப்படவில்லை. இதைப் பாராட்டும் வகையிலேயே மிருக நலன்களுக்காக சேவையாற்றிவரும் டிகப்ரியோ அஸாம் அரசை பாராட்டியுள்ளார்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகில் 200 ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களே காணப்பட்டன. இன்று அதன் தொகை 3700 ஆக அதிகரித்துள்ளதோடு, காசிரங்காவில் 2200 ஒற்றைக் கொம்பன்கள் வசித்து வருகின்றன. 2015 இல் 17 மிருகங்களும் 2016 இல் 18 ஒற்றைக் கொம்பன்களும் வேட்டையாடப்பட்டதையடுத்து வேட்டைக்காரர்களின் ஊடுருவலைத் தடுப்பதற்கு பல்வேறு முனைகளில் கடும் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டன.

புதிய அமெரிக்க – இந்திய உடன்பாடு சீனாவுக்கு எதிரான அமெரிக்காவின் காய் நகர்த்தலே

வொஷிங்டன் 'த ஹில்' பத்திரிகை தெரிவிப்பு

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உயர்மட்ட பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இந்தியா ஊடாக சீனாவுடன் இந்தோ பசுபிக்கில் போட்டியிட அமெரிக்கா முனைந்துள்ளது என்றும் ஒரே கல்லில் இரு பறவைகளை வீழ்த்தும் உபாயம் இது என்றும் வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட 'த ஹில்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே சமீபத்தில் வொஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மற்றும் உடன்பாடுகளில், உயர் தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் விண்வெளித் துறைகளில் நெருங்கிச் செயல்பட இணக்கம் காணப்பட்டது. இதை 'இரு நாடுகள் ஆழமான, மூலோபாய நலன்களுக்கு உபயோகமானது என அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் சொலிவன் வர்ணித்திருந்தார்.

சீனாவுடன் எல்லைத் தகராறைக் கொண்டிருக்கும் இந்தியா, தொடர்ந்தும் பாதுகாப்பு தொடர்பில் ரஷ்யாவை அதிகமாக சார்ந்திருப்பதை ஓரளவுக்கு தவிர்ப்பதற்கு அமெரிக்கா கையாண்டிருக்கும் இம் மூலோபாய நகர்வு ரஷ்ய இந்திய உறவில் தளர்வை ஏற்படுத்தி இருக்கிறது என்பதை 'த ஹில்' பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. இந்த இந்திய – அமெரிக்க நெருக்கம், 21 ஆவது நூற்றாண்டின் சவால்களை மேம்பட்ட தொழில் நுட்பம், பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறைகள் மூலம் சந்திக்க எடுக்கப்படும் முயற்சி என்றும் மேலும் தெரிவித்துள்ளது.

இவ்விரு நாடுகளின் நெருக்கம் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரானதா என்று சொலிவனிடம் கேட்கப்பட்டபோது, ரஷ்ய சீன பிரச்சினைகள் உண்மை என்றாலும் ஆழமான ஜனநாயக பசுமைச் சூழலை உயர் தொழில்நுட்பத்தின் ஊடாக உருவாக்குவதே அமெரிக்க ஜனாதிபதியின் மையப் புள்ளியாகும் என விளக்கமளித்தார்.

பாணந்துறை அல்பஹ்றியா தேசிய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் புதிய உறுப்பினர்கள் முன்னாள் பிரதேச சபை தலைவர் இபாஸ் நபுஹான் தலைமையில் பாடசாலையின் கல்வி அபிவிருத்தி தொடர்பில் அதிபர் எம்.ஐ.எம். ரிஸானுடன் அதிபர் பணிமனையில் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். ஆசிரியர் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

ஆனமடுவ பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் ஆனமடுவ நகரின் பாடசாலை மாணவர் குழுவினரொன்று தங்களது ஆசிரியர்கள் சகிதம் புத்தளம் நகர மத ஸ்தலங்களுக்கான நல்லெண்ண விஜயத்தின்போது புத்தளம் முஹியத்தீன் ஜும்மா பெரிய பள்ளிக்கு வருகை தந்தபோது (14) பிடிக்கப்பட்ட படம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)

அஷ்ரப் வித்தியாலயத்தில் ஐந்து மாணவர்கள் சித்தி

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி கல்முனை கல்வி வலயத்தின் சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம் அஸ்ரப் வித்தியாலயத்தில் ஐந்து மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

இது பாடசாலையின் வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சாதனையாகும் என பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தெரிவித்தார். அத்தோடு ஏ.ஜி. முகம்மத் அஹ்னப் என்ற மாணவன் 178 புள்ளிகள் பெற்று சாய்ந்தமருது கோட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளதோடு கல்முனை வலய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்ததுள்ளதாகவும் இம்மாணவர்களுக்கும் இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் தெரிவிப்பதாக கூறினார்.

மஹா சிவராத்திரி தினத்தன்று

மைத்ரேயா பிரபாகரனின் வீணா கான அரங்கேற்றம்

மாவை ப்ருந்தகானலயா அதிபர் வாத்தியவாணி திருமதி. கோகிலத்வனி விஜயராகவனின் மாணவி மைத்ரேயா பிரபாகரனின் வீணா கான அரங்கேற்றம் மஹாசிவராத்திரி தினமான எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

அன்று மாலை 07 மணிக்கு கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர தேவஸ்தானத்தில் சிவாகமபானு சிவஸ்ரீ ந.குமாரசாமிக்குருக்கள் தலைமையில் ஆலய உள்மண்டபத்தில் நடைபெறும்.

இவர் திரு.திருமதி பிரபாகரன், கிரிஜா தம்பதியினரின் ஏகபுத்திரியும், கீரிமலை தேவஸ்தான ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்களின் பூட்டியும், மாலை து.குமாரசாமி சர்மா கெங்காதேவி, வாமதேவசர்மா இராஜராஜேஸ்வரியின் பேத்தியுமாவார்.

கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மாணவியான இவரது நிகழ்வைத்தொடர்ந்து ப்ருந்தகானலயா இசைக்குழு மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொரளை அமைப்பாளர் எஸ்.எச்.முஹம்மட்டின் வெற்றியை உறுதிப்படுத்தும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம். (படம்: சுதத் மலவீர)

கொலைக்குற்றத்திற்காக சகோதரர் இருவருக்கு மரண தண்டனை

லோரன்ஸ் செல்வநாயகம்

தனிப்பட்ட பகை காரணமாக நபரொருவரை கத்தியால் குத்திக் கொலைசெய்த குற்றத்திற்காக அண்ணன் தம்பிகளான இரு சகோதரர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஸ் வீரமன் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

பிரதிவாதிகளுக்கெதிரான குற்ற முறைப்பாட்டின் மூலம் எந்த சந்தேகமுமின்றி குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதனால் மேல்நீதிமன்ற நீதிபதியினால் அவர்கள் இருவருக்கும் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது.

கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் அண்ணன் தம்பியான மேற்படி சகோதரர்களால் இந்தப் படுகொலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் எந்த சந்தேகமுமின்றி குற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டதால் அவர்கள் இருவருக்கும் மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி அறிவித்துள்ளார். கடுவலை ஹேவாகம விகாரை மாவத்தையில் வசிக்கும் கயான் சுசந்த (35 வயது) மற்றும் துஷாந்த பிரியங்கர (36 வயது) ஆகியோருக்கே நேற்று இந்த மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கண்டி மாநகர சபைக்கு உரித்தான ஈ.எல்.சேனாநாயக்க சிறுவர் பூங்காவில் விளையாட்டு ரயில் வண்டியொன்றை நிறுவி நடைமுறைப்படுத்துவதற்காக (05) ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுதல்

கண்டி மாநகர சபைக்கு உரித்தான ஈ.எல்.சேனாநாயக்க சிறுவர் பூங்காவில் விளையாட்டு ரயில் வண்டியொன்றை நிறுவி, நடைமுறைப்படுத்துவதற்காக (05) ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து 2023.03.07 அன்று மு.ப.10.00 வரை இரண்டுபிரதிகளில் முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2023.03.06 அன்று பி.ப.2.45 வரை வார வேலை நாட்களில் இதற்கான கேள்விப் படிவங்கள் வழங்கப்படுவதுடன், 2023.03.07 அன்று மு.ப.10.00 இற்கு திறக்கப்படும் கேள்விக்கான நிபந்தனைகளை கண்டி மாநகர சபை, கணக்காளர் (வருமானம்) இடம் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், மேலதிக விபரங்களை 081-2227395 தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இலக்கம்	அமைவிடம்	சேவை	வரிகளுடன் மீளளிக்கப்படாத கேள்விப் பிணைத்தொகை ரூபா	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை ரூபா	கால எல்லை
01	ஈ.எல்.சேனாநாயக்க சிறுவர் பூங்கா	விளையாட்டு ரயில் ஒன்றை நிறுவி நடைமுறைப்படுத்தல்	3450.00	50,000.00	2023.04.01 - 2028.03.31 (05) ஐந்து வருடங்கள்

விண்ணப்பப்படிவக் கட்டணம் :
விண்ணப்பப்படிவக் கட்டணத்தின் 50% இற்கான தொகையை கண்டி மாநகர சபையில் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், எத்தனை வீதம், சபைக்கு செலுத்தப்படுகின்றதென்பதை தெளிவாக கேள்விப் படிவத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அதன் பிரகாரம் ஆகக்கூடுதல் வீதத்தை சபைக்கு செலுத்தும் விண்ணப்பதாரர் சித்திகரமான கேள்விதாரரெனத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

விண்ணப்பப்படிவக் கட்டணமானது, கண்டி மாநகர சபையினால் அறவிடப்படுமென்பதுடன், மாத இறுதியில் ஒப்பந்தகாரரின் கொடுப்பனவுகள் கண்டி மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் கேள்விகள் பரிசீலிக்கப்பட்டு சித்திகரமான கேள்விதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்

அங்கீகரிக்கப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக அரச வரிகளும் சேர்த்து அறவிடப்படும்

2023.02.14ஆம் திகதி
கண்டி மாநகரசபை அலுவலகத்தில் **கண்டி மாநகர ஆணையாளர்**

ஹெம்மாதகம அல்–அஸ்ஹரில் மீடியா போரத்தின் 73ஆவது ஊடக கருத்தரங்கு

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்தும் 73ஆவது ஊடகக் கருத்தரங்கு எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹெம்மாதகம அல்அஸ்ஹர் கல்லூரி (தேசிய பாடசாலையில்) நடைபெறவுள்ளது.

ஹெம்மாதகம அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கத்துடன் இணைந்து நடாத்தப்படும் இக் கருத்தரங்கு இரு அம்சங்களாக இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளின் ஊடகக்கழக அங்கத்தவர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கு புறம்பான ஒரு கருத்தரங்கும் அல் அஸ்ஹர் உட்பட பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான ஊடகக் கருத்தரங்கொன்றும் புறம்பாக நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி திருமதி புர்கான் பீ இப்திகார் மற்றும் அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.சி.எம்.நவாஸ் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கில் முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டாளரும் நவமணி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான என். எம். அமீன், மீடியா போரத்தின் பொதுச் செயலாளரும் ஊடாக பயிற்றுவிப்பாளருமான சிஹார் அனீஸ், சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஊடக பயிற்றுவிப்பாளருமான தாஹா முஸம்மில், விடிவெள்ளி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம் . பி. எம் பைரூஸ், ஊடகவியலாளர்களான சாமிலா ஷரீப், எம். ஏ.எம். நிலாம், ஸாதிக் ஷிஹான் மற்றும் அஷ்ரப் ஏ ஸமத் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, அன்றைய தினம் மாலை இடம்பெறும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் என கேகாலை மாவட்ட அமைப்பாளர் ஆதில் அலி சப்ரி தெரிவித்தார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பிரதிநிதிகள் குழுவுக்கும் கேகாலை மாவட்ட மீடியா போரத்தின் உறுப்பினர்களுக்கு இடையிலான விஷேட கலந்துரையாடலும் இந்த நிகழ்வின்போது இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காதல் நிறைந்த புதிய உலகம்; தனித்துவமான காதலர் தினம்

நேசிப்பவர்களுடன் தனித்துவமான காதலர் தினத்தைக் கொண்டாட எதிர்பார்ப்பவர்களுக்கு டேவிட் பீரிஸ் குழுமத்தின் பேர்பே இடமிருந்து விதிவிலக்கான சலுகைகள் பல காத்திருக்கின்றன. உங்களுக்கு விசேடமானவர்களுடன் நீர் சறுக்கு, கார்ட்டிங், எயார் ரைபல் சூட்டிங் மற்றும் சுவையான உணவு போன்ற பல்வேறு அம்சங்களுடன் ஒரு முழு நாளையும் களித்திடுங்கள். பெப்ரவரி 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப் பகுதியில் விருந்தினர்கள் விசேட விலைக் கழிவுடன் 'couple tickets' சீட்டிழுப்பு, பரிசுகள் மற்றும் மேலும் பல ஆச்சரியங்களை அனுபவித்திடுங்கள்.

முதல் 10 'couple tickets' உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் ஊக்குவிப்பு நிகழ்ச்சியின் ஊடாக பூங்காவிற்குள் நுழைபவர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படவிருப்பதுடன், ஸ்பிளாஸ்பே (SplashBay (water park)) டிக்கட், ஹோட்டலில் தங்குவதற்கான வாய்ப்பு உள்ளிட்ட மேலும் பல வற்றை வெற்றி கொள்வதற்கான அதிஷ்ட சீட்டிழுப்பில் கலந்துகொள்ள முடியும்.

வேகமான பாதையில் வாழ விரும்பும் ஜோடிகள் 'Race for Love' இல் பங்குபெற்ற வாய்ப்பு உள்ளது. ஊக்குவிப்பின் ஒவ்வொரு நாளும் சிறந்த சராசரியான வேகத்தைப் பதிவு செய்யும் ஜோடிகள் பெப்ரவரி 19ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாரிய ஜோடிகள் கார்ட்டிங் சவால் பந்தயத்தில் கலந்துகொள்ளத் தகுதி பெறுவார்கள். வெற்றிபெறும் ஜோடிகளுக்கு பதக்கங்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படும்.

உயர்கல்விக்கான புலமைப்பரிசில் திட்டம்

நவீன கல்வித்திட்டங்களுக்கு ஏற்புடைய வகையில் மாணவர்களை தயார்படுத்தல்

நவீன கல்வித்திட்டங்களுக்கு ஏற்புடைய வகையில் மாணவர்களை தயார்படுத்தும் வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த உள்ளதாக றோயல் டெக்னோலஜி கெம்பஸ் மற்றும் வடக்கு கிழக்கு தனியார் பல்கலைக்கழக சங்கத் தலைவருமான மொஹமட் அனஸ் தெரிவித்தார்.அத்தோடு உயர் கல்வியை கற்பதற்கான புலமைப்பரிசில் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உயர்கல்வியை கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று அல் ரஹ்மானிய வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இலங்கையில் 15 அரச பல்கலைக்கழகங்கள் காணப்படுவதுடன், ஒவ்வொரு வருடமும் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறே கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றுவதுடன், வருடாந்தம் சுமார் 12,000 இலங்கை மாணவர்கள் உயர் கல்விக்காக வெளிநாடு செல்கின்றனர். இதன் மூலம் நாட்டிலிருந்து 400 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் மேற்பட்ட அளவில் அந்நிய செலாவணி வெளியேற்றப்படுகிறது.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக வாய்ப்பை இழந்துள்ள மாணவர்கள் உயர்கல்வியை தொடர முடியாது. ஏதேனும் தொழிலில் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச் செல்வதுடன், சிலர் குடும்பத் தொழில்களில் ஈடுபட்டு கல்விச் செயற்பாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்றனர்.

சில சந்தர்ப்பங்களில் இம்மாணவர்கள் கைத்தொழில் மற்றும் தொழிற்பயிற்சி துறைகளில் ஈடுபடாது இருக்கின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக தகுதியை இழந்துள்ள மாணவர்களுக்கு அவர்கள் விரும்பிய பாடத்தில் பட்டமொன்றை பெறுவதற்கான வேலைத்திட்டம் றோயல் டெக்னோலஜி கெம்பஸ் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வறுமைக் கோட்டில் வாழக்கூடிய மாணவர்களை தேர்ந்தெடுத்து முழுமையான புலமைப்பரிசில் வழங்கும் திட்டமொன்று நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

உரு. இல.	ஒப்பந்த இல.	செயற்றிட்டத்தின் பெயர்	ஒப்பந்தக் காலம் (நாட்கள்)	ஆகக் குறைந்த ICTAD பதிவு	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா)	விலைக் கோரல் பிணை முறி (ரூபா)	அமைவிடம்
1	DSD/DEV/ 03/02/2023	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள்	365 நாட்கள்	C7 அல்லது அதற்கு மேல்	3,500.00	150,000.00 வங்கி உத்தரவாதம்	பண்டாரகம விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, பண்டாரகம
2	DSD/DEV/ 03/03/2023	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள அதனை உள்ளடக்கும் இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள் (மாத்தளை விளையாட்டு மைதான இடப்பரப்பு மற்றும் உள்ளக விளையாட்டரங்கு பார்வையாளர்கூட இடப்பரப்பு)	365 நாட்கள்	C7 அல்லது அதற்கு மேல்	3,500.00	150,000.00 வங்கி உத்தரவாதம்	கொட்டவில விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, மாத்தறை
3	DSD/DEV/ 03/04/2023	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள அதனை உள்ளடக்கும் இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள் (பொலன்னறுவை விளையாட்டு மைதான இடப்பரப்பு மற்றும் உள்ளக விளையாட்டரங்கு பார்வையாளர்கூடம், நீச்சல் தடாக இடப்பரப்பு)	365 நாட்கள்	C7 அல்லது அதற்கு மேல்	3,500.00	150,000.00 வங்கி உத்தரவாதம்	பொலன்னறுவை விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, பொலன்னறுவை
4	DSD/DEV/ 03/05/2023	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள அதனை உள்ளடக்கும் இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள் (இரத்தினபுரி விளையாட்டு மைதான இடப்பரப்பு மற்றும் உள்ளக விளையாட்டரங்கு பார்வையாளர்கூடம், நீச்சல் தடாக இடப்பரப்பு)	365 நாட்கள்	C7 அல்லது அதற்கு மேல்	3,500.00	150,000.00 வங்கி உத்தரவாதம்	இரத்தினபுர விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, பொலன்னறுவை
5	DSD/DEV/ 03/06/2023	விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழுள்ள அதனை உள்ளடக்கும் இடப்பரப்புகளின் பராமரிப்பு வேலைகள் (கிளிநொச்சி விளையாட்டு மைதான இடப்பரப்பு மற்றும் உள்ளக விளையாட்டரங்கு பார்வையாளர்கூட இடப்பரப்பு)	365 நாட்கள்	C7 அல்லது அதற்கு மேல்	3,500.00	150,000.00 வங்கி உத்தரவாதம்	கிளிநொச்சி விளையாட்டுக் கட்டிடத்தொகுதி, பொலன்னறுவை

2. மேற்கூறப்பட்ட முகவரிகளில் இந்த வேலைத்தளங்கள் உள்ளன.
3. வேலைகளில் பிரதானமாக நீர்க் குழாய்களின் பராமரிப்பு வேலைகள், மின்சாரம், சிவில் மற்றும் இயந்திரவியல் வேலைகள் அத்துடன் தரை பராமரிப்பு வேலைகள் மற்றும் பொருட்கள் வழங்குதல்.
4. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் நடாத்தப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு விலைக்கோரலாம் மற்றும் ஒவ்வொரு திட்டமும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படும்.
6. ஒப்பந்தத்தைக் கைளிக்கப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் இயையுடைய துறையில் C7 தரத்திற்கான ICTAD பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
7. கடந்த 2 வருடங்களில் இதற்கு நிகரான ஆகக் குறைந்தது இரண்டு திட்டங்களின் நிர்மாண வேலை அனுபவம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களப் (பெறுகைகள்) பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் பின்வரும் முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
9. 2023 பெப்ரவரி 16ஆம் திகதியிலிருந்து 2023 மார்ச் 08ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக மேற்கூறப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட தொகையைச் செலுத்திய பின்னர், மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களுக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
10. விலைமனுப் பிணை முறியானது மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படுவதுமான கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்டதாக அல்லது கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் நாளிலிருந்து 119 நாட்களுக்கு விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.
11. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
12. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி எனக் குறிப்பிட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு 2023 மார்ச் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். (விலைமனுக்களை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டாம் மாடியிலுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்). பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,
விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களம்,
இல.: 09, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு-07.
தொலைபேசி: 0112669884
தொலைநகல்: 0112669884

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு
மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)
திட்ட முகாமைத்துவ பணிமனை

நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி - Loan 3625-SRI-Tranche 2

விலைமனுக்களுக்கான அழைப்பு

பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

மிளகாய் பயிர்ச்செய்கைக்காக சீரமைக்கப்பட்டட விவசாய பொதிகளை வழங்கல்
MI/MWSIP/ADB/GDS/SMART AGRICULTURE PACKAGES – MASL/NCB/2022/060

1. மஹாவலி நீர்ப் பாதுகாப்பிற்கான முதலீட்டு திட்ட ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது நிதியிடலொன்றை பெற்றுள்ளது. இந்த நிதியிடலின் பகுதியொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள வள நாடுகளின் விலைமனுதாரர்கள் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பெற்றலாம்.
2. மிளகாய் பயிர்ச் செய்கைக்காக சீரமைக்கப்பட்ட விவசாய பொதிகளை வழங்குவதற்காக (''வேலைகள் என அழைக்கப்படுவது'') தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து MWSIP இன் (''தொழில் வழங்குநர் என அழைக்கப்படுவது'') திட்ட முகாமைத்துவ பணிமனையின் திட்டப் பணிப்பாளரினால் பிரதிநிதிப்படுத்தும் நீர்ப்பாசன அமைச்சானது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.
3. பகிரங்க போட்டிரீதியிலான விலைமனுக்கோரலானது ஆசிய அபிவிருத்தியின் ஒரு-கட்ட, ஒரு உறை விலைமனுக்கோரல் நடைமுறைக்கேற்றவாறு நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கு பெற்றலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரம் பங்கு பெறுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
   - 'கடந்த உடனடியான ஐந்து (5) வருடங்களில் மிளகாய் பயிர்ச் செய்கைக்காக சீரமைக்கப்பட்ட விவசாய பொதிகளை வழங்குவதற்காக' ஒவ்வொரு தொகுதிக்கும் பெற்றுக் கொண்ட சான்றழிக்கப்பட்ட மொத்த கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த சராசரி பணக்கொடுப்பனவுகள் 150 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். விலைமனுதாரரானவர் கடந்த ஐந்து (5) வருடங்களில் வழங்குநராக, கூட்டுமுயற்சி
   - பங்குதாரராக அல்லது உபஒப்பந்தக்காரராக சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட ஆகக் குறைந்தது இரு (2) ஒப்பந்தங்களில் வழங்களின் விடயப்பரப்பிற்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையில ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் 115 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு அல்லது சமமான தொகையிலமைந்த விலைமனுதாரரின் பங்கு பெறுதலின் பெறுமதியில் பங்குபற்றிருத்தல் வேண்டும்.
   - கொள்வனவுக்காரரினால் தேவைப்படுத்தப்படும் ஒப்படைத்தல் மற்றும் அட்டவணையை பூர்த்தி செய்தல் ஆகியவற்றிற்கமைவாக பண்டங்களின் வகை, அளவு மற்றும் தொகை ஆகியவற்றை வழங்க இயலுமென்பதை விலைமனுதாரர் காட்சிப்படுத்தல் வேண்டும்.
   - படிவம் FIN-3 இல் சுட்டிக்காட்டியவாறு விலைமனுதாரரின் நிதியிடல் வளங்கள் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக ஒப்பந்தரீதியிலான முற்பண கொடுப்பனவுகள் நீங்கலாக விலைமனுதாரர் அவரிடமுள்ள திரவச் சொத்துக்களை சென்றடையும் வழி அல்லது அவைகள் இருப்பதை அறிவித்தல், ஆகியவற்றை காட்சிப்படுத்தல் வேண்டும்.
5. முழுமையான தகுதித்தன்மை மற்றும் தகைமை தேவைப்படுத்தல்களுக்கு விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தை பார்வையிடல் வேண்டும்.
6. **www.mwsip.lk/information-procurements of MWSIP** என்ற தொடர்புடன் எந்தவொரு ஆர்வமுள்ள விலைமனுதாரரினாலும் பரீட்சிப்பதற்காக விலைமனுக்கோரல் ஆவணத்தின் மென்பிரதியொன்றை PDF உருமாதிரியில் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்கான அவர்களின் உத்தேசம் மற்றும் விலைமனுவொன்றை சமர்ப்பிப்பதற்கான ஆர்வத்தை **ebid.mwsip@gmail.com** என்ற மின்னஞ்சலூடாக ஸ்கேன் செய்யப்பட்ட அறிவித்தலுடன் கொள்வனவுக்காரருக்கு அறிவித்தல் வேண்டும். அவ்வாறான அறிவித்தல்கள் கட்டாயமாக விலைமனுதாரரின் தலைப்புக் கடிதத்தில் எழுதப்பட்டு விலைமனுதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் கையொப்பமிட்டு விலைமனுக்கோரல் ஆவணத்தின் டிஜிட்டல் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்காகவும் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் போது வழங்கப்படவுள்ள மேலதிய தெளிவுறுத்தல்கள் மற்றும் சேர்க்கைக்காக விலைமனுதாரரின் பெயர் மற்றும் முகவரி, தொடர்பு இலக்கம், தொலைநகல் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடல் வேண்டும். விலைமனுதாரரின் கடிதத்தை பெற்றுக் கொண்ட பின்னர் தொழில் வழங்குநர் மீளளிக்கப்படாத கட்டணமான 35,000 இலங்கை ரூபாவை செலுத்துவதற்காக அவரது வங்கி கணக்கு விபரங்களை அறிவிப்பார். அவ்வாறான பணக்கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர், விரைவாகவே விலைமனுதாரர் பணம் செலுத்தப்பட்ட விடயத்தை உறுதிப்படுத்தி திட்டப் பணிப்பாளருக்கு அறிவிப்பார். விலைமனுதாரரினால் மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவு செலுத்தப்பட்ட உறுதிப்பாடு கிடைத்தவுடன் தொழில் வழங்குநர் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான தொடர்பை அறிவிப்பார். முழுமையான விலைமனுக்கோரல் ஆவணத்தை பதிவிறக்கம் செய்வதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்று ஆவணங்களின் முழுமையான தொகுதியை பதிவிறக்கம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டுமென்பதுடன் இந்த பெறுகையின் செயற்பாட்டிலேற்படும் விளைவுகளுக்கும் அல்லது அதன் பின்னர் விலைமனுதாரரின் செயற்பாட்டிலேற்படும் தவறுகளுக்கும் தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.
8. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2023.02.23 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் மு.ப. 10 மணிக்கு திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுதாரர்களுடனான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். விலைமனுதாரர்கள் இந்த விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு நேரடியாக சமுகமளித்தல் வேண்டும் (தொழில் வழங்குநருடனான முன்பதிவுக்குட்பட்டதாக ஆகக் கூடியது இரு பிரதிநிதிகள்). விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் இக்கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். விலைமனுதாரர்கள் ஒன்லையின் மாநாட்டு வசதியொன்றை வழங்குவதற்காக 2023.02.20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மின்னஞ்சலொன்றின் வழியாக திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ள விலைமனுதாரர் தொழில் வழங்குநரின் உறுதிப்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்பாடுகளுடன் விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு ஆகக் குறைந்தது மூன்று நாட்களுக்கு முன்னராக வேலைத்தளத்தை பார்வையிடலாம்.
9. 2023.03.13 ஆம் திகதியன்று உள்ளூர் நேரம் பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணத்தில் (Section 2 – Bid Data Sheet, ITB 19.1) திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர் செயற்றிட்ட பெறுகைக் குழு, மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் என முகவரியிடப்பட்டு கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 493 1/1 என்ற இலக்கத்திலுள்ள மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு திட்டம் (MWSIP) , திட்ட முகாமைத்துவ பணிமனையின் திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தொழில்நுட்ப விலைமனுக்கள் இறுதி நேரம் முடிந்தவுடன் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் மெய்நிகராக்கல் முறைமையூடாகவும் விலைமனு திறத்தல் நிகழ்ச்சியில் பங்கு பெற்றலாம். ஒன்லைனின் மாநாட்டு வசதிக்கான தொடர்பை ஏற்படுத்துவற்காக 2023.03.09 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக விலைமனுதாரர்கள் திட்டப் பணிப்பாளருக்கு விண்ணப்பமொன்றை மின்னஞ்சலொன்றின் வழியான அனுப்பலாம்.
10. விலைமனுக்களை தயாரித்தல், விலைமனு முன்கூட்டத்திற்கு சமுகமளித்தல், வேலைத்தளங்களை பார்வையிடல் மற்றும் விலைமனுக்களை ஒப்படைத்தல் ஆகியவற்றில் விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவு அல்லது செலவினங்களுக்கு தொழில் வழங்குநர் பொறுப்பேற்க மாட்டார்.

திட்டப் பணிப்பாளர்,
திட்ட முகாமைத்துவ பணிமனை,
மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,
இல. 493 1/1 T.B. ஜாயா மாவத்தை,
கொழும்பு-10, இலங்கை.

தொலைபேசி இல.: +94 11 2675810/ + 94 11 2675882
தொலைநகல் இல.: +94 11 2675227
மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com

விலைமனுக்களுக்கான அழைப்பு

கண்டி மாநகர சபைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்

கண்டி மாநகர சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக 2023-03-07ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதன் பொருட்டான தகைமை வாய்ந்த விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பணப் பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் வேண்டுகோள் கடிதம் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

	உருப்படிகள்	எண்ணிக்கை	விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்	விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா)	விலைக் கோரல் ஆவணக் கட்டணம் (ரூபா)
01	15 mm (1/2") Water Meter (Complete set with end connectors)	2000	CPC/KMC/FD/S/PC 02/2023/02/05	200,000.00	2300.00 (சகல வரிகள் சகிதம்)
02	25 mm (1") Water Meter (Complete set with end connectors)	25			
03	DI Double Flanged 150mm Dia pipe	62	CPC/KMC/FD/S/PC 02/2023/02/06	250,000.00	2300.00 (சகல வரிகள் சகிதம்)
04	16mm Tor Steel Bar	1000	CPC/KMC/FD/S/PC 01/2023/01	50,000.00	1150.00 (சகல வரிகள் சகிதம்)

01	விலைமனுவின் விலை	• கண்டி மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் • காசுக் கட்டளையொன்றானால் 'மாநகர ஆணையாளர், கண்டி' எனும் பெயருக்குச் செலுத்தி 2023-02-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும்.
02	விலைமனு ஆவணங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி	2023-02-15ஆம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில்
03	விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்	2023-03-03ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை
04	விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்	2023-03-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில்
05	விலைமனுப் பிணை முறி	இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 மாதங்கள் வரை செல்லுபடியாகும் தன்மையுடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதிக்காக பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றை 'கண்டி மாநகர ஆணையாளர்' பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும். (செல்லுபடிக் காலம் 2023-03-07ஆம் திகதி முதல் 2023-06-07ஆம் திகதி வரை)
06	விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி, இடம் மற்றும் நேரம்	2023-03-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர சபை மண்டபத்தில். இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07	விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம்	மாநகர வழங்கல் பிரிவு, மாநகர சபை, கண்டி.
08	பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம்	நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் 2023-03-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பிரதான மாநகர கண்காகளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பதிவுத் தபால் மூலம் அனுப்புவதானால் 2023-03-07ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும்.

விலைமனுக்கள் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கண்டி மாநகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து 081-2232071 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

கே.கே.ஜீ.ஐ.டீ.ஜீ. விஜேதிலக்க.
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை கண்டி.

2022-09-16

அரசின் நெல் கொள்வனவு வேலைத்திட்டம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

பரந்தன் குறூப் நிருபர்

அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பை விநியோகிக்கும் வேலைத்திட்டம் தொடர்பான சுற்றறிக்கைக் கமைவாக பெரும்போக நெல் கொள்வனவு தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் நாட்டரிசி வகை நெல் மட்டுமே கொள்வனவு செய்யப்படவுள்ளது.

நெல் கொள்வனவு நடவடிக்கையின் போது நெல்லை கையேற்பது,களஞ்சியப்படுத்துவது அதனுடன் தொடர்புள்ள ஆவணங்களைப் பேணுவது, கணக்குகளை வைத்திருத்தல் ஆகிய பொறுப்புகள் மாவட்ட செயலாளர்கள் மற்றும் அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் நெல் அரிசியாக மாற்றப்பட்டு 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை உள்வாங்கி, ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ வீதம் இரண்டு மாத காலத்திற்கு விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கிளிநொச்சி மாவட்டத்தில் 7,149 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும் இதன்போது திட்டநடைமுறைகள் தொடர்பாக திட்டமிடல் பணிப்பாளரினால் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து இத்திட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் இணைய வழி செயலி ஊடாகவும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், நெல் சந்தைப்படுத்தும் சபை அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாந்தை அன்னையின் வருடாந்த பெருவிழா அண்மையில் பங்குத்தந்தை அருட்பணி யே.அமல்ராஜ் குரூஸின் ஒழுங்கமைப்பின் கீழ் நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பேருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை

பச்சைக் கொழுந்து மற்றும் இறப்பர் பால் விற்பனைக்கான கேள்வி

2023 ஏப்ரல் முதல் ஜுன் வரை

➢ **கீழ்க்காணும் தோட்டங்களிலிருந்து மூன்றுமாத காலத்திற்கு (2023 ஏப்ரல் முதல் ஜுன் வரை) பச்சைக் கொழுந்து விற்பனைக்கான பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

தோட்டங்கள்	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 ஏப்ரல்	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 மே	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 ஜுன்	கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாத) ரூ. சதம்	மீளளிக்கப்படும் வைப்பு ரூ. சதம்
போபிட்டிய	45,400	45,400	31,400	5,000/-	100,000/-
தெல்தோட்ட	34,500	45,500	35,000		
கல்லேபொத்த	40,800	40,800	34,000		
ஹந்தானை	96,800	113,200	66,700		
கந்தளோயா	18,200	18,200	19,500		
மவுன்டஜீன்	22,451	26,884	20,234		
நாகஸ்தென்ன	27,100	30,000	24,000		
ரஹதுங்கொட	50,400	55,000	45,900		
ரொக்வூட்	99,000	111,000	64,000		

எல்லா கேள்வி ஆவணங்களும் கொழும்பு-02, வொக்ஷோல் லோன், 55/75, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை, தலைவர் - கேள்விக் குழுவிற்கு முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பச்சைக் கொழுந்து விற்பனை' என்று குறிப்பிடப்பட்டு, பொறியிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது 2023 மார்ச் 08ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

➢ கீழ்க்காணும் தோட்டங்களிலிருந்து மூன்றுமாத காலத்திற்கு (2023 ஏப்ரல் முதல் ஜுன்வரை) இறப்பர் பாலை விற்பனை செய்வதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

தோட்டங்கள்	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 ஏப்ரல்	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 மே	மதிப்பிடப்பட்ட விளைச்சல் 2023 ஜுன்	கேள்வி ஆவணக் கட்டணம் (மீளளிக்கப் படாத) ரூ. சதம்	மீளளிக்கப்படும் வைப்பு ரூ. சதம்
குமாரவத்த	21,664	30,471	38,267	5,000/-	100,000/-
தியலும	3,000	3,200	5,450		

எல்லா கேள்வி ஆவணங்களும் கொழும்பு-02, வொக்ஷோல் லேன். 55/75, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை, தலைவர் - கேள்விக் குழுவிற்கு முகவரியிடப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இறப்பர் பால் விற்பனை' என்று குறிப்பிடப்பட்டு பொறியிடப்பட்ட உறையில் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது 2023 மார்ச் 08ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள் விலைமனுப் படிவங்கள் உள்ளடங்கலான கேள்வி ஆவணங்களை எந்த வேலை நாட்களிலும் ஆவணக் கட்டணமாக ரூ. 5000/- (ஐயாயிரம்) செலுத்துவதன் பேரில், 2023 மார்ச் 07ம் திகதி வரை, கொழும்பு 02, வொக்ஷோல் லேன், 55/75, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபையிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

ரூபா 100,000/- பாதுகாப்பு வைப்பை, ஹைட்பாக், இயங்கை வங்கி எமது வங்கி கணக்கு இல. 2327555 வைப்புச் செய்வதன் மூலம் செலுத்துதல் வேண்டும். அல்லது காசாக JEDB தலைமையகத்தின் காசாளருக்கு செலுத்த முடியும். அத்துடன் கேள்வி ஆவணங்களுடன் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளப்படும் வைப்புச் சிட்டையை இணைத்தல் வேண்டும்.

கேள்விகள் 2023 மார்ச் 08ம் திகதி பி.ப. 2.00 மணிக்கு JEDB தலைமையகத்தில் கேள்வி திறத்தல் கமிட்டியின் முன்னிலையில் மூடப்பட்ட நேரத்தின் பின் உடனடியாகத் திறக்கப்படும். அத்துடன் கேள்வி திறக்கப்படும் வேளையில் கொள்வனவாளர் அல்லது அவரது பிரதிநிதிக்கு சமுகமளிக்க முடியும் தாமதமான கேள்விகள் விடயத்தில் JEDB எந்தப் பொறுப்பையும் ஏற்காது அத்துடன் கேள்வியை இரத்துச் செய்யும் உரிமையை பெறுகைக்குழுவின் தலைவர் கொண்டிருப்பார் எந்தக் தகவல்களுக்கும் தயவு செய்து நிர்வாக உதவியாளரை தொடர்பு கொள்ளுங்கள் 011-4578623)

தலைவர்
ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை

விலைமனுவுக்கான அழைப்பு

பிரதேச சபை நாவிதன்வெளி

LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT - PROJECT ID: P 163305
Construction of Multipurpose Building at Chavalakkadai

Contract Number: LDSP/EP/AMP/NV/PS/2021/01

1. உள்ளூர் அபிவிருத்தி ஆதரவுத் திட்டத்தின் செலவை நோக்கி உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு Construction of Multipurpose Building at Chavalakkadai அமைத்தல் ஒப்பந்தத்தில் கீழுள்ள கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியினை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டடுள்ள நிர்மாணப் பணிக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து நாவிதன்வெளி பிரதேசசபையின் சார்பில் உள்ளூர் நிர்வாக பெறுகைக் குழுவின் தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடைபெறும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் நாவிதன்வெளி பிரதேச சபை பெறுகைக்குழு தலைவரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெறலாம் (தொ.இல/தொ.நகல் 0672056877/0672056868) (மின்னஞ்சல் psnavi2011@gmail.com) என்பதோடு 2023 பெப்ரவரி 16 ஆம் திகதி தொடக்கம் 2023 மார்ச் 09 வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை எந்தவொரு வேலை நாட்களிலும் இதே முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. தகைமைத் தேவைகள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளது.
6. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் தடுப்புப்பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும் என்பதோடு உள்நாட்டு ஒப்பந்ததாரர்கள் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையுடன் (CIDA) கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்காக கட்டட கட்டுமானத் துறையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவினை செலுத்தி 16 பெப்ரவரி 2023 முதல் 2023 மார்ச் 09 வரை வேலை நாட்களில் 09:00 மணி முதல் 15.00 மணி வரை நாவிதன்வெளி பிரதேச சபையின் பெறுகை குழு தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றினை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
8. விலைமனுக்களை 09 மார்ச் 2023 அன்று 15.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள முகவரிக்கு அசல் மற்றும் நகல் பிரதிகளில் தயாரித்து அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்றபின் அவை உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரத்தின்படி விலைமனு பிணை ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்
9. விலைமனுவிற்கு முந்திய கூட்டம் 27 பெப்ரவரி 2023 அன்று மு.ப. 11:00 மணிக்கு நாவிதன்வெளி பிரதேச சபையில் நடைபெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் விலைமனுவிற்கு முந்தைய கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
10. ஒப்பந்தம் வழங்கப்படுவதில் பெறுகைக் குழுவின் முடிவு இறுதியானது
11. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்த பெறுகையை இரத்துச் செய்ய அல்லது மீளப்பெற தொழில் வழங்குநருக்கு உரிமை உள்ளது

Contract No	Description of Works	Tenderable Amount (Mn)	Contract Period	Required Grade	Bid Validity Period	Required Bid Security	
						Bid Security Amount	Validity Period
LDSP/EP/ AMP/ NV/ PS/2021/01	Construction of Multipurpose Building at Chavalakkadai.	12.0Mn	45 calendar days	C6 or above in Building Construction	25.05.2023 (77days)	120,000.00	22.06.2023

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பிரதேச சபை, நாவிதன்வெளி.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

SMB FINANCE PLC

மீட்கப்படாத தங்க நகைகளுக்கான ஏலவிற்பனை

2022.06.19 வரையான திகதிக்குள் எமது நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் தெனியாய கிளைகளில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகளை விற்பனை செய்வதற்கான அறிவித்தல். அனைத்து தங்க நகைகளும் கீழுள்ள திகதியில் மு.ப. 10.00 முதல் பி.ப. 1.00 வரை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

ஏலமிடும் திகதி 2023-02-18

ஏலமிடும் இடம்: 15, 15B, புகையிரத நிலைய வீதி, நீர்கொழும்பு.

ஏலமிடும் திகதி 2023-02-17

ஏலமிடும் இடம்: 301A, காலி வீதி, கொழும்பு 03.

ஏலமிடும் திகதி 2023-02-21

ஏலமிடும் இடம்: 11A, பிரதான வீதி, தெனியாய.

தொலைபேசி: 0117 759 629 / 0768 281 339

முன்னறிவித்தலின்றி குறித்த ஏலத்தினை நிறுத்தவோ, ஒத்திவைக்கவோ, ஒன்றிணைக்கவோ அல்லது இடத்தை மாற்றவோ எஸ். எம். பி. ஃபைனான்ஸ் நிறுவனத்திற்கு அதிகாரமுள்ளது.

skills

SMB FINANCE PLC

முகாமையாளர்

இல. 282/1, சீ.பி.எஸ். கட்டிடம், கொழும்பு 3.

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

வருடாந்த பட்டமளிப்பு விழா மற்றும் டிப்ளோமா விருது வழங்கும் விழா

2023 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு பிரதான மண்டபத்தில் (BMICH) நடைபெற உள்ளது.

தகுதியுடைய மாணவர்களுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு விழா பற்றிய தகவல்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,

பல்கலைக்கழக வ தளத்தினூடக பிரவேசிப்பதன் மூலம் www.uovt.ac.lk அல்லது மாணவர் சேவைப் பிரிவில் ssu@uovt.ac.lk 0112 630 701 பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,
இல.100, கந்தவல, இரத்மலானை.
2023 பெப்ரவரி 16

தொபே : 0112 630 701
தொந : 0112 630 705
இணையம் : www.uovt.ac.lk

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

கேள்வி இலக்கம்	கேள்வியின் பெயர்	விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்)	பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம்	மூடும் திகதி மற்றும் நேரம்
CES/FP//06/ PT/6433(EL)	Spares for the Light House Lamps	20,000.00	1,000.00	2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு
CES/FP/03/ PT/6430(MP)	02 Nos. Hydraulic Power Pack (Thruster) of Bubenzer EmergencyBrake Device of Main Hoist System – 65T ZPMC STS Crane at ECT	18,000.00	1,000.00	2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 பெப்ரவரி 17 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,
இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.
தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443

தங்க நகைகளின் ஏலவிற்பனை

வ/ப இலங்கை கூட்டுறவு கிராமிய வங்கி மகா சங்கத்தின் அடகுப் பிரதிநிதிகளாக செயற்படும் வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கீழே பெயர் குறிப்பிடப்படும் கிராமிய வங்கிக் கிளைகளில் 2020.10.01 முதல் 2021.12.31 வரை அடகு வைக்கப்பட்டு 2023.03.31 வரை மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2023.04.01ம் திகதி முற்பகல் 9.00 இற்கு பியகம வீதி சிங்ஹாரமுல்லவில் அமைந்துள்ள வ/ப களனி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

கிளைகள்

வெதமுல்ல	பேலியகொட	களனி
வனவாசல	பேலி/ பட்டிய	ஹிம்புடுவெல்கொட
பொல்ஹேன	திப்பிட்டிகொட	தொரணஹங்திய

தலைவர்
வ/ப களனி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
பியகம வீதி, சிங்ஹாரமுல்ல,
களனி
தொ.பே. இலக்கம்: 0112911356/ 2987069

பல்கலைக்கழக கல்லூரி

டிப்ளோமா விருது வழங்கும் விழா

2023 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு பிரதான மண்டபத்தில் (BMICH) நடைபெற உள்ளது.

தகுதியுடைய பட்டதாரிகளுக்கான டிப்ளோமா பட்டமளிப்பு விழா பற்றிய தகவல்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,

அனுராதபுரம் பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
025 222 2010

படன்கல பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
036 223 5570

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
021 221 7791

குளியாபிட்டிய பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
037 205 9570

மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
041 222 2962

இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரி
உதவி பதிவாளர்
011 262 6297

2023 பெப்ரவரி 16

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

இலங்கை மின்சார சபையானது நடுத்தர மின்னழுத்த விநியோக முறைமை மற்றும் குறைந்த மின்னழுத்த ஊட்டங்களில் புதிய நிர்மாணம், புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கு உத்தேசித்துள்ளது. எனவே 2023 பெப்ரவரி மாதத்தில் பின்வரும் QR குறியீட்டில் சேர்க்கப்பட்டுள்ள திகதிகள் மற்றும் நேரங்களில் மாகாணங்கள் / பிரதேசங்கள், பாவனையாளர் சேவை நிலையங்களின் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின்சாரம் தடைபடும். திட்டமிடப்பட்ட மின்சாரத் தடைகளினால் மேற்படி இடங்களிலுள்ள பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு இலங்கை மின்சார சபை வருந்துகிறது. மின் தடை முடிவடைந்ததும் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டுவர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

மின்சாரத் தடை அறிவித்தல் - பெப்ரவரி 2023

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.ceb.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையதளம் அல்லது CEB Care எனும் செயலியைப் (App) பார்க்கவும். அல்லாவிடில் பின்வரும் QR குறியீட்டை Scan செய்யுங்கள். மின்சாரம் தடைபடும் திகதி மற்றும் நேரங்கள் தொடர்பில் பாவனையாளர்களுக்கு தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்தி (SMS) மூலம் அறியத்தரப்படும்.

பொது முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,
இல. 50, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு 02.

வளமான வாழ்விற்கு மின்சாரம்.....

நீங்கள் இப்போது உங்கள் மின்சார கட்டணங்களை www.ceb.lk எனும் இணையதளத்தில் செலுத்தலாம்.

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வருமானத்தினால் நிதியிடப்படுகிறது
தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல்

அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு டயர்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்கான அழைப்பு

1. தேசிய போட்டி ரீதியலான விலைக்கோரலின் ஊடாக அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவிற்கு டயர்களை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனு ஆவணத்தின் தரப்பட்டுள்ளன.
2. ஆர்வம் கொண்ட தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் பண்டாரகம, வல்கம, கஹடகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, பெறுகைப் பிரிவில் இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 038-2289122, தொலைநகல்: 038-2289560) என்பதுடன் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
3. ஒவ்பொரு விலைமனு ஆவணத்திற்காகவும் மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா + ஏற்புடைய வரிகள் சகிதம் செலுத்தி 2023 பெப்ரவரி 13ஆம் திகதி முதல் 2023 மார்ச் 02ஆம் திகதி வரையில் (வார இறுதி நாட்கள் மற்றும் போயா நாட்கள் தவிர்ந்த) 09.00 மணித்தியாலம் 14.30 மணித்தியாலம் வரையில் பண்டாரகம, வல்கம, கஹடகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, பணிப்பாளருக்கு (EOM&M பிரிவு) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023 மார்ச் 02ஆம் திகதி 14.30 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னர் ஒன்றில் பணிப்பாளர் (EOM&M பிரிவு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹடகஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும் தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'RDA/EOM&M/PRC/2023/MECH/04' எனத் தயவு செய்து குறிப்பிடவும்.
5. பண்டாரகம, வல்கம, கஹடகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, (EOM&M பிரிவு) பணிப்பாளர் அலுவலகத்தில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

தலைவர்
EOM&M பிரிவின் பெறுகைக் குழு,
C/O பணிப்பாளர் (EOM&M பிரிவு),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கஹடஹஹேன, வல்கம, பண்டாரகம.

The Housewives' companion Classifieds on Daily News

இலங்கை ஏ அணியிடம் இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு இலகு வெற்றி

சோபிக்கத் தவறினார் அஞ்சலோ மத்தியூஸ்

இலங்கை ஏ அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து லயன்ஸ் அணி 4 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது. இதில் ஒருநாள் அணிக்கு திரும்பியிருக்கும் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் சோபிக்கத் தவறினார்.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று (15) நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை ஏ அணி 25 ஓட்டங்களுக்கே முதல் 4 விக்கெட்டுகளை பறிகொடுத்தது. குறிப்பாக ஆரம்ப வீரராக வந்த அவிஷ்க பெர்னாண்டோ டக் அவுட் ஆனதோடு, மத்தியூஸினால் 13 ஓட்டங்களையே பெற முடிந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஒருநாள் அணிக்கு தேர்வு செய்வதற்காக கருத்தில் கொள்ளப்பட்டிருக்கும் மத்தியூஸ் 17 பந்துகளுக்கு முகம்கொடுத்து 2 பௌண்டரிகளை அடித்த நிலையிலேயே தனது விக்கெட்டை பறிகொடுத்தார்.

இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அணித் தலைவர் சதீர சமரவிக்ரம மற்றும் சஹன் ஆரச்சிகே 121 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர்.

இதில் சிறப்பாக ஆடிய சதீர 86 பந்துகளில் 4 பௌண்டரிகளுடன் 74 ஓட்டங்களை பெற்றதோடு ஆரச்சிகே 80 பந்துகளில் 57 ஓட்டங்களை பெற்றார். தொடர்ந்து வந்த சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்ன 48 பந்துகளில் 5 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 52 ஓட்டங்களை குவித்தார்.

இதன்படி இலங்கை ஏ அணி 45.1 ஓவர்களில் 230 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. இங்கிலாந்து லயன்ஸ் அணி சார்பில் சகிப் மொஹமட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு சாம் குக் மற்றும் ஜகப் பேதல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து லயன்ஸ் அணி நெருக்கடி இன்றி ஓட்டங்களை சேகரித்தது. இதன்மூலம் அந்த அணி 40.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 231 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீரர் ஜகப் பேதல் (50), சாம் ஹெயின் (52) அரைச்சதம் பெற்றனர். துஷான் ஹேமன்த 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த வெற்றியுடன் மூன்று போட்டிகளைக் கொண்ட உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடரில் இங்கிலாந்து லயன்ஸ் அணி 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

இதன் இரண்டாவது ஒருநாள் போட்டி வரும் சனிக்கிழமை (18) இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நியூசிலாந்து செல்ல இலங்கை அணியினர் ரத்தலவில் பயிற்சி

இலங்கை அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கு தயாராகும் வகையில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள ரத்தல கிரிக்கெட் மைதானம் தயார்படுத்தப்பட்டுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 4200 அடி உயரத்தில் இருக்கும் இந்த மைதானத்தில் தற்போது 4 துடுப்பாட்ட களங்கள் மற்றும் 5 பயிற்சிக் களங்கள் அமைக்கப்பட்டிருப்பதோடு பயிற்சிக்கான ஏனைய வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதன்படி இன்று (16) ரத்தல செல்லும் தேசிய அணி ஒரு வாரம் பயிற்சி பெற்ற பின்னர் நியூசிலாந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. இங்கு உள்ள சூழல் நியூசிலாந்து நாட்டை ஒத்திருப்பதாலேயே இந்த பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் இங்கு நடத்தப்பட்ட பயிற்சிப் போட்டி மூலம் தேசிய மட்டப் போட்டிகளுக்கு இந்த மைதானம் பொருத்தமானது என்று தீர்மானிக்கப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மகளிர் டி20 உலகக் கிண்ணம்:

முக்கிய போட்டியில் ஆஸியுடன் இலங்கை அணி இன்று மோதல்

மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் சாமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை அணி தீர்க்கமான போட்டியில் இன்று நடப்புச் சம்பியன் அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவுள்ளது.

தென்னாபிரிக்காவின் கெபர்ஹாவில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இன்று (16) மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தின் குழு ஒன்றில் ஆடும் இலங்கை அணி முதல் இரு போட்டிகளிலும் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கா மற்றும் பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தியது. எனினும் ஆஸி. அணி தனது முதல் இரு போட்டிகளையும் இலகுவாக வென்று அதிக நிகர ஓட்ட விகிதத்துடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஆஸி. அணியை போன்றே 4 புள்ளிகளைப் பெற்றிருக்கும் இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்நிலையில் இலங்கை அணிக்கு குழு நிலையில் மேலும் இரண்டு போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் ஒன்றில் வென்றாலும் அரையிறுதிக்கு முன்னேற முடியும்.

கிளிநொச்சியில் இலவச நீச்சல் பயிற்சி முகாம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் கிளிநொச்சி நீர் விளையாட்டுச் சங்கத்தால் ஐந்து நாள் இலவச நீச்சல் பயிற்சி முகாம் நடைபெற்றது.

கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களைச் சேர்ந்த 22 பாடசாலைகளிலிருந்தும், சில முன் பள்ளிகளிலிருந்தும் 180க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) நிறைவடைந்த இந்த பயிற்சி முகாமை பகீரதன் நெறிப்படுத்தியதோடு பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிற்சி நிறைவு நாள் நிகழ்வில் ஏற்கனவே பயிற்சிகளை பூர்த்தி செய்த மாணவர்களிடையே நீச்சல் போட்டிகள் நடத்தப்பட்டன.

கொழும்பு சாஹிரா இன்னிங்ஸ் தோல்வி

டி.எஸ் சேனநாயக்க கல்லூரிக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான இரண்டு நாள் போட்டியில் கொழும்பு சாஹிரா கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 40 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்தது.

கொழும்பு, டி.எஸ் சேனநாயக்க கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (14) முடிவுற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டி.எஸ் சேனநாயக்க அணி செனுர சில்வாவின் சதத்துடன் (103) 9 விக்கெட் இழப்புக்கு 301 ஓட்டங்களை பெற்ற நிலையில் முதல் இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது.

இந்நிலையில் தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த சாஹிரா கல்லூரி 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை பலோ ஒன் செய்தபோது 124 ஓட்டங்களுக்கே சுருண்டது.

உலகக் கிண்ண வலைப்பந்து: இலங்கையின் பயிற்சி ஆரம்பம்

தென்னாபிரிக்காவின் கேப் டவுன் நகரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண வலைப்பந்து போட்டிக்காக இலங்கை அணியின் பயிற்சி இன்று (16) ஆரம்பமாகவுள்ளது.

இந்த ஆண்டு உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி குழு நிலையில் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்கா, வேல்ஸ் மற்றும் ஜமைக்க அணிகளை எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில் இலங்கை குழாத்தில் இருக்கும் 18 வீராங்கனைகளும் இன்று பயிற்சிகளை ஆரம்பிப்பதாக அந்த அணியின் வீராங்கனை கயானி திசானாயக்க தெரிவித்தார். "வேல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற நாம் கடுமையாக பயிற்சி பெற வேண்டும். அந்தப் போட்டியில் கிடைக்கும் முடிவின் அடிப்படையிலேயே தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறும் எதிர்பார்ப்பை வைத்திருக்க முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ண வலைப்பந்து போட்டி வரும் ஜூலை 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

சர்வதேச செய்திகள்

மார்பர்க் தொற்று:

ஈக்வடோர் கினியாவில் கண்காணிப்பு தீவிரம்

அதிகம் பரவக் கூடியதும் உயிராபத்துக் கொண்டதுமான எபோலா வைரஸை ஒத்த மார்பர்க் தொற்று ஈக்வடோரியல் கினியாவில் பரவி இருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து அங்கு கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த வைரஸினால் அந்த ஆபிரிக்க நாட்டில் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இந்த வைரஸுக்கு எதிராக தடுப்பூசி வழங்குவது மற்றும் சிகிச்சைகள் தொடர்பில் பேசுவதற்கு மார்பர்க் தடுப்பூசி கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் சுகாதார அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை (14) அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

"கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது" என்று ஈக்வடோரியல் கினியாவுக்கான உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி ஜோர்ஜ் அமே தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைப்பு சுகாதார அவசர நிபுணர்களை அந்த நாட்டுக்கு அனுப்பி இருப்பதோடு, நோய்த் தொற்று முகாமைத்துவம், நோய் தடுப்பு, ஆய்வுகூடம் மற்றும் அபாய தொடர்பாடல் செயற்பாடுகளும் அங்கு மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஈக்வடோரியல் கினியாவின் கீ–நிடெம் மாகாணத்தில் அறியப்படாத இரத்தக்கசிவு காய்ச்சல் சிலருக்கு பரவியது கண்டறியப்பட்டதும், 200க்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இந்தத் தொற்று காரணமாக அண்டை நாடான கெமரூனும் எல்லைப்பகுதியில் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியது.

வௌவால்களிலிருந்து பரவும் மார்பர்க் வைரஸ் நோய் 88 வீதம் இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. இதற்கு சிகிச்சையளிக்க அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள் அல்லது வைரஸ் தடுப்பு சிகிச்சைகள் எதுவும் இல்லை.

துருக்கி, சிரிய பூகம்பம்: பலி 41,000ஐ தாண்டியது

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 41,000ஐ தாண்டியுள்ளது.

கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெற்ற பூகம்பம் நிகழ்ந்து நேற்றுடன் பத்து நாட்கள் பூர்த்தியான நிலையில் 222 மணி நேரத்தின் பின்னர் துருக்கியின் கரமன்மராஸில் 42 வயது பெண் ஒருவர் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அதியமன் நகரில் நேற்று 77 வயது பெண் ஒருவரும் இடிபாடுகளில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளார். இடிந்து விழுந்த ஏழு மாடி கட்டடத்திற்குள் இருந்த பாத்மா குகோர் என்ற அந்தப் பெண் மீட்கப்பட்டதாக துருக்கியின் அனடொலு செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இவ்வாறு எட்டுப் பேர் இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்டகப்பட்டனர்.

எவ்வாறாயினும் 7.8 ரிக்டர் அளவு பயங்கர பூகம்பம் மற்றும் சக்திவாய்ந்த பின் அதிர்வுகள் நிகழ்ந்து ஒருவாரம் கடந்துள்ள நிலையில் இடிபாடுகளில் இருந்து உயிருடன் மீட்கப்படுவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது. இதனால் பல பகுதிகளிலும் மீட்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகள் முடிவுக்கு வருவதாகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிட வசதிகளை வழங்குவதில் அதிக அவதானம் செலுத்தப்படுவதாகவும் ஐ.நா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சிரியா மற்றும் துருக்கி இரு நாடுகளிலும் உறையும் குளிருக்கு மத்தியில் உயிர் தப்பியவர்கள் வீடற்ற நிலையில் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர். துருக்கியில் பூகம்பம் தாக்கிய பிராந்தியங்களில் இருந்து கிட்டத்தட்ட 195,962 பேர் வெளியேற்றப்பட்டிருப்பதாக துருக்கி அனர்த்த மற்றும் அவசர முகாமைத்துவ தலைமை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 82 நாடுகளின் 9,046 வெளிநாட்டினர் பணியாற்றி வருவதாக துருக்கி வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. 100க்கும் அதிகமான நாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் அது தெரிவித்துள்ளது.

இந்த பூகம்பத்தில் சிரியாவில் சுமார் 9 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபை, 400 மில்லியன் டொலர் நிதி உதவிக்கான கோரிக்கையையும் விடுத்துள்ளது.

பஸ் விபத்தில் 20 பேர் பலி

தென்னாபிரிக்காவில் சுற்றுலா பஸ் வண்டி மற்றும் பணம் எடுத்துச் செல்லும் கவச வாகனம் ஒன்று நேருக்கு நேர் மோதிய விபத்தில் 20 பேர் கொல்லப்பட்டு மேலும் 68 பேர் காயமடைந்துள்ளனர்.

பாலம் ஒன்றில் இந்த விபத்து இடம் பெற்றதை அடுத்தே பஸ் வண்டி கீழ் உள்ள ஆற்றில் விழுந்துள்ளது.

"வீதியிலும் ஆற்றிலும் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன" என்று துணை மருத்துவ நிறுவனமாக ஈ.ஆர்24 தெரிவித்தது.

கடந்த திங்கட்கிழமை இரவு லிம்போபோ மாகாணத்தின் மகாடோவில் உள்ள என்1 நெடுஞ்சாலையில் இடம்பெற்ற இந்த விபத்துக்கான காரணத்தை கண்டறிய விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் பூகம்பம்

நியூசிலாந்தின் வெளிங்கடன் நகருக்கு அருகில் நேற்று (15) 6.1 ரிக்டர் அளவில் பூகம்பம் பதிவாகியுள்ளது. அது பயங்கரமானதும் சக்திவாய்ந்ததாகவும் இருந்தது என்று சிலர் விபரித்துள்ளனர்.

பூகம்பம் காரணமாக 30 விநாடிகள் வரை வெளிங்டன் நகர் குலுங்கியுள்ளது. பரபரரூமுவின் வடமேற்காக 50 கி.மீ தொலைவில் 45 கிலோமீற்றர் ஆழத்தில் இரவு 7.38 மணிக்கு இந்த பூகம்பம் ஏற்பட்டதாக புவியியல் ஆலோசனை நிறுவனமான ஜியோநெட் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.